1 தீமோத்தேயு

தீமோத்தேயுவுக்கும், தீத்துவுக்கும் பவுல் எழுதிய நிருபங்கள் "ஆயர் மடல்கள்" என அழைக்கப்படுகின்றன. ஏனெனில், இவ்விருவரையும் போதகப்பணியில் ஊக்குவிக்கவும், இவர்களுக்கு அறிவுரைகள் வழங்கவும் இந்நிருபங்களைப் பவுல் எழுதினார். இவை பவுலின் செயல்முறை ஞானத்தை விளங்கப் பண்ணுகிறது. வளரும் சபையின் தேவைகளைச் சந்திக்கும்படி, தனது சக ஊழியர்களுக்கு அவர் எவ்விதம் ஆலோசனை அளித்து, அவர்களுக்கு உதவி செய்தார் என்பதையும் வெளிப்படுத்துகின்றன.

பவுல் தனது ஓட்டத்தை முடிக்கிறார்

ரோமாபுரியில் நடந்த பவுலின் விசாரணையின் முடிவையோ அல்லது அதற்குப் பிற்பாடுள்ள வேறெந்த தகவலையோ தராமலே அப்போஸ்தலர் நடபடிகள் முடிவடைகிறது. இருப்பினும், ஆயர் மடல்களில் காணப்படும் சில குறிப்பிட்டக் குறிப்புகள், விசாரணைக்குப் பிறகு அவர் விடுதலையாக்கப்பட்டு, மீண்டும் சுவிசேஷப் பயணம் செய்யக்கூடியவராயிருந்தார் என்பதைச் சுட்டிக் காட்டுகின்றன (2 தீமோத்தேயு 4:16,17). அவர் விடுதலையாக்கப் பட்டிருந்த சமயத்தில், மக்கெதோனியா (1 தீமோத்தேயு 1:3), கிரேத்தா (தீத்து 1:5), நிக்கொப்போலி (3:12), கொரிந்து, மிலேத்து (2 தீமோத்தேயு 4:20), துரோவா (4:13) ஆகிய இடங்களுக்குப் பிரயாணஞ் செய்தார்.

மூன்று ஆயர் மடல்களில் கடைசியில் எழுதப்பட்டது 2 தீமோத்தேயு ஆகும். இதை எழுதின சமயத்தில் பவுல் மீண்டும் காவலில் வைக்கப்பட்டு, சீக்கிரம் தன் ஓட்டத்தை முடிக்கப் போவதை எதிர்நோக்கியிருந்தார் (4:6,7). ஏறக்குறைய கிபி. 64-இல் ரோம சக்கரவர்த்தியாகிய நீரோ என்பவரால் பவுல் சிறைச்சேதம் பண்ணப்பட்டிருக்கலாம். இவர் எந்த விதத்தில் கொல்லப்பட்டார் என்பது அறியப்படவில்லை. இருப்பினும் கிறிஸ்துவில் அவரது வாழ்க்கை மகிமையான ஜெயமாயிருந்தது. தமஸ்கு வழியின் அனுபவத்திற்குப் பின்னர் முழுமையான அர்ப்பணிப்புடன் அவர் தனது இரட்சகரை சேவித்தார். கப்பற்சேதம், அடிகள், கல்லெறி, உபத்திரவம், சிறைவாசம் போன்ற எல்லாவற்றின் மத்தியிலும் "பூமியின் கடைசிபரியந்தமும்" இரட்சிப்பின் சுவிசேஷத்தை அவர் சுமந்து சென்றார். "வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி" அவர் பிரயாசப் பட்டதினால், அப்பொழுது அறியப்பட்டிருந்த உலகம் எங்கும் சபைகள் நிறுவப்பட்டன.

தீமோத்தேயு, தீத்துவின் ஊழியம்

யூதத் தாய்க்கும், புறஜாதித் தகப்பனுக்கும் பிறந்த தீமோத்தேயு என்னும் வாலிபன், அவனை அறிந்திருந்த விசுவாசிகளால் நற்சாட்சி பெற்றிருந்தான் (அப்போஸ்தலர் 16:1-3). தனது இரண்டாம் சுவிசேஷப் பிரயாணத்தில் பவுல் இவனைத் தன்னுடன் அழைத்துச் சென்றார். இதற்குப் பின்பு தொடர்ந்து பவுலுடன் கூடச் செல்லலானார். பவுல் எபேசுவில் மூன்று வருடங்கள் தங்கியிருந்தபொழுது இவன் அவருக்கு உதவி செய்தான். தெர்பையிலிருந்து சென்ற பிரஜைகளில் ஒருவனாகத் தீமோத்தேயு பவுலுடன் எருசலேமுக்குச் சென்றான் (அப்போஸ்தலர் 20:4).

1 தீமோத்தேயு

முதல் தடவை பவுல் ரோமாபுரியில் காவலில் இருந்தபொழுது தீமோத்தேயுவும் அவரோடிருந்தான் (கொலோசெயர் 1:4, பிலேமோன் 1) பவுல் காவலிலிருந்து விடுதலையாகி எபேசுவுக்குச் சென்றபொழுது, ரோமாபுரியிலுள்ள சபைகளைக் கண்காணிக்கும் படி தீமோத்தேயுவை அங்கேயே இருக்கும்படிச் செய்தார் (1 தீமோத்தேயு 1:3). பவுல் மரிப்பதற்குக் குறுகிய காலத்துக்கு முன் ரோமாபுரியில் பவுலுடன் இவன் சேர்ந்து கொண்டான் (2 தீமோத்தேயு 4:9,21). எபிரெயர் 13:23-இன் படி தீமோத்தேயுவும் சில காலம் காவலில் இருந்தான்.

தீத்து: இவன் அந்தியோகியாவில் கிறிஸ்தவன் ஆனான். புறஜாதிகளை விருத்தசேதனம் பண்ணுவது பற்றிய கருத்து மாறுபாடு எழுந்தபோது, எருசலேமிலுள்ள சபைத் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்கும்படி பவுல் சென்றபோது தீத்துவையும் தன்னுடன் கூட்டிச் சென்றார் (கலாத்தியர் 2:1,3). கொரிந்து சபையில் கஷ்டங்கள் உண்டானபொழுது, அங்குள்ளப் பிரச்சினைகளைத் தீர்க்கும்படி பவுல் இவனை அனுப்பினார் (2 கொரிந்தியர் 7:6-16). எருசலேமிலுள்ள பரிசுத்தவான்களுக்காகக் காணிக்கை சேகரிக்கப்பட்ட பொழுது தீத்துவும் இதில் ஈடுபட்டிருந்தான் (2 கொரிந்தியர் 8:19-21).

தான் ஊழியஞ் செய்து வந்த சபைகளிலும், அப்போஸ்தலனாகிய பவுலினாலும் தீத்து பெரிதும் மதிக்கப்பட்டிருந்தான் (உடன் ஊழியன் எனப் பவுல் அழைத்தார்) (2 கொரிந்தியர் 8:6, 16-26). பவுல் விடுதலையாகி கிரேத்தாவுக்குச் சென்றபொழுது, அல்த்தெமா அல்லது தீகிக்கு வரும்வரை அங்குள்ள ஊழியங்களைக் கவனிக்கும்படி தீத்துவை அங்கு விட்டு வைத்தார் (தீத்து 1:5;3:12).

ரோமாபுரியில் பவுல் இரண்டாம் முறை காவலில் இருந்தபொழுது தீத்து ஒருவேளை பவுலுடன் இருந்திருக்கலாம். அதன் பின்பு தீத்து தல்மாத்தியாவுக்குப் போய்விட்டான் (2 தீமோத்தேயு 4:10).

தீமோத்தேயுவுக்கு எழுதின முதலாம் நிருபம்

பவுல் காவலிலிருந்து விடுதலையான பின்பு எபேசுவுக்குச் சென்றார். இவர் தொடர்ந்து பயணங்களை மேற்கொண்டபொழுது, அங்குள்ள ஊழியங்களைக் கவனிக்கும்படி தற்காலிகமாகத் தீமோத்தேயுவை அங்கிருக்கும்படிச் செய்தார். பவுல் சீக்கிரமாய் எபேசுவுக்குத் திரும்பும்படி திட்டமிட்டார். ஒரு வேளை தாமதிக்கக் கூடும் என்று எண்ணினார். (1தீமோத்தேயு 3:14,15). அவர் எபேசுவில் இல்லாத சமயத்தில், அங்குள்ள சூழ்நிலைகளுக்கு ஏற்றத் தெளிவான வழிமுறைகளைத் தீமோத்தேயு அறிந்திருக்க வேண்டுமெனப் பவுல் விரும்பி இந்த நிருபத்தை எழுதியிருக்கலாம்.

கள்ளப்போதகர்களைப் பற்றிய புத்திமதிகளைப் பவுல் முதற்கண் கூறியதுடன், பொதுவான ஆராதனை (2:1-15), சபை கண்காணிப்பு (3:1-16), மற்றும் விதவைகள், மூப்பர்கள், அடிமைகள் (5:1-6:2), ஐசுவரியவான்கள் (6:17-19) ஆகியோரைப் பற்றிய ஆலோசனைகளையும் கூறினார். சொந்த ஆவிக்குரிய ஜீவியத்திலும், ஊழியத்திலும் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமென்ற ஆலோசனைகளைத் தீமோத்தேயுவுக்குப் பதில் எழுதினார் (1:18-20; 4:1-16; 6:3-16,20,21). இந்நிருபம் பவுலுக்குத் தீமோத்தேயுவிடமிருந்த நெருங்கிய தொடர்பைக் காண்பிக்கிறது. அதே வேளையில், அவருடைய மடலில் அதிகாரத் தோரணையும் உள்ளது.

1 தீமோத்தேயு

தான் ஆவிக்குரிய அனுபவங்களைப் பெற்றுக் கொண்ட விதத்தை அநேகந் தடவை பவுல் தீமோத்தேயுவுக்கு நினைப்பூட்டுகிறார் *(1:18; 4:14; 6:12,20)*. எபேசுவில் கடின சூழ்நிலையில் விடப்பட்டிருந்த தீமோத்தேயுவை அவனது ஊழியத்திலும், அவனுடைய அழைப்பைப் புதுப்பிப்பதிலும் ஊக்குவிக்க வேண்டியது அவசியம் என்பதைப் பவுல் உணர்ந்திருக்கக் கூடும்.

1தீமோத்தேயு: தேவமனுஷனுக்கான ஆலோசனைகள்

1. தனிப்பட்ட எச்சரிப்பும், வேண்டுகோளும் *(1:1-20)*.
2. சபை ஒழுங்கு பற்றிய அறிவுரைகள் *(2:1-3:16)*.
3. ஊழியத்திற்கான விசேஷித்த ஆலோசனை *(4:1-16)*.
4. சபையில் அந்நியோந்நியத்துக்காக வழிகாட்டும் ஆலோசனைகள் *(5:1-6:2)*.
5. முடிவான பொறுப்புகள் *(6:3-21)*.

பவுலினால் வரையறுக்கப்பட்ட ஊழியக் கருத்துக்களும், செயல்முறை விதிகளும், அவற்றை முதலில் பெற்றுக் கொண்ட தீமோத்தேயுவுக்கு எவ்வளவு பிரயோஜனமாயிருந்ததோ அதைப் போன்று, இன்றைக்கிருக்கும் தேவமனுஷருக்கும் இது மிகவும் பயனுள்ளதாகும். ஆதலால், சொந்த ஜீவியத்தை ஆராய்ந்து பார்த்து சரிசெய்யும் பொருட்டு இவற்றை அவ்வப்போது ஆய்வு செய்ய வேண்டும்.

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

முன்னுரை

அ. இந்த நிருபத்தின் ஆரம்பத்தில், பவுல் தீமோத்தேயுவிடம், "வேற்றுமையான உபதேசங்களைப் போதியாதபடிக்கும்,...... கட்டுக்கதைகளையும், முடிவில்லாத வம்சவரலாறுகளையும் கவனியாதபடிக்கும் நீ சிலருக்குக் கட்டளையிடு...." என்று கூறினார் (வசனம் 3-4). எபேசு சபையில் இருந்த நியாயப்பிரமாணப் போதகர்கள் பவுலின் சுவிசேஷமாகிய, "கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தினால் மட்டும் இரட்சிப்பு" என்பதைத் திரித்துக் கூறுவதுமட்டும் அல்லாமல், பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்தையும் புரட்டி, தகுதியற்ற முறைகளிலும் பயன்படுத்தினார்கள் (வசனம் 8). இது இந்த மனிதர்கள் விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள் என்பதைக் காட்டுகிறது (வசனம் 6).

ஆ. அவருடைய அறிவுரைகளை, அவன் பின்பற்றுவானாகில், இந்த ஊழியத்திலும் அவன், செய்யும்படியாக ஆரம்பத்தில் அழைக்கப்பட்ட ஆவிக்குரிய போராட்டத்தில் தொடர்ந்து இருக்கவும் முடியும் (வசனம் 18; 1தீமோத்தேயு 4:14; 2தீமோத்தேயு 1:6; மற்றும் அப்போஸ்தலர் 16:1-3 வசனங்கள்). இது அவனுடைய விசுவாசம் மற்றும் நல்மனச்சாட்சியையும் (தேவனுக்கு முன்பாக) பற்றிக் கொள்ள உதவி செய்யும் என்றும் அவர் அவனுக்குச் சொல்லுகிறார்.

1. விசுவாசத்தையும் நல்மனச்சாட்சியையும் தள்ளிவிட்டு, விசுவாசமாகிய கப்பலை சிலர் சேதப்படுத்துகிறார்கள் (1தீமோத்தேயு 1:19).

அ. "விசுவாசத்தைப் பற்றிக் கொண்டு" விசுவாசத்தை "பற்றிக் கொள்வது" என்பது அதை நிரந்தரமாக நமக்குச் சொந்தமாக்கிக் கொள்வது தொடர்ந்து விசுவாசத்தைப் பற்றிக் கொள்வதில் நிலைத்திருப்பது. மனதில் இந்த எண்ணத்தை, (ஆவிக்குரிய) உனக்கே சொந்தமானதாக உறுதியாகக் காத்துக் கொள்வது. இங்கே விசுவாசம் என்றால் பாவத்திலிருந்தும் அதனுடைய விளைவுகளிலிருந்தும் உன்னை காப்பாற்ற கிறிஸ்துவைச் சார்ந்திருப்பது என்று பொருள்படும். இவ்வாறு சார்ந்திருப்பதில் நிலையாக இருக்கவேண்டும்.

ஆ. "நல்மனச்சாட்சி" "மனச்சாட்சி" என்பது நம்முடைய சுயத்தைப் பற்றிய அறிவோடு, வேதத்தில் தொகுத்துக் கூறப்பட்ட வசனங்களிலுள்ள கருத்துக்கள் மற்றும் கற்பனைகளோடு தொடர்புடையது. இது சிந்தனை வழியில் சன்மார்க்க ரீதியில் நன்மை எது என்றும், தீமையானது எது என்றும் வகைபறுக்கும். அதன்பின், வேதத்திலுள்ள சன்மார்க்க அளவுகளில் உறுதியாக்கப்பட்ட நடத்தையை வரவேற்று சிபாரிசு செய்து அங்கீகரிக்கிறது. ஆனால் இதற்கு எதிர்மாறான நடத்தையைப் புறக்கணித்து விடுகிறது. அல்லது அதனுடைய குறிக்கோளைத் தவறவிடுகிறது (ரோமர் 2:15; 9:1; 2கொரிந்தியர் 1:12; 1தீமோத்தேயு 3:9).

இ. "நல்மனச்சாட்சியுடையவனாக ஒருவன் இருக்கவேண்டுமானால்,

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

தேவனுடைய வார்த்தை மற்றும் அவனுக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரின் சன்மார்க்க அளவுகளுக்கு அவன் தன்னை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த சன்மார்க்க அளவுகளின் நடத்தைக்கு நேர்மாறான விதமான நடத்தையில் தான் இருப்பதை (அல்லது அப்படிப்பட்ட நடத்தையை போதிப்பதாக) காண்பானேயாகில், அவன் மனந்திரும்பி அவனுடைய நடத்தையை (போதனையை) தேவனுக்கு முன்பாக மறுபடியும் ஒரு நல்ல மனச்சாட்சி உடையவனாக இருக்கத்தக்கதாக மாற்றிக் கொள்ள வேண்டும்.

ஈ. இந்த நல்மனச்சாட்சியை சிலர் தள்ளிவிட்டு, அவ்வப்போது, சில விசுவாசிகள் அவர்களுடைய விசுவாசத்தைப் புறக்கணித்து, அவர்களுடைய நல்மனச்சாட்சியையும் இழந்து விடுகிறார்கள். இவைகளை அவர்கள் வெளியே தள்ளி தங்களிடமிருந்து தூக்கி எறிந்து விடுகின்றனர். அவர்கள் அவைகளைத் தள்ளி விடுகின்றனர், தங்களைவிட்டு முற்றிலும் விலக்கி விடுகின்றனர். தங்களுடைய பார்வையிலிருந்து புறக்கணித்துத் தள்ளி விடுகின்றனர்.

உ. "விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்" "கப்பல்சேதம்" என்றால் கப்பலைக் கடலில் ஓட்டிச் செல்ல உதவும் கருவிகளை இழந்து கடலில் திசை தப்பி அலையும் நிலை; கப்பல் கரையில் மோதி முழுவதும் உடைந்து போகும் நிலை; வெளியில் தெரியான பாறை முதலானவைகளின் மீது பலமாக மோதி சிதறிப்போதல் அல்லது பலத்த காற்று மற்றும் பலமான அலைகள் மோதி அடித்து உடைந்து சிதறிப்போவது (அப்போஸ்தலர் 27:39-41). பாவத்திலிருந்தும் அதனுடைய பலனின் மீதிலிருந்தும் விடுவிக்கப்படுவதற்கு கிறிஸ்துவின் மீது சார்ந்திருக்கும் அந்த சம்பந்தத்தில் சில விசுவாசிகளுக்கு இதுவே நடைபெறுகிறது.

ஊ. ஆனால் நாம் கூறினது போல, கீழ்க்கண்டவாறு செய்வதின்மூலமாக அவர்களுடைய மனச்சாட்சி சுத்திகரிக்கப்பட்டு, அவர்களுடைய விசுவாசத்தை மறுபடியும் பெற்றுக் கொள்ளுவார்கள்!

1. மறுபடியும் கிறிஸ்துவைக் கிட்டிச் சேர்வது.

2. அவர்களுடைய பாவத்தையும், எதிர்த்து நின்ற காரியத்தையும் அறிக்கையிடுவது.

3. இரத்தம் சிந்தப்பட்ட கிறிஸ்துவின் பலியினால் அவர்கள் கழுவப்படுவது (எபிரெயர் 9:14; 10:22; 1யோவான் 1:9; அத்துடன் யாக்கோபு 4:7-10).

2. வஞ்சிக்கிற ஆவிகளையும், பிசாசுகளினால் போதிக்கப்பட்ட கருத்துக்களையும் பின்பற்றுவதினால் சிலர் விசுவாசத்தை விட்டுவிட்டார்கள்.

அ. "...ஆவியானவர் வெளிப்படையாகச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே..." பவுல், பரிசுத்த ஆவியானவரிடமிருந்து நேரடியாகப் பெற்ற வெளிப்பாட்டைப்பற்றி ஒருசமயம் பேசக் கூடும். ஆகிலும், சுவிசேஷங்களிலும், அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்திலும்,

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

புதிய ஏற்பாட்டில் அவர் எழுதியிருக்கும் நிருபங்களிலும், இதைப்பற்றிய குறிப்புகள் இருக்கின்றன (மத்தேயு 24:11; மாற்கு 13:22; அப்போஸ்தலர் 20:29-30; 2 தெசலோனிக்கேயர் 2:3). "பிற்காலங்களில்" என்பது ஒரு மனிதனாகக் கிறிஸ்து முதலாவது தோன்றினதிலிருந்து ஆரம்பமாகி, தற்போதுள்ள காலத்தைக் குறிக்கும் (எபிரெயர் 1:1). இந்த "பிற்காலங்கள்", கிறிஸ்து, அவருடைய பரிசுத்தவான்களோடு வந்து, எருசலேமிலிருந்து அவருடைய ஆயிர வருட அரசாட்சியை நிலைநாட்டும் போது முடிவடையும்!

ஆ. "சிலர்......விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்". "விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்" என்றால் விசுவாசத்தை உன்னை விட்டு விலக்கி விடுவது; பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் இரட்சிக்கப்பட்ட கிறிஸ்துவைச் சார்ந்திருப்பதை எதிர்த்து கலகம் செய்வது; கைவிட்டு ஓடிப்போகும் ஒரு மனிதனாயிருப்பது; அறிந்தும், தீர்மானத்துடன் வேண்டுமென்றே, விசுவாசத்திலிருந்து தங்களை விலக்கிக் கொள்வது.

இ. "சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து...." "வஞ்சிக்கிற ஆவிகள்" மற்றும் "பிசாசுகள்" என்பவைகள் சாத்தான், தேவனுக்கு விரோதமாகக் கலகம் செய்த போது, அவனைப் பின்பற்றின பொல்லாத, அசுத்த ஆவிகளைக் குறிக்கும்.

ஈ. 'செவிகொடுத்து' என்றால் மனதில் நன்றாகப் பதிய வைத்துக் கொள்வது; அதை ஒட்டிச் சார்ந்து கொள்வது; உன்னுடைய வாழ்க்கையில், வஞ்சிக்கிற ஆவிகளால் (பிசாசுகளால்) போதிக்கப்பட்ட காரியங்களைச் செயற்முறைப்படுத்துவது. இந்த பிசாசுகளினால் வஞ்சிக்கப்பட்டும், தீச்செயல்கள் செய்ய ஏவப்பட்டு அதற்குக் கீழ்ப்படிந்தவர்கள், அவைகளுடைய மாணாக்கர்கள் மற்றும் பின்பற்றுகிறவர்களுமாயிருப்பார்கள்.

உ. "வஞ்சிக்கிற ஆவி" நடத்தை விதிகளைப் பரப்பும் ஊரைச் சுற்றித் திரிகிறவன்; மனிதர்களை தீச்செயல்கள் செய்ய வற்புறுத்தவும் அவர்களை பொய்யான மத கோட்பாடுகளுக்கு (போதனைகள்) உட்படப்பண்ணவும், தீர்மானத்துடன் இருக்கும், மதத்தைப் பரப்பும் ஒருவன். அவனை வரவேற்கும் ஒரு விசுவாசியைக் கண்டு, அவனை மாய்மாலக்காரப் பொய்யனாக மாற்றி, அவனுடைய பொய்யான கொள்கைகளைப் போதிக்கிறவனாகப் பயன்படுத்துகிறான். அவர்களுடைய பொய்யான போதனைகளுக்கு பவுல் இரண்டு உதாரணங்களைக் கொடுக்கிறான்:

1. மனிதர்களை விவாகம் பண்ணாதிருக்கவும்.

2. சிலவகையான போஜன பதார்த்தங்களை விலக்க வேண்டும் என்று கட்டளையிடுவார்கள் (1தீமோத்தேயு 4:2-3). இவைகள் இரண்டும் சரீரத்தைக் கடுமாக ஒடுக்குவது மற்றும் பொய்யான துறவரத்திற்குரிய கருத்துக்களாக இருக்கிறது.

ஊ. ஆகிலும், சபைகளில் இது அடிக்கடி நடைபெறுகிற காரியமாக இருக்கிறது என்று சொல்லத் தேவையில்லை. விசுவாசிகள் ஒரே சபையில் நிலைத்திருந்து, அதற்கு முற்றிலுமாகத் தங்களை அர்ப்பணிக்க மறுத்து விடுவதாலும்

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

இயேசுவால் அனுப்பப்பட்ட ஆவிக்குரிய தலைவர்களால் சீடர்களாக்கப்பட தங்களை அனுமதிக்காமல் இருப்பதும், இதற்குக் காரணங்களாக இருக்கிறது (எபேசியர் 4:11-15). இக்காரணத்தினாலேயே, அநேக விசுவாசிகள், நீதியைப் பற்றி பிரசங்கிப்பதில், தேவனுடைய வார்த்தையின் சத்தியங்களில், எளிய ஆரம்ப காலத்திற்குரியவைகளுக்கு அப்பால் முன்னேறிச் செல்லத் தவறிவிடுகிறார்கள். நன்மையானவைகளுக்கும், தீமையானவைகளுக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தை அறியத் திறமையற்றவர்களாயிருக்கிறார்கள் (எபிரெயர் 5:12-14).

3. பண ஆசையினால் சிலர் விசுவாசத்திலிருந்து வழிவிலகி அலைகின்றனர் (1 தீமோத்தேயு 6:10)

அ. "பண ஆசை" "பணத்தை நேசிப்பது" என்பது, மிகுந்த பற்று வைப்பது; மிகவும் ஆழமாகப் பணத்தில் ஆர்வமாயிருப்பது. (அதனால் விலைக்கு வாங்கும் எல்லாவற்றின் மேலும், அதனால் ஒரு மனிதனுக்குச் செய்யகூடிய காரியங்கள் மேலும்) பணத்தை உடனடியாகத் தாமதமின்றி பெற்றுக்கொள்ள வேண்டுமென்ற நேர்மையற்ற இச்சை மற்றும் அடங்கா ஆசையை உடையவர்களாயிருப்பது.

ஆ. "எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது". "வேர்" என்பது, அதற்குரிய காரணம்; அதற்கான ஆரம்பம் மற்றும் மூலாதாரம். "எல்லாத் தீமைக்கும்" என்றால் தகுதியற்ற தீமை செய்யும் நடத்தை, காயத்தை உண்டாக்கும் நடத்தை, துன்மார்க்கமான, பொல்லாத, கெட்ட நடத்தை, என்று பொருள்படும். பண ஆசை என்பது, மிகுந்த துன்மார்க்கமான, பொல்லாத நடத்தைக்கு ஊற்றும் மூல காரணமுமாயிருக்கிறது.

இ. "சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி ....." சில விசுவாசிகள் விசுவாசத்தைவிட்டு வழிவிலகி அலைந்து திரிவதற்கும், பண ஆசை காரணமாயிருக்கிறது. நேர்பாதையிலிருந்து தவறிச் செல்ல வழிநடத்துகிறது. ஆவிக்குரிய வழியை விட்டு தவறிச் செல்வது. இவர்கள் மோசஞ் செய்யப்பட்ட உதவியற்றவர்கள் போலாகிறார்கள். மற்றும் பிசாசின் வஞ்சகப் பிடியில் சிச்சிக்கொள்ளுகிறார்கள். இப்பொழுது அவர்கள், பணத்திற்காக, முட்டாள்கள் போல கிரியை செய்கிறார்கள்.

ஈ. "அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்". மறைத்து வைக்கப்பட்ட ஒரு குழியின் மீது தொங்கும் கண்ணியின் மீது தாவிக் குதித்துத் தாண்டும் ஒரு காட்டு மிருகத்தின் படரூபம்போல் இது காணப்படுகிறது. அது அந்தக் குழிக்குள் விழுந்து, அதில் நாட்டப்பட்ட கூரான முனையுடைய கம்பியால் ஊடுருவக் குத்தப்பட்டதுபோல இருக்கிறது. இச்சையுள்ளவர்களாகவும் பணத்திற்காக பேராசை உடையவர்களுமாயிருப்பவர்களுக்கு இவ்வாறாகவே நடைபெறுகிறது.

உ. லோத்தின் மனைவி இந்த உலகத்தின் காரியங்களை நேசித்தாள். (ஆதியாகமம் 19:16,26) இந்த உலகத்திற்கு அர்ப்பணிக்கப்பட்டவளாக இருந்தாள். ஆகவே தேவனோடு இருக்கவேண்டுமென்று, அவள் அதற்குப்பின் ஆசைப்படவில்லை.

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

சோதோம் பட்டணத்தை அவள் திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தபோது, அவள் உப்புத்தூணாக மாற்றப்பட்டாள். ஒரு கிறிஸ்தவனுக்குப் பண ஆசை என்ன செய்ய முடியும் என்பதற்கு, இது ஒரு உதாரணமாக இருக்கிறது. தேவனைவிட்டு முற்றிலும் அந்நியனாக்கப்படுவதற்குரிய வித்து இதற்குள் (பண ஆசைக்குள்) இருக்கிறது.

ஊ. அமெரிக்காவில், பலவிதமான அநேக துன்மார்க்கமான காரியங்களுக்குப் பண ஆசையே வேராக இருக்கிறது. இது, அநேகரை பொய்யர்களாகவும், வஞ்சிக்கிறவர்களாகவும் மற்றும் மோசஞ்செய்கிறவர்களாகவும் மாறுவதற்குக் காரணமாயிருக்கிறது. இக்காரணத்தினாலேயே, அநேக தொழிற்சாலை, மற்றும் வியாபார அலுவலகங்களில் வேலையாட்களின் அநேக நாள் கூலியைபிடித்து வைத்துக்கொள்ளுகிறார்கள்! தேவனே எங்களுக்கு உதவிசெய்யும்! இந்தப் பாவம் அமெரிக்காவை மேற்கொண்டுள்ளது. சீனாவிலும், பழைய ரஷ்ய சாம்ராஜ்ஜித்திலும் தீவிரமாயிருக்கிறது. நமது தலைமுறையில், இது உலகத்தின் மற்ற இடங்களுக்கும் கடத்திச்செல்லப்படுகிறது. இது அநேக விசுவாசிகளை, விசுவாசத்தைவிட்டு விலகி அலைந்து திரிவதற்குக் காரணமாயிருப்பதே, இவை எல்லாவற்றிலும் மிகமோசமான காரியமாயிருக்கிறது.

4. சிலர் தங்கள் சொந்த இனத்தாருக்கும், நெருங்கிய குடும்பத்தாருக்கும் தேவையைக் கொடுக்காமலிருப்பதினால் , விசுவாசத்தை மறுதலிக்கிறார்கள். (1தீமோத்தேயு 5:8)

அ. “ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால்....” “ஒருவன்” என்பது ஒரு விசுவாசியைக் குறிக்கிறது. “விசாரிப்பது” என்றால், ஒருவரைக்குறித்து கருத்துடன் சிந்திப்பது; அதற்காகத்திட்டமிடுவது; உன் இனத்தாரின் நன்மைக்காக சிந்தனைக்கு இடம்கொடுப்பது; அவர்களுடைய வாழ்க்கையை சீராக அமைக்க அவர்களுக்கு உதவிசெய்வது, என்று இங்கே பொருள்படும் “சொந்த ஜனங்கள்” என்றால் குடும்பத்தில் குடும்பத்தைச் சேர்ந்த நெருங்கிய அல்லது தூர இனத்தான் யாராக இருப்பினும் இதனுள் அடங்குவான்.

ஆ. எனவே, ஒருவனுடைய சொந்த குடும்பத்தை அல்லது குடும்பத்தைச் சேர்ந்தவனுடைய நன்மைக்கும், பராமரிக்கப்படுவதைக் குறித்தும் சிந்திக்காமலும் திட்டமிடாமலும் இருக்கிற விசுவாசிகளை இது குறிப்பிடுகிறது. ஆகிலும் இந்தக் குறிப்பிட்ட பவுலுடைய தர்க்கம், விசேஷமாக தேவையிலுள்ள விதவைகள், அவர்களுடைய பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் பராமரிக்கப்படுவதில் தொடர்புடையது. (1தீமோத்தேயு 5:4)

இ. “விசுவாசத்தை மறுதலிக்கிறான்” ஒரு விசுவாசி, அவனுடைய நெருங்கின குடும்பத்தைப் பராமரிக்காவிட்டால், அவன் விசுவாத்தை மறுதலிக்கிறான். இது, அவனுடைய விசுவாசத்திற்கு முரணாக இருக்கிறது என்று பொருள்படும். அவன் பொருத்தனையை மீறுகிறான், புறக்கணிக்கிறான், விட்டுவிடுகிறான், கைவிடுகிறான், அத்துடன், பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும், அவனை இரட்சிக்கக் கிறிஸ்துவின் மீது சார்ந்திருக்கும் உரிமையைத் தள்ளிவிடுகிறான்.

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

ஈ. “அவிசுவாசியிலும் கெட்டவனாயிருப்பான்”இந்த மனிதர்கள், தேவனை அறிந்திருப்பதாக உரிமைபாராட்டுவார்கள். ஆனால் அவர்களுடைய கிரியைகள் (அவர்களுடைய குடும்பத்தாரைப் பராமரிக்காமல் இருப்பதினால்) மூலமாக அவரையும், அவர்களுடைய விசுவாசத்தையும் மறுதலிக்கிறார்கள். (தீத்து 1:16) கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம்முடைய சுதந்திரம், நாம் பொறுப்பற்றவர்களாக இருக்க நமக்கு இடம் கொடுக்கவில்லை. உண்மையில், இது நம்மை அதிக பொறுப்புள்ளவர்களாக மாற்றவேண்டும். நம்முடைய நெருங்கின குடும்பத்தார்கள் மற்றும் குடும்பத்தைச் சேர்ந்த தூர உறவினர்கள் மட்டும் அல்லாமல், விசுவாசிகளின் சரீரமாகிய சபை முழுவதற்கும், மற்றும் வயது சென்ற, மதிப்பிற்குரிய விதவைகளுக்கும் அவ்வாறே பொறுப்புடையவர்களாயிருக்க வேண்டும். (1தீமோத்தேயு 5:9)

உ. நம்முடைய குடும்பத்தாரைப் பராமரிப்பது தொடர்பாகப் பொறுப்பற்றவர்களாக இருப்பது, தேவனுடைய பார்வையில் நம்மை அருவெறுக்கத்தக்கவர்களாகக் காரணமாயிருப்பதுடன், எந்த நற்கிரியையும் செய்வதற்கு தகுதியற்றவர்களாக்குகிறது. “அவிசுவாசியிலும் கெட்டவனாக” என்றால், அவர்களைவிட சன்மார்க்கமாக அதிக பொல்லாதவர்களாயிருப்பார்கள், என்று பொருள்படும், அவர்களைவிட (அவிசுவாசியைவிட) தேவனுக்கு சீர்கெட்டவர்களாக இருப்பார்கள்.

ஊ. இயேசுவே நம்முடைய உன்னத எடுத்துக்காட்டு. அவருடைய வேதனை மற்றும் மரணமடையும் கடைசி மணி நேரத்தில், அவருடைய பூலோக தாய் பராமரிக்கப்படுவதைப்பற்றி, அவர் நிச்சயப்படுத்திக்கொண்டார். (யோவான் 19:25-27).

முடிவுரை

அ. விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை, இழந்துபோவதற்கு அநேகக் காரணங்கள் உள்ளது. கீழ்க்கண்ட காரணங்களினால் சிலர் விழுந்து போவார்கள்:

1. பாவம் மற்றும் தீச்செயல்களில் ஈடுபடுவது.

2. உபத்திரவம் மற்றும் இரத்தசாட்சி மரணம் ஆகியவற்றால் பயமுறுத்தப்படுவது.

3. கள்ளத் தீர்க்கத்தரிசிகளும், போதகர்களும்,

ஆ. இன்றைய நம்முடைய பாடத்தில், கீழ்க்கண்ட அட்டவணையையும் பவுல் சேர்த்துக்கொள்ளுகிறார்.

4. (தேவனுக்கு முன்பாக) சாதாரணமாக விசுவாசத்தையும், நல்மனச்சாட்சியையும் புறக்கணித்துவிடுவது.

5. வஞ்சிக்கிற ஆவிகளையும், பிசாசுகளினால் போதிக்கப்பட்ட காரியங்களையும் பின்பற்றுவதினால், விசுவாசத்தைவிட்டு விடுவது.

6. பண ஆசையின் காரணமாக விசுவாசத்தைவிட்டு விலகி அலைந்து திரிவது.

7. உறவினர்களையும், நெருங்கின குடும்பத்தினரையும் பராமரிக்காமல் இருப்பதினால் விசுவாசத்தை மறுதலிப்பது.

விசுவாசிகள், அவர்களுடைய விசுவாசத்தை இழந்து போவதற்குக் காரணங்கள் (1 தீமோத்தேயு 1:19)

இ. ஆகிலும், நீங்கள் அறியவேண்டும் என்று நான் விரும்புகிற காரியம் இதுவாக இருக்கிறது: இன்று உங்களில் யாராவது, பாவத்தினாலும், வஞ்சிக்கிற ஆவிகளினால் ஏமாற்றப்பட்டும், சிறைப்பட்டவர்களாயும் இருப்பீர்களாகில், கீழ்க்கண்டவற்றை செய்வீர்களாகில், கிறிஸ்துவின் மூலமாக தேவனுடன் சரியான தொடர்புகொள்ள உங்களால் கூடும்.

1. கிறிஸ்துவிடம் நெருங்கிச் சேரவேண்டும்.

2. உங்களுடைய பாவத்தையும், எதிர்த்து நின்ற காரியத்தையும் அறிக்கையிடவேண்டும்.

3. கல்வாரியில், அவருடைய பலியின் இரத்தத்தினால், எல்லா பாவம் மற்றும் அநீதி நீங்கும்படியாக, உங்களை சுத்திகரிக்கும்படியாக இயேசுவை அனுமதிக்கவேண்டும்.

கிறிஸ்தவ ஜெபத்தின் நோக்கமும் நன்மைகளும் (1 தீமோத்தேயு 2:1-4,8)

முன்னுரை

அ. தீமோத்தேயுவுக்கு எழுதின முதல் நிருபத்தில் ஆராதனை சம்பந்தமான அறிவுரைகள், சபை தலைவர்களுக்குரிய தகுதிகள், பொய்ப்போதனைகள், சபையிலுள்ள பல பிரிவுகளை நிர்வாகம் செய்தல், மற்றும் வேறு பல சிறிய சமாச்சாரங்கள், ஆகியவைகளைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் விவரிக்கிறார்.

ஆ. ஆகிலும், ஆராதனை தொடர்பான காரியங்களுக்கு அவர் முன்னுரிமை தருகிறார் என்று நாம் முக்கியமாகப் பார்க்கவேண்டும். "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்திஎன்னவெனில், எல்லா மனுஷர்களுக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்" என்று அவர்களுக்கு முன்னுரையாகக் கூறுவதிலிருந்து, இதற்கு முதலாவது முக்கியத்துவம் கொடுக்க அவர் கொண்டிருந்த நோக்கத்தை நாம் காணலாம் *(2:1)*

1. எல்லா மனுஷர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும். (2:1,8).

அ. வசனம் 1. "பிரதானமாய்" தனி தியானங்களிலும், பொதுவான ஆராதனைகளிலும், கிறிஸ்தவனுக்கு முதல் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டிய காரியங்கள் சில இருக்கின்றன என்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறுகிறார். இக்காரியங்களைச் செய்ய உற்சாகப்படுத்தப்படுவதற்கு மேலாக, இச்சொல் பொருள்படுகிறது.

"நீங்கள் தனி தியானங்களிலும், பொது ஆராதனைகளிலும், செய்யவேண்டிய மிக அதிக முக்கியத்துவம் நிறைந்த காரியங்களாக இவை இருக்கின்றன, என்று சொல்லப்படுவதுபோல், இது அவ்வாறு கூறப்பட்டுள்ளது.

ஆ. வசனம் 1. "நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில்....." இது "நெருங்கிக்கிட்டிச்சேருங்கள்" உங்களிடம் நான் கூற விரும்பும் சில முக்கியமானவைகள் இருக்கிறது. நான் உங்களிடம் மன்றாடிக்கேட்டுக்கொள்ளுகிறேன், நான் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; நான் உங்களிடம் கெஞ்சிக்கேட்கிறேன்; நான் உங்களிடம் முறையிடுகிறேன், இக்காரியங்கள் மிக அவசரமான சமாச்சாரமாகக் கருதுங்கள்.

இ. வசனம் 1. அதன்பின், ஆராதனை சம்பந்தமாக இயல்பாகவே மிக அவசரமானதாக அவர் கருதும், நான்கு குறிப்புகளைப் பவுல் எடுத்துக்கூறுகிறார்.

1. விண்ணப்பங்கள்: குறிப்பிட்ட அவசியமான தேவைகளிலிருந்து இவைகள் தோன்றுகின்றன மற்றும், விசுவாசிகள், அவர்களுடைய குடும்பங்கள், நண்பர்கள், உறவினர்கள் மற்றும் அயலகத்தார்களுக்காகவும் இது ஏறெடுக்கப்படும்.

2. ஜெபங்கள்: ஆராதனை மற்றும் தனித் தியானங்களில் உண்மையான ஆர்வமுள்ள ஜெபங்கள் ஏறெடுக்கப்படுகிறது.

3. வேண்டுதல்கள்: உண்மையாக, பொதுவான முறையீட்டு ஜெபம் செய்யப்படுகிறது; தேவனுடைய சமூகத்தை, அவசரமாகக் கண்டு அவர் கவனத்தைத் திரும்ப விரும்புவது-ஒருவருக்கு அல்லது ஒரு காரியத்திற்கு சாதகமாக அல்லது எதிராக, ஒரு விவாதத்தை அவர்முன் சமர்ப்பிப்பது

கிறிஸ்தவ ஜெபத்தின் நோக்கமும் நன்மைகளும் (1 தீமோத்தேயு 2:1-4,8)

(ஒரு வக்கீலைப்போல) கீழ்க்கண்டவைகள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

(1) சோதோமுக்காகவும் அவனுடைய சகோதரன் மகன் லோத்துவிற்காகவும் ஆபிரகாம் பரிந்துபேசினான். (ஆதியாகமம் 18:16-33) அவன் தன்னுடைய விவாதத்தை விடாப்பிடியாகத் தொடர்ந்தான். அவனுடைய சகோதரன் மகனுக்கு பொறுப்பாக இருந்தான். (2) எருசலேம் மற்றும் யூதமக்களுக்காக தானியேல் ஏறெடுத்த வேண்டுதல். (தானியேல் 9:2-19) அவன் ஜனங்களின் துன்மார்க்கத்தையும், பாவத்தையும் மற்றும் உண்மையற்ற தன்மையையும் ஒத்துக்கொண்டான். கிருபைக்காகவும், மன்னிப்பிற்காகவும் முறையிட்டான். தேசத்தின்மேல் வந்த தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் நீதியும், நேர்மையுமானவைகள். உம்முடைய கிருபையினிமித்தம் உம்முடைய கோபத்தையும், உக்கிரத்தையும் விட்டுத்திரும்பும். எங்களுக்கென்று சொந்தமான நீதி என்று எங்களிடம் ஒன்றும் இல்லை. நாங்கள் உம்மால் தெரிந்து கொள்ளப்பட்ட ஜனம்!

4 ஸ்தோத்திரங்களையும் செலுத்தவேண்டும்: விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும் ஏறெடுக்க அனுமதிக்கப்பட்டதற்காகவும் ஏற்கனவே பதிலளிக்கப்பட்ட ஜெபங்களுக்காகவும் நன்றியை வெளிப்படுத்தவேண்டும். (பிலிப்பியர் 4:6; சங்கீதம் 95:2; 100:4). ஈ. வேதம் கீழ்க்கண்டவாறு கூறுகிறது:

"நான் தேசத்தை அழிக்காதபடிக்குத் திறப்பிலே நிற்கவும் (மற்றவர்களுக்காக)... ஒரு மனுஷனைத் (இராஜாக்கள், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் மற்றும் ஜனங்கள் மத்தியில்) தேடினேன்". (எசேக்கியேல் 22:30) "விண்ணப்பம் பண்ணுகிறவன் இல்லையென்று கர்த்தர் ஆச்சரியப்பட்டார்". (ஏசாயா 59:16) இன்று சபையிலுள்ள நம்மில் அநேகரைப்பற்றி, கர்த்தர் அடிக்கடி இவ்வாறு சொல்லமுடியும்!

உ. வசனம் 1 "......எல்லா மனுஷருக்காகவும்..... பண்ணவேண்டும்" விண்ணப்பங்களும், ஜெபங்களும் வேண்டுதல்களும், ஸ்தோத்திரங்களும், "எல்லா மனுஷருக்காகவும் பண்ணவேண்டும்"; எல்லா மானிடர்களும், உலகமெங்குமுள்ள எல்லா மனித இனங்களும் மற்றும் விசுவாசிகள், அவிசுவாசிகள் முதலிய யாவரும் இதில் உள்ளடங்குவார்கள். நம்முடைய நெருங்கிய சுற்றுவட்டாரங்களிலுள்ளவர்களுக்கு மட்டும் நம்முடைய ஜெபங்கள் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டதாக இருக்கக்கூடாது. எல்லா பட்டணங்கள், நம்முடைய தேசமக்கள், இந்த உலகமெங்குமுள்ள மக்கள் ஆகிய இவர்களுக்காக நம்முடைய தரிசனம் இருக்கவேண்டும்.

ஊ. வசனம் 8. "பரிசுத்தமான கைகளை உயர்த்தி, எல்லா இடங்களிலேயும் ஜெபம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறேன்." கிறிஸ்தவர்கள் "எவ்வாறு" ஜெபிக்கவேண்டுமென்று பவுல் தீமோத்தேயுவுக்குக் கூறிக்கொண்டிருக்கிறார். ஜெபத்தில் கைகளை உயர்த்துவது, யூதர்கள் மத்தியில் சாதாரண பழக்கமாக இருந்தது. தேவனுக்கு முன்பாக இம்மாதிரியாக விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் செய்தார்கள். இம்மாதிரியான பழக்கம் இன்று, சபைகளில் இருக்கிறது. ஆகிலும் சிலர், முழங்கால் படியிட்டு, நின்று, முகங்குப்புற விழுந்து மற்றும் சுற்றிலும் நடந்து, ஜெபிக்கிறார்கள்.

கிறிஸ்தவ ஜெபத்தின் நோக்கமும் நன்மைகளும் (1 தீமோத்தேயு 2:1-4,8)

எ. வசனம் 8 "....கோபமும் தர்க்கமும் இல்லாமல்", எவ்வாறு ஜெபம் செய்யப்படுகிறது என்பதைக் குறித்துக் காரியமில்லை, ஆனால் அது விசுவாசிகள் மத்தியில் கோபமும், தர்க்கமும் இல்லாமல் செய்யப்படவேண்டும். இது, "உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும்" (மத்தேயு 18:19) என்று இயேசு கூறிய வசனத்திற்கு இது ஒத்தாக இருக்கிறது. ஜெபம் பலனுள்ளதாக இருக்கவேண்டுமானால், வேண்டுதல்கள் தேவனுடைய கரத்தை அசைக்கவேண்டுமானால், பரலோகம் ஏற்றுக்கொண்டு அனுமதிக்கவேண்டுமானால்,(யாக்கோபு 1:6-8) அங்கு விசுவாசிகள் மத்தியில் ஒருமைப்பாடு இருக்கவேண்டும்.

2. அதிகாரத்தில் உள்ளவர்களுக்காக ஜெபிக்கவேண்டும் (2:2)

அ. "....இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும்...." கிறிஸ்தவர்கள் வாழும், அரசியல், மத சம்பந்தமான மற்றும் சமுதாயம் சார்ந்த உலகத்தை ஆளுகிறவர்கள் இவர்களாகவே இருக்கிறார்கள். கிறிஸ்தவர்கள், அவர்களுடைய ஜெபங்கள், மற்றும் வேண்டுதல்களில் இவ்வகையைச் சார்ந்தவர்களை இயல்பாக விட்டுவிடுவதற்கு சாத்தியமாயிருப்பதால், பவுல் ஒருசமயம் இவர்களைச் சிறப்பாகச் சுட்டிக்குறிப்பிட்டிருக்கலாம். ஆகிலும் இவர்களுக்காகச் ஜெபிப்பது, எல்லாவற்றிற்கும் மேலான முக்கியத்துவம் உடையது, ஏனெனில் அவர்களுடைய ஆட்சி மற்றும் அதிகாரத்திற்கு அடியில் மக்களுக்குப் பத்திரமாகவும் சுதந்திரமாகவும் பிரயாணம் செய்ய பாதுகாப்பு அளிக்க அவர்களிடம் சக்தியிருக்கிறது.

ஆ. இராஜாக்களுக்காவும், அதிகாரமுள்ளவர்களுக்காகவும் ஜெபிக்கும்படியாகப் பவுல், விசுவாசிகளை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதை விளங்கிக்கொள்வதற்கு, சரித்திர பின்னணியும் முக்கியக்காரணமாயிருக்கிறது. பவுல் இந்த நிருபத்தை எழுதியபோது, சபையை உபத்திரவப்படுத்தின, பேரரசனாகிய நீரோ அதிகாரத்தில் இருந்தான். ரோமாபுரியில் பவுல் சிரச்சேதம் செய்யப்படுவதற்கும் இவன் ஒருவனே பொறுப்புள்ளவனாயிருந்தான். இந்த அரசியல்-மதஅரசனுக்கும், அவனுடைய நாட்களில் அதிகாரத்திலிருந்தவர்களுக்காவும் விசுவாசிகள் ஜெபிக்கும்படியாக பவுல் ஊக்கப்படுத்தியிருக்கும்போது, தேவபயமற்றவர்களுக்காவும் இரக்கமற்ற, அதிகாரத்திலுள்ள இன்றைய ஆளுனர்களுக்காவும் ஜெபிக்க நாம் உற்சாகமடையவேண்டும். பவுல் நிச்சயமாய் செய்ததுபோல, "தேவனால் கூடாதது ஒன்றுமில்லை" (லூக்கா 1:37) என்பதை நாம் நினைவுகூரவேண்டும்.

இ. இன்று, பலதேசங்கள் இத்திசையில் சென்றுகொண்டிருக்கிறது என்பதை நாம் நினைவுகூர்ந்தால் நல்லது. விசுவாசிகள் மேலும், மேலும் உபத்திரப்படுத்தப்படுவார்கள். தேசீய, மாநில மற்றும் உள்ளூர் ஆட்சி மன்றங்களின், செயற்குழு, சட்டம் இயற்றும் குழு, நீதிசபை ஆகிய ஒழுங்குமுறை நிர்வாக சபைகளால் கொண்டுவரப்பட்ட துன்மார்க்கமான தேவபயமற்ற தீர்மானங்களை முற்றிலும் முறியடிக்க, தேவனுடைய அநேக அற்புதங்கள் அவசியமாய் இருக்கும். (ரோமர் 13:1-7; 1பேதுரு 2:13-25).

கிறிஸ்தவ ஜெபத்தின் நோக்கமும் நன்மைகளும் (1 தீமோத்தேயு 2:1-4,8)

3. தேவனைப் பிரியப்படுத்தும் ஜெபம்

அ. வசனம் 3. "அது நன்மையாயிருக்கிறது" "தேவனுடைய ஒழுங்குகளின்படி ஒவ்வொருக்காகவும், இராஜாக்களுக்காகவும் விண்ணப்பங்களையும், அதிகாரத்திலுள்ளவர்களுக்காகவும் ஜெபங்களையும், வேண்டுதல்களையும், மற்றும் ஸ்தோத்திரங்களைச் செலுத்துவதையும் செய்வது மிகுந்த பலனுள்ளதாக இருக்கிறது.

ஒழுங்குகளின்படி, ஒவ்வொருவருக்காகவும், இராஜாக்களுக்காகவும், அதிகாரத்திலுள்ளவர்களுக்காகவும், விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், மற்றும் ஸ்தோத்திரங்களையும் செய்வது மிகுந்த பலனுள்ளதாக இருக்கிறது. நாம் அவ்வாறு செய்யும்போது, அது தேவனைப் பிரியப்படுத்துவதாக இருக்கிறது. அத்துடன், அவருடைய மக்களுக்கும் கிறிஸ்துவினால் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றிய அறிவு இல்லாத மற்ற மானிடர்களுக்காகவும் அவர் கொண்டுள்ள நோக்கத்திற்கு இது ஒத்ததாகவும் இருக்கிறது.

ஆ. வசனம் 2. "நாம் எல்லா பக்தியோடும்,நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல்,அமைதலுள்ள ஜீவனம்பண்ண வேண்டும் என்று கர்த்தர் விரும்புகிறார்.

1. பக்தியோடு அவருக்கு ஆராதனை செய்வதில்.

2. மனிதர்கள் மத்தியில், சன்மார்க்க நேர்மையோடும், உண்மையோடும் இருக்கவேண்டும். இராஜாக்கள் மற்றும் அதிகாரத்தில் இருப்பவர்கள் இவ்விதமான வாழ்க்கைக்குச் சாதகமாக இருக்க, தேவன் இவர்களுடைய காரியங்களில் இடையில் குறிக்கிட்டுக் கிரியைசெய்யவேண்டுமென்று, ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஏறெடுக்கவேண்டும்.

இ. வசனம் 4. "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்." கிறிஸ்தவர்கள், கலகமில்லாமல், அமைதலுள்ள ஜீவனம் செய்வார்களானால் "மற்ற மனிதர்களும் இரட்சிக்கப்பட்டு சத்தியத்தை (சுவிசேஷத்தினுடைய) அறிகிற அறியும்படியாக" அவர்களுடைய சமுதாயத்தில் சுவிசேஷத்தை பரப்பக்கூடியவர்களாக இருப்பார்கள். விசுவாசிகள் ஜெபிக்கவும், வேண்டுதல்கள் செய்யவும் வேண்டியது இரண்டாவது காரியமாக இது இருக்கிறது.

ஈ. சபைக்கு முன்பாக, சுவிசேஷ ஊழிய வேலைகளை, பவுல் எப்போதும் வைக்கிறார். சபை இருப்பதற்கு முதல் நோக்கம் இது தான். கிறிஸ்துவில் ஒருவன் விசுவாசம் வைத்தவுடன், அவன் கிறிஸ்துவின் ஸ்தானாதிபதியாகிறான்: "தேவன், ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார் ...... ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருக்கிறோம்" (2கொரிந்தியர் 5:19-20)

உ. இராஜாக்கள் மற்றும் அதிகாரத்திலிருக்கிறவர்கள் உள்பட, ஒவ்வொருவருக்காகவும், நாங்கள் ஜெபிக்கும்போது, அவர்கள் பிசாசுகளின் அதிகாரத்திலிருந்து கட்டவிழ்க்கப்படவேண்டும் என்று,

கிறிஸ்தவ ஜெபத்தின் நோக்கமும் நன்மைகளும் (1 தீமோத்தேயு 2:1-4,8)

நாங்கள் உண்மையுடன் ஜெபம் செய்கிறோம். இது, ஜெபிக்கப்படவேண்டிய மூன்றாவது காரியம்.

ஊ. கிறிஸ்துவுக்கு விரோதமாக இருக்கும் மனிதர்கள், அரசர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியவர்களின் சிந்தனைகளை அலைகள் (பிசாசுகள்) பலமாகப் பற்றிப் பிடித்துள்ளன.

1. அவர் யார்? போன்ற, கிறிஸ்துவுக்கு எதிரான பொய்யான தர்க்கங்கள்.

2. தத்துவங்கள், பொய்யான மார்க்க வழிபாடுகள், கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும் எதிரான மாம்சபிரகாரமான வாதங்கள்.

3. கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாத சிந்தனைகளும், வழிகளும். (1கொரிந்தியர் 10:4-5) "பலத்த உறுதியான பிடிகள்" என்பது, சிந்தனைகளுக்குக் காரணமான மனதில் உள்ள, சிமெண்ட்டினால் கட்டப்பட்ட அறைகள், தொடர்ந்து பிசாசினால் பலப்படுத்தப்படுவது போல் இருக்கிறது.

எ. நாம் ஜெபித்து, வேண்டுதல்களை ஏறெடுக்கும்போது, இந்த விவாதங்களும், தத்துவங்களும், பொய்யான மார்க்க மத வழிபாடுகளும், கீழ்படியாத சிந்தனைகளும், சிறைபிடிக்கப்பட்டு, அழிக்கப்படும். ஜெபமும் வேண்டுதல்களும் ஆவிக்குரிய போராயுதங்களாக இருக்கிறது. இதைச் செய்வதற்கு, இவைகளுக்கு (ஜெபம், வேண்டுதல்கள்) தெய்வீக வல்லமை இருக்கிறது.

ஏ. அப்பொழுது, இராஜாக்களும், அதிகாரத்தில் உள்ளவர்களும், பட்டணங்களிலும், தேசத்திலும், உள்ள மக்கள், கிறிஸ்துவுக்கும் சுவிசேஷத்திற்கும் எதிராக இனி ஒருபோதும் இருக்கமாட்டார்கள். அத்துடன் விசுவாசிகள் சுவிசேஷ செய்தியை சுதந்திரத்துடன் அறிவித்து, அவர்களுடைய சிநேகிதர்களும், உறவினர்களும், அயலகத்தார்களும் கிறிஸ்துவைக் கண்டுகொண்டு, சோர்ந்துபோன அவர்களுடைய ஆத்துமாக்களில் இளைப்பாறுதலைக் கண்டடைவார்கள்.

ஓ. உலகத்திலுள்ள அநேக தேசங்களிலுள்ள கிறிஸ்தவர்களுக்குள்ள மூன்று மிகப்பெரிய பிரச்சனைகள் இருக்கிறது:

1. தேவபக்தியோடு ஆராதனை செய்து, சமாதானமாகவும் அமைதலாக வாழுவதற்கு கூடாத நிலை.

2. கிறிஸ்துவுக்குச் சுதந்திரமாகச் சாட்சி கூற தடை.

3. அரசாங்கங்கள், மற்றும் பொய்யான மார்க்க மத வழிபாடுகள் செய்பவர்களின் குறுக்கீடு. இம்மாதிரியான காரியங்கள் எங்குமுள்ள எல்லா சபைகளிலுமுள்ளஎல்லா கிறிஸ்தவர்களுக்கும் நேரிடுகிறது. ஆகவே, இவைகள், ஜெபம் மற்றும் வேண்டுதல்களை ஏறெடுக்கப்படும் நேரங்களில் கர்த்தருக்கு முன்பாக கொண்டுவரப்பட வேண்டும்.

ஒ. விசுவாசிகள், சமாதானமாகவும் அமைதலாகவும்,தேவபக்தியான ஆராதனை செய்தும், கிறிஸ்துவுக்காக சுதந்திரமாக சாட்சி கூறியும் வாழமுடிகிறது என்று, கிராமங்களிலிருந்தும் பட்டணங்களிலிருந்தும், தேசங்களிலிருந்தும், அறிக்கைகளை நாம் பற்றுக்கொள்ளும்போது, துதி, தோத்திரங்களைப் படைத்து நம்முடைய நன்றியை பிதாவுக்குச் செலுத்தவேண்டும்.

கிறிஸ்தவ ஜெபத்தின் நோக்கமும் நன்மைகளும் (1 தீமோத்தேயு 2:1-4,8)

முடிவுரை

அ. விசுவாசிகள், பகைஞனை ஜெபத்தின் மூலமாக சந்திக்கும்போது, ஆவிக்குரிய போராட்டத்தில் வெற்றி பெற முடியும் என்று பவுல் அறிவார். ஆகவே, எங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான கரங்களை உயர்த்தி, விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் செய்து, பரலோகப் பிதாவுக்கு முன்பாக வரவேண்டும்.

ஆ. "ஒவ்வொருவருக்காக - அரசியல் மத சம்பந்தப்பட்ட அதிகாரத்திலுள்ள தலைவர்களுக்காக" இக்காரியங்களைச் செய்ய வேண்டுமென்று, வேதம் நமக்குப் போதிக்கிறது. ஐக்கியமாகவும், கோபம் அல்லது பகையும் நம்முடைய இருதயத்தில் இல்லாமலும் அல்லது நமக்குள் தர்க்கங்களும் இராமலும் நாம் இக்காரியங்களைச் செய்யவேண்டும்.

இ. கீழ்க்கண்ட காரியங்களுக்காக ஜெபிப்பதற்கு (விவாதங்களை சமர்ப்பிக்க) இது ஒரு நல்ல நேரமாக இருக்கும்:

1. நாகரீகமான, பொய்யான மத தலைவர்களுக்காக - கிறிஸ்துவுக்கு தேவ பக்தியுடன் ஆராதித்து, சமாதானத்துடன் வாழும் வாழ்க்கைக்கு ஏதுவாக இருக்கவும், இந்த தேசத்திலுள்ள பட்டணங்களிலும், கிராமங்களிலும் அவர்கள் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளுமாறு, சுவிசேஷத்தை சுதந்திரத்துடன் அறிவிக்க அனுமதிக்க வேண்டும்.

2. சிறைபிடித்து அழித்துப்போடவேண்டும் - விவாதங்கள், தத்துவங்கள், மாம்சப்பிரகாரமான தர்க்கங்கள், பொய்யான மார்க்க வழிபாடுகள், மற்றும் நம்முடைய நாகரீகமான, பொய்யான மதத்தலைவர்களுடைய மனதில் இருக்கும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியாமல் எதிர்த்து நிற்கும் சிந்தனைகள் ஆகியவைகளைச் சிறைபிடித்து அழித்தல்.

சபையிலும் குடும்பத்திலும் பெண்களின் நடத்தை (1 தீமோத்தேயு 2:9-15)

அ. எபேசுவில் ஆவிக்குரிய தலைவனாக ஊழியம் செய்த, தீமோத்தேயு என்று அழைக்கப்பட்ட ஒரு வாலிப போதகரும், தூர இடங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் சுவிசேஷகருமானவருக்கு, அப்போஸ்தலனாகிய பவுல் கொடுக்கிற அறிவுரைகள், இங்கு வேதபாட பாகமாக இருக்கிறது. (1:3) கீழ்க்கண்ட கருத்துகளோடு சம்பந்தப்பட்ட சில ஆலோசனைகளைக் கொடுப்பது அவருக்கு அவசியமாகக் காணப்பட்டது:

1. பொதுவான இடங்களில் எப்படிப்பட்ட ஆடை அணியவேண்டும் என்றும், அவர்கள் ஆராதனைக் கூட்டங்களில் எப்பொழுது வருகை தர வேண்டும் என்றும்,

2. போதிப்பதிலும், ஆவிக்குரிய சத்தியங்களைக் கற்றுத்தருவதிலும், அவர்களுடைய கணவன் மார்களோடு பெண்களுக்குரிய தொடர்பு,

ஆ. இக்காரியங்கள் எல்லாம் ஒரு குறிப்பிட்ட சிறப்பான நோக்கத்தோடு செய்யப்படுகிறது.

ஆ. உள்ளூர் சபையின் நேர்மை மற்றும் நல்ல பெயரைக் காத்துக்கொள்ள வேண்டும் என்று பவுல் விரும்பினார். இவ்வாறு செய்யப்படுமானால், சபை, உள்ளூர் சமுதாயத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அநேக ஆத்துமாக்களின் இரட்சிப்புக்குக் கலங்கரை விளக்காக இருக்க முடியும்.

1. பெண்கள் தகுதியான வஸ்திரத்தால் தங்களை அலங்கரிக்க வேண்டும் (2:9-10)

அ. வசனம் 10. "ஸ்திரீகள் தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும் தங்களை அலங்கரிக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்". "தகுதியான" நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும்" என்றால், ஒழுங்கு முறைப்படி, ஒன்றுக்கொன்று இசைந்தனவாக இருக்கச் செய்வது. நல்ல சன்மார்க்க சிந்தனைகளோடுள்ள மனம், நல்ல நியாயத்தீர்ப்பை பயன்படுத்துவது. பெண்மைக்குரிய தனிச் சிறப்பான பண்புகளை தள்ளிவிடாமல் இருக்கும் நல்நடத்தை, என்று பொருள்படும்.

ஆ. விசுவாசிகளான பெண்கள், அவர்கள் வாழும் சமுதாயத்திற்கென்று ஏற்படுத்தப்பட்டதும், ஒழுங்குமுறைக்குட்பட்டதும், தகுதியானது என்று அச்சமுதாய மக்களால் கருதப்பட்டதுமான ஆடைகளை மட்டுமே அணியவேண்டும். அவர்கள் ஆராதனைக் கூட்டங்களுக்கு வருகைதரும்போது, இது விசேஷமாக நன்மையாக இருக்கும். "ஒரு பெண், குறைவான, அசுத்தமான, ஒழுங்கற்ற, அல்லது பகட்டான மற்றும் விலை உயர்ந்த ஆடைகள் மற்றும், நாகரீகத்தில் மிக உயர்ந்த, அவள் பக்கமாக கவனத்தை ஈர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் உடுத்திக் கொள்ளும் ஆடைகளையும் அணிந்து கொள்ளக்கூடாது. இதே ஒழுங்கு அவ்வாறே ஆண்களுக்கும் பொருந்தும்!

இ. வசனம் 9. "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலைபெறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்...." இந்த உதாரணங்கள், இந்த வசனத்தின் முதல் பாதி பாகத்தில் பவுல் கூறுகிறார். "மயிரைப் பின்னுதலினாலாவது" என்றால், "மயிரைப் பொன் ஆபரணங்களை வைத்துப் பின்னுவது" என்று ஒருசமயம் பொருள்படலாம்.

சபையிலும் குடும்பத்திலும் பெண்களின் நடத்தை (1 தீமோத்தேயு 2:9-15)

ஈ. நகைகள் அணிவதற்கும், தலைமுடி பின்னப்படுவதற்கும் முற்றிலுமாக தடை விதிக்கப்படுவதாக இங்கு இல்லை. பவுலுடைய நாட்களில், இவைகள் டம்பமாகவும், சொகுசு வாழ்க்கை மற்றும் பெருமைக்கும் அடையாளமாகவும் இருந்தன. பெரும்பாலான கிழக்கத்திய நாடுகளிலும் மற்றும் இன்று உலகத்திலுள்ள தொழில் மயமாக்கப்பட்ட சமுதாயங்களிலும் தகுதியான, மிதமான முறையில் பொன் நகைகள் அணிவது எதிர்பார்க்கப்படுவதுடன் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. மறுபடியும் இதே காரியம் ஆண்களுக்கும் அவ்வாறே பொருந்தும்!

உ. ஆண்மக்களின் அசுத்தமான இச்சைகளைக் கிளர்ச்சிபண்ணும் வகையில் பெண்கள் ஆடை அணிவது, சபைகளில் அபாயகரமான பிரச்சனையாகப் பவுலின் நாட்களில் இருந்தது. இது விபச்சாரிகளின் மாதிரியைப் பின்பற்றுவதாகக் காணப்பட்டது. இன்றும், இதில் வேறுபாடு இல்லை. ஆகவே விசுவாசிகள் கீழ்க்கண்ட விதிகளைப் பின்பற்றவேண்டும்.

1. அவர்கள் எந்த சீர்கெட்ட சமுதாயத்திலிருந்து விடுவிக்கப்பட்டார்களோ, அதை விட வித்தியாசமான முறையில் உடை உடுத்துவதிலும், நடத்தையிலும் இருக்கவேண்டும்.

2. ஆவியானவரின் விருப்பங்களாகிய பணிவு, ஒழுங்குமுறைகள், மரியாதை ஆகியவைகளுக்கு "ஆம்" என்று கூறவேண்டும். (தீத்து 2:11-12)

ஊ. வசனம் 10. "ஆனால் நற்கிரியைகளினால்" விசுவாசிகளான பெண்கள் நற்கிரியைகளினால் தங்களை அலங்கரித்துக் கொள்ளவேண்டும். மற்றவர்களுக்கு நற்கிரியைகளைச் செய்வதற்காக அவர்கள் வேலை செய்ய வேண்டும் என்று, இது பொருள்படும். விசுவாசியான ஒரு பெண்ணை மற்றவர்கள் பார்க்கும்போது, அவளுடைய ஆடை அல்லது முடி மற்றும் சரீர அலங்காரங்களை அல்ல இதைத்தான் (நற்கிரியைகள்) காணவேண்டும். (1பேதுரு 3:3-5)

எ. வசனம் 10. "... தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே .... தங்களை அலங்கரிக்க வேண்டும்" விசுவாசிகளான பெண்களுக்கு (மற்றும் இதைப் பொருத்த அளவு மற்ற எல்லா விசுவாசிகளுக்கும்) நற்கிரியைகள் ஏற்றதாக இருக்கிறது. இவைகள், விசுவாசத்தை அறிக்கையிடுபவர்களின், இயற்கை விளைவாக இருக்கிறது. யாக்கோபு இவ்வாறு கூறுகிறார். "நான் என் விசுவாசத்தை, என் கிரியைகளினாலே காண்பிப்பேன்" (நம்முடைய நற்கிரியைகளினாலே) (யாக்கோபு 2:18; மற்றும் 2:21-22)

2. பெண்கள், அடக்கத்தோடு, அமைதலாகக் கற்றுக்கொள்ளவேண்டும். (2:11-15)

அ. வசனம் 11. "ஸ்திரீயானவள் எல்லாவற்றிலும் அடக்கமுடையவளாயிருந்து, அமைதலோடு கற்றுக்கொள்ளக்கடவள்" "அமைதலோடு" என்றால் அசைவில்லாமல், பேசிக்கொண்டு அல்லது அங்கும் இங்கும் அலைந்து கொண்டிராமல், என்று பொருள்படும். "எல்லாவற்றிலும் அடக்கமுள்ளவளாயிருந்து" என்றால், தாழ்மையான இடத்தை எடுத்துக் கொள்வது கீழ்படிந்து இருப்பது, என்று பொருள்படும்.

சபையிலும் குடும்பத்திலும் பெண்களின் நடத்தை (1 தீமோத்தேயு 2:9-15)

"மனைவிகளே, உங்கள் சொந்த புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" என்று பவுல் கூறும் போது, (1பேதுரு 3:1,5 மற்றும் எபேசியர் 5:22,24; 1கொரிந்தியர் 11:3,5 தீத்து 2:5) இப்பொருள் பட சொல்லுகிறார்.

ஆ. வசனம் 11 உள்ள போதனை, கொரிந்தியர்களுக்குப் பவுலுடைய முதல் நிருபத்தில் காணப்படுவதற்கு ஒத்ததாகக் காணப்படுகிறது. ஆராதனைக் கூட்டங்களில், பெண்கள் குரல் எழுப்பி, கேள்விகள் கேட்டு விசாரிப்பது அவர்களுக்கு அவமானத்திற்குரியதாக இருக்கும் என்று அங்கே பவுல் சொல்லுகிறார். அவர்கள் சிலகாரியங்களைப்பற்றி விசாரித்து அறிய விரும்பினால், வீட்டில் அவர்களுடைய சொந்த கணவன்மார்களிடம் கேட்க வேண்டும் (1கொரிந்தியர் 14:33-35)

இ. வசனம் 12. "உபதேசம்பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும் ஸ்திரியானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை. அவள் அமைதலாயிருக்கவேண்டும்". வசனம் 11 கூறப்பட்டக் கருத்துக்களுக்கு மேலும் அதிகப்படியான விளக்கம் இது நமக்குத் தருகிறது. "புருஷன்மேல் அதிகாரம் செலுத்த" என்றால், அவளுடைய கணவனுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை, மனைவி பலாத்காரமாக அபகரிக்கக் கூடாது. அவள், அவன்மீது ஆதிக்கம் செலுத்தக்கூடாது. (ஆதியாகமம் 3:16)

ஈ. "உபதேசம்பண்ணவும்", என்றால், குடும்பத்திற்கு, மனைவி ஆவிக்குரிய தலைவியாகவும், உபதேசம்பண்ணுகிறவளாகவும் இருக்கக் கூடாது. கணவன் ஒரு விசுவாசியாக இருந்தால், அவன் கீழ்க்கண்டவாறு இருக்கவேண்டும் என்று, பவுல் இயல்பாகவே நினைக்கக் கூடும்.

1. குடும்பத்தின் தலைவராக,

2. குடும்பத்தை ஆவியில் வழிநடத்துபவராக,

3. அவனுடைய மனைவியை வழிநடத்துபவனாகவும், தலைவனாகவும் இருக்கவேண்டும்.

4. எல்லா ஆராதனைக் கூட்டங்களுக்கும் வருகை தந்து, போதிக்கப்படும் வசனத்திற்குக் கருத்துடன் செவிசாய்க்க வேண்டும்.

5. வேத வசனத்தை வாசிப்பதற்கும், ஜெபத்திற்கும் தனிப்பட்ட முறையில் நேரம் செலவழித்து பரிசுத்த ஆவியினால் வழிநடத்தப்படுகிறவனாய் இருக்கவேண்டும். அவன் ஒரு விசுவாசியாக இல்லாமல் இருந்தால், மனைவியினுடைய அமைதலோடுகூடிய கீழ்ப்படிதல் உள்ள நடத்தை, கர்த்தர் பக்கமாக ஆதாயம்பண்ணப்பட நம்பிக்கை இருக்கிறது. (1பேதுரு 3:1-2)

உ. வசனம் 13-14. ஆகவே மனைவியானவள், 1. வீட்டில் அவனிடமிருந்து கற்றுக் கொள்ளவேண்டும். அவனுக்கு உபதேசம் செய்வதும் அவன்மீது அதிகாரம் செலுத்துவதும் சரியல்ல. பவுல் இரண்டு காரணங்கள் கொடுக்கிறார்:

1. ஒரு பெண் அவளுடைய கணவனுக்குக் கீழ்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், ஆதாம் முதலாவது சிருஷ்டிக்கப்பட்டான்.

சபையிலும் குடும்பத்திலும் பெண்களின் நடத்தை (1 தீமோத்தேயு 2:9-15)

அதன் பின் ஏவாள். (குடும்பத்தின் தலைமைப் பதவிக்கு சிருஷ்டிப்பின் ஒழுங்கு வரிசை முறை ஒரு மாதிரியை நமக்குக் கொடுக்கிறது. ஆதியாகமம் 2:7,18,22; 1கொரிந்தியர் 11:8-10)

2. ஒரு பெண், ஒரு மனிதனுக்கு, (அவளுடைய கணவனுக்கு) உபதேசிப்பதும், அவன் மீது அதிகாரம் செலுத்துவதும் கூடாது ஏனெனில், பெண்தான் இலகுவாக சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு முதன்முதலாகப் பாவம் செய்தவளாக இருக்கிறாள். (ஆதியாகமம் 3:1-7,12) இக்காரணத்தினாலேயே பெண்ணின் பின்னால் சாத்தான் சென்றான்!

ஊ. ஆகவே, ஆண்களுக்கு உபதேசம் பண்ணவும், அவர்கள் மீது அதிகாரம் செலுத்துவது, தொடர்பாகப், பெண்களை தலைமைப்பதவியில் வைக்க ஆலோசிக்கும்போது அதிக கவனமாக இருக்கவேண்டும். இந்த குறிப்பிற்கு, பேசபேல் ஒரு நல்ல உதாரணம். (வெளிப்படுத்தின விசேஷம் 2:20) கீழ்க்கண்டவர்களை அனுமதிக்கும்போது, பவுல் அதிக ஜாக்கிரதையாக இருந்தார் என்பதில் சந்தேகமில்லை:

1. சபையில் பெண்கள் தீர்க்கதரிசனம் சொல்வதில். (1கொரிந்தியர் 11:5)

2. அப்பொல்லோ என்பவனுக்கு பிரிஸ்கில்லா போதிக்க. (அப்போஸ்தலர் 18:1-3; 24-26)

3. எயோதியாளும், சிந்திகேயாளும், சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு பவுலுடன் சேர்ந்து உழைக்க. (பிலிப்பியர் 4:2-3)

4. திரிபேனாளும், திரிபோசாளும், பெர்சியாளும், சபையில் ஆவிக்குரிய தலைவர்களாக வேலை செய்ய. (ரோமர் 16:12)

எ. பவுலுடைய நாட்களில், பெண்கள் மிகத் தாழ்வாகக் கருதப்பட்டார்கள் என்பதை நாம் நினைவு கூரவேண்டும். அவர்களில் பெரும்பாலானவர்கள் கல்வியறிவில்லாதவர்களாக, ஒரு மனைவியாகவும், தாயாகவும் செய்யக் கூடிய அடிப்படை வேலைகளில் மட்டும் ஈடுபடக்கூடியவர்களாக மட்டும் இருந்தார்கள். அவர்கள் உள்ளூர் சபைகளில் போதகர்களாகவும், ஆவிக்குரிய தலைவர்களாகவும் இருப்பார்களேயானால், அது, அந்த சமுதாயத்தில் உள்ளவர்களின் பார்வையில், அற்பமாக மதிக்கப்படும். ஆகிலும், இன்று, பெரும்பாலான கிழக்கத்திய மற்றும் தொழில் மயமான சமுதாயங்களில், இது, இனிமேலும் அவ்வாறு இல்லை.

ஏ. பவுல், இன்று வாழ்ந்து கொண்டிருப்பாரானால், அவர், தென் கொரியாவிலுள்ள யூவாங்கி சோவைப் போல் (YUNGGI CHO) தீமோத்தேயுவிடம் ஒரு சமயம் இவ்வாறு கூறியிருக்கக்கூடும். "சபையிலுள்ள தலைமைப் பதவி இடங்களில் பெரும்பாலும் பெண்களையே நீ பயன்படுத்த வேண்டிய அவசியம் உனக்கு ஒரு சமயம் நேரிடலாம். ஏனெனில், ஊழியத்தை ஆயத்தம் செய்வதற்கும், அதை நிறைவேற்றுவதற்கும், அவர்கள் மட்டுமே தங்களை அர்ப்பணிக்கிறார்கள்!

ஐ. வசனம் 15. "அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு, விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப் பேற்றினாலே இரட்சிக்கப்படுவாள்".

சபையிலும் குடும்பத்திலும் பெண்களின் நடத்தை (1 தீமோத்தேயு 2:9-15)

1. விசுவாசத்திலும் பரிசுத்தத்திலும் தொடர்ந்து உறுதியாக இருத்தல்.

2. அவர்களுடைய கணவன்மார்களுக்குக் கீழ்ப்படிந்து, அன்புகூரவேண்டும்.

3. பிள்ளைகளைக் கொடுத்து தேவன் அவர்களை ஆசீர்வதிக்கும்போது பொறுப்புள்ள தாய்மார்களாக இருக்கவேண்டும்.

4. அடக்கமாகவும், மரியாதை மற்றும் ஒழுங்குமுறைப்படி ஆடை அணிய வேண்டும். மேற்கூறியவாறு சபையிலுள்ள பெண்மக்கள் இருப்பார்களானால், கீழ்க்கண்டவாறு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக இருப்பார்கள்:

1. உலகத்தில் அவர்களைச் சூழ்ந்துள்ள பாவத்திற்கும் பொல்லாப்பிற்கும் இரையாகாமல் இரட்சிக்கப்படுவார்கள்.

2. புறம்பே இருப்பவர்களுக்கு மத்தியில், நற்சாட்சியையும் நேர்மையையும் காத்துக்கொள்ள சபைக்கு உதவிசெய்வார்கள்.

3. அவர்களுக்கு கிறிஸ்தவ கணவன்மார்கள் இருப்பார்களானால், அவர்கள் முற்றிலும் புதிய ஒழுங்கு முறையான சூழ்நிலையைக் காணும்படி செய்வார்கள். (1கொரிந்தியர் 7:34)

முடிவுரை

அ. புறஜாதிகளின் தேசத்தில், தூரதேச சுவிசேஷ ஊழியத்தில், அவர் ஸ்தாபித்த சபைகளைக் குறித்து பவுல் மிகுந்த கவலையுடையவராக இருக்கிறார். அவர்களுக்கு சீடத்துவ பயிற்சி அவர் அளித்துக்கொண்டிருக்கும்போது, கீழ்க்கண்டவற்றைப் பெண்மக்களுக்கு போதிப்பது அவசியம் என்று கண்டார்:

1. ஆடை மற்றும் சன்மார்க்க நடத்தை.

2. வீட்டில் அவர்களுடைய கணவன்மார்களுடன் அவர்கள் தொடர்பு.

3. சபையில், ஆவிக்குரிய தலைவர்களாக அவர்கள் கடமை.

ஆ. சமுதாயத்தில், ஒரு நல்ல பெயரை சபை காத்துக் கொள்ளுவதற்காக, இந்தக் காரியங்களெல்லாம் செய்யப்படுகிறது. இந்த சமுதாயங்களிலுள்ள, ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு, இந்த உள்ளூர் சபை, கர்த்தருடைய கரமாகச் செயலாற்றியது. சபையின் இந்த முதன்மையான நோக்கத்திற்குத் தடையாக எதுவும் இருக்குமானால், அது கவனிக்கப்பட வேண்டும்.

இ. உள்ளூர் சபையில், பெண்கள் உபதேசிப்பது மற்றும் பிரசங்கிப்பது பற்றி பவுல் கருத்துடையவராக இருந்தார், ஏனெனில் அவருடைய நாட்களில் அது தேவையுள்ளதாக இருந்தது. ஆகிலும், பெண்கள் கற்றறிந்தவர்களாக இருந்து, தலைவர்களாக ஏற்றுக்கொள்ளும் சமுதாயத்தில், அவர் கவலைப்பட அவசியம் இல்லை. அமெரிக்காவில், பெண்கள், அதிகார சபை அங்கத்தினர்களாகவும், மகாசபை உறுப்பினர்களாகவும், தேசத்தின் உச்ச நீதி மன்றங்களில் அமர்ந்திருப்பவர்களாகவும் இருந்து,

சபையிலும் குடும்பத்திலும் பெண்களின் நடத்தை (1 தீமோத்தேயு 2:9-15)

உள்ளூர் மற்றும் மாநில அளவுகளில் பெரும்பாலும் எல்லா தலைமைப் பதவிகளிலுமிருந்து சேவைசெய்கிறார்கள். உலகத்திலுள்ள சில தேசங்களில், ஜனாதிபதிகளாகவும், பிரதம மந்திரிகளாகவும் இருக்கிறார்கள். ஒரு நாள், அமெரிக்காவிலும் இது ஒரு சமயம், அவ்வாறே ஒரு சமயம் உண்மையாக நேரிடக் கூடும்.

ஈ. பெண்கள் இன்னமும் கல்வி கற்காதவர்களாகவும், அவர்கள் வாழ்க்கை முழுவதும் குடும்பம் மற்றும் அவர்களுடைய கணவன்மார்களையும் பிள்ளைகளையும் கவனிப்பதை மையமாகக் கொண்டிருப்பது எதிர்பார்க்கப்படும் தேசங்களிலும், சமுதாயங்களிலுமுள்ள சபைகளிலும் கூட பெண்களை ஆவிக்குரிய தலைவர்களாக நியமிப்பது குறித்து பவுலுடைய கருத்து பொருந்தும். ஆனால், இக்காரியத்தை அந்த சமுதாயம் எவ்வாறு நோக்குகிறது என்பதே கவனிக்கவேண்டிய முக்கியமான காரியம்!

போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் உரிய தகுதிகள் (1தீமோத்தேயு 3:1-13)

முன்னுரை

அ. இந்த வேத பாகம், தீமோத்தேயுவுக்கு, அப்போஸ்தலனாகிய பவுலினால் எழுதப்படுகிறது; ஏனெனில், எபேசுவில் இருக்கும் தீமோத்தேயுவிடம் (1:3;3:14-15) அவர் செல்வதற்கு, ஒரு வேளை தாமதமாகும் என்று அவர் உணர்ந்தார். ஆதித் திருச்சபையில் நியமிக்கப்பட்ட, போதகர்கள், மூப்பர்கள், மற்றும் மூப்பர்கள் பதவியில் இருக்கும் பெண்கள் ஆகியவர்களின் தகுதிகளைப்பற்றிய குறிப்புகள் இதில் அடங்கியுள்ளது.

ஆ. போதகர் பதவியில் இருப்பவர்களுக்குரிய தகுதிகள், தீத்துவுக்கு எழுதிய பவுலுடைய நிருபத்தில் (தீத்து 1:6-9) எழுதப்பட்டுள்ளது. தகுதிகளைப் பற்றிய இந்த விவாதத்தில் அவைகளும் சேர்க்கப்பட்டுள்ளது:

1. போதகர்கள்
2. மூப்பர்கள்
3. பெண் மூப்பர்கள்

1. போதகர்களுக்குரிய தகுதிகள் 3:1-7

அ. வசனம் 1 "கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்" "கண்காணிப்பு" என்ற சொல், நோக்கிப்பார்ப்பது, மேற்பார்வையிடுவது, கவனிப்பது, ஆவிக்குரிய மேலதிகாரியாக இருப்பது, சரியான நிவாரணம் கொடுக்கத்தக்கதாக ஆய்வு செய்கிறவர், என்று பொருள்படும். அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில்,பன்னிரெண்டாவது அப்போஸ்தலனாக யூதாசுக்குப் பதிலாக நியமிக்கப்பட்ட மத்தியாவைப்பற்றி கூறும்போது இச்சொல் பயன்படுத்தப்படுகிறது. (அப்போஸ்தலர் 1:20) அவன், ஒரு ஆவிக்குரிய தலைவனாக ஆதிசபையில் இருந்தான். உள்ளூர் சபையில் போதகராக மேற்பார்வையிடும் ஒரு ஆவிக்குரிய தலைவராகிய போதகரைக் குறித்து, தீமோத்தேயுவுக்கு எழுதிய முதல் நிருபத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது என்று அநேகர் ஒத்துக் கொள்ளுகின்றனர். வசனம் 5, கண்காணிப்பாளரின் கடமைகளைப் பற்றிக் குறிப்பிடும் போது, பவுல், "ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?" (5:17) என்று கூறுகிறார்.

இ. ஒரு சபையின் போதகரைப் பற்றிக் குறிப்பிடப்படும் போது, மூப்பர், கண்காணிப்பாளர், போதகர்கள், மேய்ப்பர்கள் என்ற சொற்கள், ஒன்றின் இடத்தில் மற்றொன்று மாற்றி பயன்படுத்தப்பட்டுள்ளது. (அப்போஸ்தலர் 20:17,28; தீத்து 1:5-7; 1பேதுரு 5:1-3) தீமோத்தேயுவுக்கு எழுதின இந்த நிருபத்தில், உள்ளூர் விசுவாசிகளின் சபைப் போதகரைக் குறித்து, பவுல் பேசுகிறார் என்று இதிலிருந்து தெரிகிறது'

ஈ. கிறிஸ்து, அவர்களை சபைக்கு அவர் தந்த அவருடைய ஈவு என்று, சுட்டிக்காண்பிக்கிறார். (எபேசியர் 4:8,11) போதகர்கள், சபைகளில், பரிசுத்த ஆவியானவரால் வைக்கப்பட்டவர்கள் என்று, பவுல் சொல்லுகிறார் (அப்போஸ்தலர் 20:28)

உ. போதகர்களுடைய கடமைகளில் கீழ்க்கண்டவைகளும் சேர்க்கப்படுகிறது.

1. பிரசங்கிப்பதும், போதிப்பதும், (1தீமோத்தேயு 3:2; 5:17)

போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் உரிய தகுதிகள் (1தீமோத்தேயு 3:1-13)

2. சபையின் காரியங்களை நிர்வகிப்பது. (நடத்துவது) (3:5; 5:17)

3. விசுவாசிகளடங்கிய மந்தையை மேய்ப்பது (பாதுகாப்பது பயிற்றுவிப்பது, திருத்துவது, மற்றும் நீதியுடன் கண்டிப்பது) (அப்போஸ்தலர் 20:28; 1பேதுரு 5:2; 2தீமோத்தேயு 3:16)

4. கொள்கைகள் சம்பந்தமான தவறுகளிலிருந்து சபையைப் பாதுகாத்தல். அப்போஸ்தலர் 20:28-31; 1தீமோத்தேயு 4:1-2,6)

5. தேவனுடைய மக்களை சேவை மனப்பான்மையுடன் கூடிய ஊழியங்களுக்கு ஆயத்தம் செய்தல். கிறிஸ்துவுடன் அவர்கள் நடப்பதில் வளர்ந்து முதிர்ச்சியடையும்படியாகக் கண்காணித்தல். (எபேசியர் 4:11-15) இக்காரணத்தினால், உள்ளூர் சபை அங்கத்தினர்கள், போதகரை மதித்து, அவருடன் சமாதானத்துடன் வாழ்ந்து, அவர் எச்சரித்து கண்டிப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். (1தெசலோனிக்கேயர் 5:12-13; மற்றும் எபிரெயர் 13:17; 1தீமோத்தேயு 5:17)

ஊ. இந்த நல்ல வேலையை, "விரும்புகிறவன்", என்றால், ஆசைப்படு, அதன் பக்கமாக இழுக்கப்படு, அதை வாஞ்சிப்பது, போதகர் பதவியை முழு மனதுடன் அதிக ஆசைப்படு, என்று பொருள்படும். தேவனுடைய மக்களின் நலன், முதன்மையான நோக்கமாக இருக்கவேண்டும். இதுவே உயர்ந்த பெருந்தன்மையான வேலையாக இது (போதகர் ஊழியம்) இருக்கக் காரணமாயிருக்கிறது!

ஆகிலும், கிறிஸ்துவால் அழைக்கப்பட வேண்டுமென்பது உட்பட வேறு பல காரியங்களும், கருத்தில் கொண்டு ஆலோசிக்கப்படவேண்டும். (எபேசியர் 4:7,11)

எ. வசனம் 2-7. "ஆகையால் கண்காணியானவன் ... இருக்கவேண்டும்". பவுல் இப்பொழுது, பரிசுத்த ஆவியனாவரால் தீர்மானிக்கப்பட்ட ஒரு போதகருடைய தகுதிகளை நமக்குத் தருகிறார். அவைகள் முதலாவது சன்மார்க்கம்மற்றும்ஆவிக்குரியவைகளாயிருக்கிறது . நாம் இவைகளை, பவுல் தீத்துவுக்கு எழுதின நிருபத்தில் கூறப்பட்டவைகளுடன் சேர்த்துக் கொண்டால், கீழ்கண்ட குறிப்புகளும் அத்துடன் உள்ளடங்கும்:

1. தனி நபருக்குரியவைகள்.

(அ) கடிந்து கொள்ளப்படுவதற்கு இடம் தராதவனாக இருக்க வேண்டும்.

(ஆ) இச்சையடக்கமுள்ளவராயிருக்க வேண்டும்.

(இ) தன்னடக்கம் வேண்டும்.

(ஈ) கண்ணியமானவனாயிருக்கவேண்டும்.

(உ) விருந்தோம்பும்பண்புடையவனாயிருக்க வேண்டும்.

(ஊ) போதிக்கும் திறமையுள்ளவனாக இருக்க வேண்டும்.

(எ) குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்க வேண்டும்.

(ஏ) நம்பிக்கைக்குரியஉக்கிராணக்காரனாயிருக்க வேண்டும்.

போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் உரிய தகுதிகள் (1தீமோத்தேயு 3:1-13)

(ஐ) நேர்மையுள்ளவனாகவும், அர்ப்பணிக்கப்பட்டவனாகவும், பரிசுத்தவானாகவும் இருக்க வேண்டும்.

(ஒ) வசனத்திலிருந்து எடுத்து மற்றவர்களை உற்சாகப்படுத்தக் கூடியவனாக இருக்க வேண்டும்.

(ஓ) வேத வசனத்தை எதிர்க்கிறவர்களை, அவர்கள் கூறுவது தவறு என்று மறுத்துக் கூறும் திறன்படைத்தவனாயிருக்கவேண்டும்.

(ஔ) கிறிஸ்துவின் செய்தியை பற்றிப் பிடித்துக்கொண்டவனாக இருக்க வேண்டும்.

(ஃ) நலமானவைகளை நேசிக்கிறவனாக இருக்கவேண்டும்.

(க) புறம்பே இருப்பவர்களிடம் நற்சாட்சி பெற்றவனாக இருக்கவேண்டும்.

(ங) குடித்து வெறிப்பவனாயிருக்கக்கூடாது.

(ச) மூர்க்க குணமுள்ளவனாக அல்ல சாந்தகுணமுள்ளவனாயிருக்கவேண்டும்.

(ஞ) சண்டையிடுகிறவனாயிருக்கக் கூடாது.

(ட) பண ஆசையுள்ளவனாயிருக்கக் கூடாது

(ண)சமீபகாலத்தில் இரட்சிக்கப்பட்டவனாயிருக்கக் கூடாது.

(த) கர்வமுள்ளவனாயிருக்கக் கூடாது

(ந)சீக்கிரத்தில்கோபப்படுகிறவனாயிருக்கக் கூடாது

(ப)அநீதியில்ஆதாயத்தைத்தேடுகிறவனாயிருக்கக் கூடாது.

2. குடும்பம்

அ. ஒரே மனைவியையுடைய (அல்லது முதல் மனைவி) கணவனாக இருக்கவேண்டும். அவனுடைய மனைவிக்கு உண்மையுள்ள ஒரே ஒரு மனைவியின் கணவனாக இருக்கவேண்டும்.

ஆ. அவனுடைய சொந்தக் குடும்பத்தை நிர்வகிக்கும் திறமை படைத்தவனாக இருக்கவேண்டும்.

இ.மூர்க்கமும்கீழ்ப்படியாதவர்களுமானவர்களுமாய்இராதபிள்ளைகளைஉடையவனாயிருக்கவேண்டும்

ஈ.முறைமையானமரியாதையுடன் அவனுடையபிள்ளைகள்அவனுக்குக் கீழ்ப்படிகிறார்களா என்று கவனித்துக்கொள்ள வேண்டும். சபையிலுள்ள ஒரு போதகருடைய ஆவிக்குரிய பொறுப்புகள், அவனுடைய குடும்பம் மற்றும்சமுதாய வாழ்க்கையிலிருந்து பிரிக்கப்பட்டது அல்ல என்று, இந்த தகுதிகளிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம்.

உ. ஒரு பெந்தெகோஸ்தே சபையின் போதகராக அவன் இருப்பானேயானால், பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் பெற்று, முதல் வெளிப்படையான அடையாளமாகிய, அவன் கற்றுக் கொள்ளாத ஒரு மொழியில் பேசினவனாக இருக்கவேண்டும். (அப்போஸ்தலர் 2:1-4).

போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் உரிய தகுதிகள் (1தீமோத்தேயு 3:1-13)

இன்று, போதகர் பதவியில் இருக்க விரும்புகிறவர்களை, இந்த அட்டவணை வரம்பிற்குட்படுத்தும்.

2. உதவிக்காரர்களுக்குரிய தகுதிகள் (3:8-10,12)

அ. வசனம் 8. "அந்தப்படியே" என்றால் "அவ்விதமாகவே" என்று பொருள்படும். போதகர்களுக்கு இருக்கிறது போலவே, உதவிக்காரர்களுக்கும் தகுதிகள் இருக்கவேண்டும் என்று இந்த கருத்தில் காணப்படுகிறது.

ஆ. வசனம் 8. "உதவிக்காரர்கள்" "உதவிக்காரர்கள்" என்றால், வேலைக்காரன், ஊழியம் செய்யும் ஒருவன் என்று பொருள்படும். எருசலேமில் உள்ள சபையில் ஏழை விதவைகளுக்கு "பந்தி விசாரணை" செய்யும்படி நியமிக்கப்பட்டவர்களே, முதலாவது இருந்த உதவிக்காரர்களாக (அப்போஸ்தலர் 6:2) ஒருசமயம் இருந்திருக்கக் கூடும். அவர்கள், சபையில் பொருளாதாரம் மற்றும் சரீர பிரகாரமான காரியங்களுக்குப் பொறுப்புள்ளவர்களாயிருந்து, போதகர்களுக்கு ஜெபிக்கவும், பிரசங்கிக்கவும், வேத வசனத்தைப் போதிக்கவும் போதுமான நேரம் தடையின்றி கிடைக்கத்தக்கதாக இருந்தார்கள்.

இ. பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில், கலை நுட்பக் கருத்தில், இச்சொல் முதன்முதலாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. "பரிசுத்தவான்கள் அனைவருக்கும், கண்காணிகளுக்கும், உதவிக்காரர்களுக்கும்" இந்த நிருபம் குறிப்பிடப்பட்டு எழுதப்பட்டுள்ளது (பிலிப்பியர் 1:1)

ஈ. வசனம் 8-10,12. "அந்தப்படியே உதவிக்காரர்களும்...." என்று கூறி, உதவிக்காரரின் தகுதிகளைப் பவுல் சுருக்கமாக விவரிக்கிறார்:

1. தனி நபருக்குரியவைகள்.

(அ) கனத்திற்குப் பாத்திரவான்களாயிருக்கவேண்டும்.

(ஆ) உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

(இ) மதுபானப்பிரியராயிருக்கக் கூடாது.

(ஈ) இழிவான ஆதாயத்தைத் தேடுகிறவர்களாயிருக்கக் கூடாது.

(உ) சுத்த மனச்சாட்சியோடு விசுவாசத்தைக் காத்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கவேண்டும்.

(ஊ) இவர்கள் சோதிக்கப்பட்டு (ஐக்கிய சபையின் பொதுவான சம்பந்தம்) குற்றஞ்சாட்டப்படாதவனாயிருக்கவேண்டும்.

2. குடும்பம்

(அ) ஒரே மனைவியையுடைய கணவன் (போதகர்களுக்குரிய அதே விளக்கம்)

(ஆ) அவனுடைய சொந்த பிள்ளைகளையும் குடும்பத்தையும் நன்றாக நிர்வகிக்கக் கூடியவனாயிருக்க வேண்டும்.

ஊ. ஆதி அப்போஸ்தலர்களால், முதன்முதலாக நியமிக்கப்பட்ட உதவிக்காரர்களுக்கென்று தீர்மானிக்கப்பட்ட தகுதிகளையும் (அப்போஸ்தலர் 6:3) இத்துடன் சேர்த்துக் கொள்ளாவிட்டால் தவறு செய்கிறவர்களாக நாம் இருப்போம்:

போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் உரிய தகுதிகள் (1தீமோத்தேயு 3:1-13)

1. நற்குணசாலிகள் என்று யாவராலும் அறியப்பட்டவர்களாயிருக்கவேண்டும். (இதற்கு முன்னால் சிலகாலத்திற்கு உண்மையுள்ளவர்களென்று, நிரூபிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும்)

2. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டவர்களாயிருக்க வேண்டும். (முற்றிலுமான ஆவியால் மூடப்பட்டவர்களாக, பெந்தெகோஸ்தே நாளன்று சீடர்கள் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெற்றதுபோல அப்போஸ்தலர் 2:1-4)

3. ஞானத்தால் நிரப்பப்பட்டவர்களாயிருக்கவேண்டும். (ஓரளவிற்கு ஞானத்தில் முற்றுப்பெற்றவர்களாயிருக்கவேண்டும். அதாவது, நமக்குள் வாசம்பண்ணும் பரிசுத்த ஆவியானவருடன் இசைந்து நடப்பதை விளங்கி, நேர்பாதையில் நடக்க உதவும் ஞானம்).

3. பெண் ஊழியக்காரிகளின் தகுதிகள் (3:11,13)

அ. வசனம் 11. "அந்தப்படியே ஸ்திரீகளும்" இந்த குறிப்பு, உதவிக்காரர்களின் மனைவிகளைக் குறிப்பதைவிட, சபையிலுள்ள பெண் உதவிக்காரிகளைக் குறிப்பதாக அநேகக் கல்விமான்கள் கருதுகிறார்கள். "ஸ்திரீகள்" என்று இந்த வசனத்தில் கூறப்பட்ட சொல் மனைவிகள் அல்லது பெண்கள் என்று பொருள்படும். இது இரண்டாவது சொல்லைக் குறிப்பிடுமானால், அது ஒரு பெண் உதவிக்காரரை அல்லது உதவிக்காரி என்று பொருள்படும். "அந்தப்படியே" என்ற சொல், உதவிக்காரர்களையல்லாமல் இது தனிப்பட்ட மற்ற நபர்களைப் பவுல் சுட்டிக்காட்டுவதாகக் காணப்படுகிறது.

ஆ. "ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி", என்று ரோமருக்கு எழுதின நிருபத்தில் பெபேயாளைக் குறித்து பவுல் விவரிக்கிறார். (ரோமர் 16:1) பின்னான நூற்றாண்டு காலங்களில், சபையில் ஊழியக்காரிகள் இருந்தார்கள் என்று சரித்திர பதிவேடுகளில் எழுதப்பட்டுள்ளது என்பதை நாம் அறிவோம். எல்லா உண்மையோடு, உள்ளூர் சபைகளில், உதவிக்காரர்களைவிட, உதவிக்காரிகள் சில வேலைகளை சிறப்பாகச் செய்யமுடியும் என்று நாம் கூறலாம்.

இ. வசனம் 11. "அந்தப்படியே ஸ்திரீகளும் (பெண் உதவிக்காரர்கள், உதவிக்காரிகள்) ...... இருக்கவேண்டும்". பெண் உதவிக்காரிகள் பதவியில் இருப்பவர்களுடைய சிறப்பான தகுதிகளை பவுல் சுருக்கிக் கூறுகிறார்:

1. கனத்தைப் பெற்றுக்கொள்ளத் தகுதியுள்ளவர்களாயிருக்கவேண்டும். (சபை அங்கத்தினர்கள் மற்றும் புறம்பேயிருப்பவர்களால்)

2. அவதூறுபேசுகிறவர்களாயிருக்கக் கூடாது.

3. இச்சையடக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். (எல்லாக் காரியங்களிலும்)

4. நம்பத்தகுந்தவர்களாயிருக்கவேண்டும்.

ஈ. வசனம் 13. "..... ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலைமையையும் ..... அடைவார்கள்". போதகர்களாகவும், உதவிக்காரர்களாகவும், உதவிக்காரிகளாகவும், அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட கடமைகளை நன்றாய் செய்வார்களானால், சபை மற்றும் சமுதாயத்திலுள்ள மற்றவர்களிடமிருந்து கனத்தைப் பெற்றுக்கொள்ளுவார்கள். (படிப்படியாக) அவர்கள் நிற்கத்தக்கதான உறுதியான அஸ்திபாரத்தையும் பெற்றுக் கொள்ளுவார்கள். (எபேசியர் 6:13). சபையில் நியமிக்கப்பட்டக் கடமைகளை மகிழ்ச்சியுடன்

போதகர்களுக்கும் மூப்பர்களுக்கும் உரிய தகுதிகள் (1தீமோத்தேயு 3:1-13)

நிறைவேற்றுவது, எப்போதும் மற்ற விசுவாசிகளிடமிருந்து கனத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஆவியில் வளர்ந்து உயர்த்தப்படுவதற்கும் சாதாரணமாக அதிக உதவியாக இருக்கிறது.

உ. வசனம் 13. "..... கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்". நாம், நம்மையே அர்ப்பணித்து, கிறிஸ்துவுக்கும், சபைக்கும் ஊழியம் செய்வதில் சுறுசுறுப்பாக ஈடுபடும்போது நாம் கீழ்க்கண்டவற்றிலும் வளர்ச்சியடைவோம்.

1. தேவன் மற்றும் கிறிஸ்துவுக்குள் தைரியம் அடைவோம்.

2. வருங்காலத்தில் ஈவுகளைப் பெற்றுக் கொள்ளுவோம் என்ற திடநம்பிக்கை!

முடிவுரை

அ. ஆராதனை மற்றும் தலைமைப் பதவியின் தகுதிகள் சம்பந்தமான காரியங்களில் திருத்தங்கள் செய்யும்படியாகத் தீமோத்தேயுவைப் பவுல் எபேசுவில் இருக்கும்படியாக விட்டு வந்தான். உள்ளூர் சபையில், போதகர், உதவிக்காரன் மற்றும் உதவிக்காரிகள் பதவியில் விசுவாசிகளை நியமிக்கத் தீர்மானிக்கும்போது கவனிக்கவேண்டிய தகுதிகளை இன்றைய நமது வேதபாடத்தில் அவர் (பவுல்) நமக்குத் தருகிறார்.

ஆ. அட்டவணைப் படுத்தப்பட்ட தகுதிகளிலிருந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களிடம், கீழ்க்கண்ட தகுதிகள் இருக்கின்றனவா என்று நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று அறிவுறுத்தப்படுவதை நாம் பார்க்கிறோம்:

1. சன்மார்க்கம் சம்பந்தப்பட்ட காரியங்களிலும் ஆவிக்குரியவற்றிலும் வளர்ந்து முதிர்ச்சிப் பெற்றிருக்கவேண்டும்.

2. வேதத்திலுள்ள சத்தியங்கள் மற்றும் கருத்துக்களுக்கேற்றவாறு மற்றவர்களுக்குப் போதித்து, பயிற்சியளிக்கக் கூடிய திறமையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

3. அவர்களுடைய பிள்ளைகளையும் குடும்பத்தையும் நல்லபடியாக நிர்வாகம் செய்யக்கூடியவர்களாயிருக்க வேண்டும்.

4. ஐக்கிய சகவாசத்தினர்கள் மத்தியிலும், புறம்பேயுள்ள சமுதாயத்தினர்களிடமும் நற்பெயரைப் பெற்றவனாயிருக்கவேண்டும்.

இ. ஐக்கிய சகவாசத்திலுள்ள விசுவாசிகளின் வளர்ச்சியும், உள்ளூர் சபை அமைந்திருக்கும் சமுதாயத்தினரிடமிருந்து பெறும் நற்பெயரும், உள்ளூர் சபை, சுவிசேஷத்தை சமுதாயத்தில் எங்கும் பரவச் செய்ய உயர்த்த அல்லது கட்டுப்படுத்த முடியும்

ஆவிக்குரிய தலைவரின் நடத்தைப் பண்புகள் (1 தீமோத்தேயு 4:11-16)

முன்னுரை

அ. பவுல் முதன்முதலாவது லீஸ்திராவுக்குச் சென்றபோது, தீமோத்தேயுவை கிறிஸ்துவண்டை ஒரு சமயம் வழிநடத்திருக்கவேண்டும். இரண்டாவது முறை சென்றபோது அவருடைய தூர தேச சுவிசேஷ ஊழியப் பயணங்களில் தன்னுடன் வருமாறு தீமோத்தேயுவை அழைத்தார். ரோமாபுரியில் அப்போஸ்தலனுடைய முதல் சிறையிருப்பின்போதும், அவன் பவுலோடு இருந்தான். (அப்போஸ்தலர் 17:14-15, 18:5, 19:22, 20:1-6, பிலிப்பியர் 1:1, கொலோசெயர் 1:1, பிலேமோன் 1)

ஆ. அவருடைய நான்காவது சுவிசேஷ பயணத்தை அநேகமாக அவருடைய ரோமாபுரி சிறையிருப்புக்குப் பின் பவுல் துவங்கியிருக்கக் கூடும். இந்தக் குறுகிய பயண காலத்தில் அவருடைய உடன் தோழனாகிய தீமோத்தேயுவை எபேசு சபைக்குப் பொறுப்பாக விட்டுச் சென்றார். அப்பொழுது பவுல் மெக்கெதோனியாவுக்குச் சென்றார். (பிலிப்பி பட்டணம்) இங்கிருந்துதான் அவருடைய இளம் உதவிக்காரனுக்கு இந்த முதலாம் நிருபத்தை எழுதினார்.

1. ஒரு ஆவிக்குரிய தலைவன், அவனை மக்கள் அசட்டை பண்ணுவதற்கு இடமளிக்கக் கூடாது (4:12)

அ. ..."ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு ...மாதிரியாயிரு" "அசட்டை பண்ண" என்றால், உன்னைக் குறைவாக நினைக்க, நீ ஒன்றுக்கும் உதவாதவன் என்று நினைக்க, உன்னை நிந்திக்கும் படியாக, என்று பொருள்படும்.

ஆ. "உன் இளமையைக் குறித்து..." இன்று அநேக போதகர்கள், சுவிசேஷகர்கள், தீர்க்கத்தரிசிகள், தூர இடங்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் ஊழியர்கள் ஆகியவர்களுக்கு இருப்பதுபோலவே, இளம் ஊழியனாக இருப்பது தீமோத்தேயுவுக்கு ஒரு பிரச்சனையாக இருந்தது. அல்லது அதற்குக் குறைவான வயதுள்ள மிஷனரி-போதகனாக அவன் இருந்திருக்க வேண்டும். ஆகவே, இளம் ஊழியர்கள் வயது பிரச்சனையை எவ்வாறு மேற்கொள்ளலாம் என்று பவுல் சுருக்கி எழுதுகிறார்.

இ. "விசுவாசிகளுக்கு மாதிரியாய் இரு" தீமோத்தேயு கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்: (1) பின்பற்றத்தகுந்த கிறிஸ்தவ மாதிரியாக (2) மற்றவர்கள் பின்பற்றக் கூடிய, சன்மார்க்க மற்றும் ஆவிக்குரிய மாதிரிப் படிவத்தை நிறுவக் கூடியவனாக இருக்க வேண்டும். கீழ்க்கண்ட குறிப்புகளும், இத்துடன் சேர்க்கப்படவேண்டும்.

1. பேசும் திறன் - உச்சரிக்கப்படும் வார்த்தைகள் மற்றும் சிந்தனைகள்.

2. வாழ்க்கை - வாழும் விதமும், நடையும்.

3. அன்பு - மற்றவர்களுக்காக தன்னை தியாக பலியாகக் கொடுக்க வேண்டும்.

4. விசுவாசம் - இரட்சிப்புக்காகத் தொடர்ந்து கிறிஸ்துவின் மீது சார்ந்திருக்க வேண்டும்.

5. தூய்மை - சன்மார்க்க நடக்கையும் சுத்தமும்.

ஆவிக்குரிய தலைவரின் நடத்தைப் பண்புகள்

(1 தீமோத்தேயு 4:11-16)

இது ஒரு விசுவாசிகளின் கூட்டம் ஒரு இளம் போதகர் அல்லது ஊழியனை அசட்டை செய்து குறைவாக மதிப்பிடுவதைத் தடுக்கும்.

ஈ. கவலையீனமும், இந்தக் குறிப்புகளில் எது ஒன்றில் தவறுவதும், ஆவிக்குரிய தலைவனுக்கு குறிப்பாக வாலிபர்களுக்கும் மற்றும் சிலவேளைகளில் முதிர்ச்சி பெறாத போதகர் மற்றும் ஊழியர்களுக்கும், அழிவை விளைவிக்கும். பேதுரு, உள்ளூர் சபைகளின் போதகர்களுக்கு, அறிவுரையாக இவ்வாறு கூறுகிறார்: "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து....அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும். சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாக இருங்கள்" (1பேதுரு *5:2-3).*

உ. பிலிப்பியர்களுக்கு எழுதின நிருபத்தில் பவுல் இவ்வாறு கூறுகிறார்: "சகோதரரே, நீங்கள் என்னோடே கூடப் பின்பற்றுகிறவர்களாகி, நாங்கள் உங்களுக்கு வழிகாட்டுகிறபடி நடக்கிறவர்களை மாதிரியாக நோக்குங்கள்". (பிலிப்பியர் 3:17 மற்றும் 1கொரிந்தியர் 11:1; 2தெசலோனிக்கேயர் *3:7,9).*

2. ஒரு ஆவிக்குரிய தலைவன், வார்த்தையின் ஊழியத்திற்கு தன்னை அர்ப்பணித்தவனாயிருக்க வேண்டும் (4:11, 13-15)

அ. வசனம் 11. "இவைகளைக் கட்டளையிட்டுப் போதித்துக் கொண்டிரு". "இவைகளை" என்பது இந்த நிருபத்தில் உள்ள இந்த குறைப்பு வரை பவுலுடைய எல்லா அறிவுரைகளையும் இது ஒருவேளை குறிக்கலாம்.

1. ஜெபம் மற்றும் பொது ஆராதனைகளில் பெண்களின் பங்கு ஆகியவை தொடர்பான போதனைகள் *(2:1-15)*

2. போதகர்கள், உதவிக்காரன்கள் மற்றும் உதவிக்காரிகளின் தகுதிகள் *(3:1-13)*

3. பொய் போதனைகளையும், கள்ளப் போதகர்களையும், பொய்யென்று நிரூபித்துத் தள்ளிவிடுதல் *(1:3-11; 4:3-6; 7:10).*

"போதிப்பது" என்றால் செய்தியை அறிவிப்பது என்று பொருள்படும். "கட்டளையிடு" என்றால் நீ சொல்வதை ஏற்றுக் கொள்ளத்தக்கதாக பலமாக வற்புறுத்த வேண்டும், கட்டளை கொடுப்பது, அதிகாரத்துடன் பேசுவது என்று பொருள்படும்.

ஆ. சிலர் விசுவாசத்தைத் தள்ளிவிட்டு வஞ்சிக்கும் ஆவிகள் மற்றும் பிசாசுகளின் வேதனைகளைப் பின்பற்ற துவங்கியிருந்தனர். ஆகவே பவுல் தீமோத்தேயுவுக்கு இந்த அறிவுரைகளைக் கொடுத்தார் *(4:1)* இவர்கள் பொய்க் கொள்கைகளைப் போதிக்கிறவர்களாயிருந்து, புராணக்கதைகளுக்கும், முடிவில்லாத வம்ச வரலாறுகளுக்கும், கிழவிகளின் கட்டுக்கதைகளுக்கும் தங்களை ஒப்புக் கொடுக்கிறவர்களாகிறார்கள் *(1:3-4; 4:1-3,7).*

ஆவிக்குரிய தலைவரின் நடத்தைப் பண்புகள் (1 தீமோத்தேயு 4:11-16)

இ. வசனம் 13. "நான் வருமளவும்". பவுல் தீமோத்தேயுவை எபேசுவில் இருக்கும்படியாக விட்டு விட்டு, மக்கெதோனியாவிலுள்ள சபைகளைச் சந்திக்கப் போய்விட்டார் (1:3). அவன் சமீப காலத்தில் எபேசுவுக்குத் திரும்பி வர முடியாது என்று உணர்ந்தபோது, அவர் இந்த முதலாம் நிருபத்தை தீமோத்தேயுவுக்கு எழுதினார் (3:14-15).

ஈ. வசனம் 13. "... வாசிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறதிலும், உபதேசிக்கிறதிலும், ஜாக்கிரதையாயிரு". "ஜாக்கிரதையாயிரு" என்றால் இதைக் குறித்து இடைவிடாமல் சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டும். இந்த காரியங்களுக்கு தொடர்ந்து கவனத்தைச் செலுத்த வேண்டும். இந்தக் காரியங்களில் உன்னையே செயல்முறைப்படுத்த வேண்டும். இவைகளை அலட்சியம் பண்ணாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

1. வேதவாசிப்பு - ஒவ்வொரு ஆராதனைகளிலும், பொதுவாக யாவருக்கும் வேதவசனங்களை வாசிப்பதில், யூத ஜெப ஆலயங்களின் மாதிரியை ஆதிசபை பின்பற்றியது (லூக்கா 4:16; அப்போஸ்தலர் 13:14-15).

2. புத்தி சொல்வது (பிரசங்கிப்பது) - கண்டிப்பது, கேட்டுக் கொள்வது, வேத வசனங்களுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்திக் கூறுவது, விசுவாசிகளின் அன்றாடக வாழ்க்கையில் வேத வசனங்களை செயல்முறைப்படுத்துவது.

3. போதிப்பது - அதில் அடங்கிய கருத்துக்களையும், அர்த்தங்களையும், வேத வசனங்களின் நோக்கத்தையும் உபதேசிப்பது.

உ. வசனம் 14. "உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே". "உனக்கு அளிக்கப்பட்ட வரம்" என்பது தீமோத்தேயுவுக்குக் கொடுக்கப்பட்ட, கிருபையின் இலவசமான ஈவைக் குறிப்பிடுகிறது. கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய ஆஸ்தி. ஊழியக்காரனாக இருக்கும்படி கர்த்தரிடத்திலிருந்து வந்த அழைப்பு (அப்போஸ்தலனாக - எபேசியர் 4:8,11) "அசதியாயிராதே" என்றால் "இந்த வரத்தோடு சம்பந்தப்பட்ட கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றுவதில் கவலையீனமாக அல்லது பொறுப்பற்ற விதமாக நடந்து கொள்ளக் கூடாது.

ஊ. வசனம் 14. "மூப்பராகிய சங்கத்தார் (போதகர்கள்) உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரம்" தீமோத்தேயு தீர்க்கதரிசன வசனத்தின் மூலமாக ஊழியக்காரனாக (அப்போஸ்தலனாக) அழைக்கப்பட்டது மட்டும் அல்லாமல் (1 தீமோத்தேயு 1:18) அவன் அபிஷேகம் பண்ணப்பட்டவனாகவும் இருந்தான். இந்த ஊழியத்தில் ஏற்றுக் கொள்ளப்பட அனுமதிக்கும்படியாக, லீஸ்திரா சபைகளின் போதகர்களும், அப்போஸ்தலனாகிய பவுலும், அவர்களுடைய கைகளை தீமோத்தேயுவின் மீது வைக்கும்போது இது நடந்தது (1 தீமோத்தேயு 4:14; 2 தீமோத்தேயு 1:6; மற்றும் அப்போஸ்தலர் 16:1-3).

எ. வசனம் 15. "நீ தேறுகிறது யாவருக்கும் விளங்கும்படி, இவைகளையே சிந்தித்துக் கொண்டு, இவைகளிலே நிலைத்திரு". ஒரு வாலிப போதகர் அல்லது ஊழியர் கீழ்க்கண்டவாறு இருக்க வேண்டும்:

ஆவிக்குரிய தலைவரின் நடத்தைப் பண்புகள்
(1 தீமோத்தேயு 4:11-16)

1. அதிகாரத்தோடு போதித்து புத்தி சொல்ல வேண்டும். வேத வசனங்களிலுள்ளவைகளுக்கு ஏற்ற வாழ்க்கை வாழும்படி அதிகாரப்பூர்வமான உரிமையுடன் கேட்க வேண்டும்.

2. அவன் நியமிக்கப்பட்ட வேலையோடு சம்பந்தப்பட்ட கடமைகளையும், பொறுப்புகளையும் நிறைவேற்றி முடிக்கத் தன்னையே அதற்கு அர்ப்பணிக்க வேண்டும்.

3. மிக உயர்ந்த சீரிய சன்மார்க்கம் மற்றும் ஆவிக்குரிய வாழ்க்கை வாழுவதின் மூலமாக ஒரு கிறிஸ்தவ மாதிரியாக மாற வேண்டும். சபையில்(களில்) உள்ள விசுவாசிகள் அவனுடைய சொந்த வாழ்க்கையில் மற்றும் ஊழியத்தில் காணப்படும் முன்னேற்றத்தைக் கண்டு முதிர்ச்சியடையாத அனுபவம் மற்றும் வயதின் காரணமாக அவனை இனி ஒருபோதும் குறைவாக மதிப்பிடவோ அல்லது அசட்டை செய்யவோ மாட்டார்கள்.

3. ஒரு ஆவிக்குரிய தலைவர் அவனுடைய வாழ்க்கை மற்றும் கொள்கைகளை ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும் (4:16)

அ. "உன்னைக் குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு". "எச்சரிக்கையாயிரு" என்றால் உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும், விடாமல் பிடித்துக் கொள்ள வேண்டும்.

அதற்கு அதிக ஜாக்கிரதையாகக் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று பொருள்படும். ஆவிக்குரிய தலைவர், உறுதியாகப் பற்றிப் பிடித்துக் கொள்ளவும், ஜாக்கிரதையாகக் கவனிக்கவும் வேண்டிய இரண்டு காரியங்கள் இருக்கின்றன.

1. அவனுடைய வாழ்க்கை - சன்மார்க்கம் மற்றும் ஆவிக்குரிய நல்நடத்தை மற்றும் வாழ்க்கை நடை.

2. அவனுடைய கொள்கை - அவன் போதிக்கிறவைகளும், பிரசங்கிப்பவைகளும்.

ஆ. ஆகவே இவ்விரண்டைக் குறித்தும், போதகர் மற்றும் ஊழியர் சிறப்பாக வாலிப வயதில் உள்ளவர்கள் மிகுந்த எச்சரிக்கையாயிருக்க வேண்டும். கொள்கைகளைப்பற்றிய ஆழமான கருத்துக்களை அறியாமல், ஒரு நல்ல வாழ்க்கை வாழுவது நன்மையானதாக இருந்தாலும் அது, ஆவியில் வளர்ந்தவர்களுக்கு உதவிசெய்ய பயன்படாது. நல்ல கொள்கைகளை உடையவனாயிருந்து நல்ல வாழ்க்கை வாழாமல் இருப்பது, ஆவிக்குரிய தலைவர் மற்றும் அவர் வழிநடத்த விரும்புகிறவர்கள் ஆகிய இருவருக்கும் முடிவில் அழிவைக் கொண்டுவரும்!

இ. "இவைகளில் நிலைகொண்டிரு" "நிலைகொண்டிரு" என்றால் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து அவ்வாறே இரு, இடைவிடாமல் தொடர்ந்து இவ்வாறாகவே வாசம் செய்தல் என்று இங்கு பொருள்படும். அவனுடைய சன்மார்க்க நடத்தை, வாழ்க்கை நடை மற்றும் அவன் போதிப்பவைகளைக் குறித்தும், பிரசங்கிப்பவைகளைக் குறித்தும், தீமோத்தேயு (ஆவிக்குரிய தலைவன்) அவனுடைய ஊழியகாலம் மற்றும் வாழ்நாள் முழுவதும் மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

ஈ. "இவைகளில் நிலைகொண்டிரு" என்றால் பிரச்சனைகளையும்,

ஆவிக்குரிய தலைவரின் நடத்தைப் பண்புகள்
(1 தீமோத்தேயு 4:11-16)

உபத்திரவத்தையும் சந்திக்கும் போதும் தொடர்ந்து உறுதியாக நிலைத்திருத்தல் என்று சாதாரணமாக எப்போதும் பொருள்படும். எபேசுவில், தீமோத்தேயு அவனுடைய பங்காக எதிர்ப்பை சந்தித்தான் என்று இதிலிருந்து அறியலாம். தீமோத்தேயுவுக்கு பவுலுடைய அறிவுறுத்தல்கள் இந்த எண்ணத்தை நமக்கு நிச்சயமாகத் தருகிறது. ஒருவன் ஊழியம் செய்யும் இடம் அல்லது அவனுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட ஊழியம் ஆகியவற்றைக் கருதாமல், ஒவ்வொரு ஆவிக்குரிய தலைவனும் எதிர்ப்பு மற்றும் பிரச்சனைகளை அவனுடைய பங்காகப் பெற்றிருப்பான் என்று நாம் சந்தேகமின்றி கூறலாம் என்று நான் உண்மையில் நினைக்கிறேன்.

உ. எபேசியர்களுக்கு எழுதின நிருபத்தில் ஆவிக்குரிய தலைவர்களுக்கு பவுல் கொடுத்த அறிவுரைகள் போலவே இந்த அறிவுரைகளும் இருக்கிறது. "பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்...தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும்...நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும் வரைக்கும்...(ஆகவே) நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்" (எபேசியர் 4:12-14).

முடிவுரை

அ. ஆவிக்குரிய தலைவர்கள், விசேஷமாக இளைஞர்கள், கிறிஸ்துவினால் ஊழியத்திற்கு அவர்கள் அழைக்கப்பட்டவர்களாகவும், உடன் ஊழியர்களால் அபிஷேகம் செய்யப்பட்டவர்களாய் (ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாய்) இருந்தபோதிலும், அவர்கள் ஊழியத்தில் வெற்றி பெற வேண்டுமானால், அவர்கள் கவனிக்கவேண்டிய வேறு காரியங்கள் உண்டு.

ஆ. அவர்கள் கீழ்க்கண்டவற்றைக் கண்டிப்பாய் செய்ய வேண்டும்:

1. அவர்கள் ஊழியம் செய்யும் சபை மக்கள் அவர்களைத் தாழ்வாக மதிக்கத் (அசட்டை செய்யத்)தக்கதாக இருக்கக் கூடாது.

2. தேவனுடைய வார்த்தையின் ஊழியத்திற்கு தங்களை அர்ப்பணிக்க வேண்டும்.

3. ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவர்களின் பொறுப்பில் இருப்பவர்கள், அவர்கள் போதிப்பதை ஏற்றுக் கொண்டு அதன்படி நடக்க அவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

4. அவர்களுடைய சன்மார்க்க நடத்தை, வாழ்க்கை நடை மற்றும் அவர்கள் போதிக்கும் சத்தியங்களைக் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

5. சபைக்கு உள்ளிருந்தும், வெளியிலிருந்தும் பிரச்சனைகளும், எதிர்ப்பும் இருந்த போதிலும் சோர்ந்து போகாமல் தொடர்ந்து கடினமாக ஊழியம் செய்ய வேண்டும்.

இ. இக்காரியங்களெல்லாம் இரண்டு காரணங்களின் நிமித்தமாக செய்யப்பட வேண்டும்.

1. ஊழியத்தில் இருக்கும் நபரின் இரட்சிப்புக்காக.

2. அவனுடைய பொறுப்பில் வைக்கப்பட்டவர்களின் இரட்சிப்புக்காக.

விதவைகளும் உள்ளூர் சபையும் (1 தீமோத்தேயு 5:3-16)

அ. விதவைகள், மூப்பர்கள் மற்றும் அடிமைகள் சார்பாக, உள்ளூர் சபை எவ்வாறு நடந்து கொள்ள வேண்டுமென்று அதிகாரம் 5, பவுல் தீமோத்தேயுவுக்கு ஆலோசனை கொடுக்கிறார். முதல் இரண்டு வசனங்களில், ஒரு ஊழியர்-போதகர், வயது சென்ற மற்றும் வாலிப ஆண்கள், வயதுசென்ற மற்றும் வாலிப பெண்களிடம் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டும் என்று அவனுக்குக் கூறுகிறார்.

ஆ. அதன்பின் விதவைகளும் உள்ளூர் சபையும் சம்பந்தப்பட்ட விவாதம் வசனம் 3, ஆரம்பித்து வசனம் 16 முடிவடைகிறது. இந்த வேதபாகத்தில் இரண்டு முக்கியக் கருத்துக்கள் இருக்கின்றன.

1. சபை ஆதரித்து கவனிக்க வேண்டிய விதவைகளுக்குரிய அறிகுறிகள்.

2. வாலிப விதவைகளை சபை ஆதரித்து கவனிக்கக் கூடாது என்பதற்கான காரணங்கள்.

இ. அரசாங்கம் அல்லது சமூகப் பிரதிநிதிகள் ஆகியவற்றால் விதவைகள் கவனிக்கப்படாமலும் விதவைகளுக்கு ஆயுள் காப்பீடு வருமானம், சமூகப் பாதுகாப்பு அல்லது வேலை வாய்ப்புகளும் இல்லாத ஒரு காலக்கட்டத்தில் இந்த நிருபம் எழுதப்பட்டது என்பதை அறிந்து கொள்ளவேண்டியது அவசியம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய குடும்பம் அல்லது சபை அவர்களை ஆதரித்துக் கவனிக்காமல் இருக்கும் பட்சத்தில், அவர்கள் ஆதரவற்றவர்களாக விடப்படுகிறார்கள்.

1. உண்மையாகவே, தேவையில் இருக்கும் விதவைகளை உள்ளூர் சபை ஆதரிக்கவேண்டும் (5:3-8)

அ. வசனம் 3. "உத்தம விதவைகளாகிய விதவைகளைக் கனம்பண்ணு". "கனம்பண்ணு" என்றால் அவர்களை மிகுந்த விலைமதிப்புள்ளவர்களாகக் கருது, அவர்கள் மதிப்பிற்குரியவர்களாக இருக்கட்டும். அவர்களுக்கு மரியாதை செய்து பெருமைப்படுத்து என்று பொருள்படும். இது அவர்களைக் கவனித்து பொருளாதார உதவிகளைக் கொடு என்றும் பொருள்படும். "உத்தம விதவைகளாகிய விதவைகளை" எனப்படுபவர்கள். கீழ்க்கண்டவாறு இருப்பார்கள்:

1. அவர்களைப் பராமரிக்க பிள்ளைகள் அல்லது பேரப்பிள்ளைகள் அல்லது மற்ற யாராவது ஒருவரும் இல்லாமல் தனிமையில் இருப்பவர்கள்.

2. பொருளாதாரத் தேவையில் இருப்பவர்கள்.

ஆ. விதவைகளைப் பற்றிய இந்த கரிசனை பழைய ஏற்பாட்டில் மிக ஆழமாக வேர்கொண்டுள்ளது. (யாத்திராகமம் *22:22;* உபாகமம் *24:17; 19-21;* யோபு *29:13;* சங்கீதம் *68:5;* ஏசாயா *1:17*). அவ்வாறாகவே ஆதி சபையிலும் இருந்தது (அப்போஸ்தலர் *6:1-6; 9:36,39,41;* யாக்கோபு *1:27*).

இ. வசனம் 4. "விதவையானவளுக்குப் பிள்ளைகளாவது பேரன் பேத்திகளாவது இருந்தால்...." ஆகிலும் அவர்களுக்குக் கொடுக்க பிள்ளைகளாவது பேரன் பேத்திகளாவது அல்லது வேறு யாராவது ஒருவர் இருப்பார்களேயானால் உள்ளூர் சபை அவர்களுக்கு உதவி செய்யவும் பராமரிக்கவும் அவசியமில்லை.

விதவைகளும் உள்ளூர் சபையும் (1 தீமோத்தேயு 5:3-16)

அந்த விசுவாசிகளான உறவினர்கள், அவர்களுடையதேவபக்தியைச் செயல்முறைப்படுத்தி அவர்களுடைய தாய்மார்களையும், பாட்டிகளையும் அவர்கள் ஒருகாலத்தில் எவ்வாறு பராமரித்தார்களோ அவ்வாறே பிரதிபுகாரமாக அவர்களைக் கவனிக்க வேண்டும்.

ஈ. "தங்கள் சொந்தக் குடும்பத்தை தேவ பக்தியாய் விசாரித்து...." என்றால், விதவையான தாய்மார் அல்லது பாட்டி (அவர்கள் சொந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்) ஆகியவர்களுக்கு முதலாவது மரியாதை செய்து பொருளாதார உதவிகளைச் செய்து ஆதரிப்பதின் மூலமாக அவர்களுடைய கிறிஸ்தவத் தன்மையையும், தேவ பக்தியையும் வெளிப்படுத்த வேண்டும் என்று பொருள்படும். "பதில் நன்மைகள்" (வசனம் 4) என்றால் கடந்த காலத்தில் தாய் அல்லது பாட்டி அவர்களுக்குச் செய்ததற்குப் பதிலாக இப்பொழுது அவர்களுக்குச் செய்வது என்று பொருள்படும். அவர்களுக்குச் செய்யப்பட்டதை திரும்ப அவர்களுக்குச் செய்வது.

உ. வசனம் 4. "தேவனுக்கு முன்பாகப் பிரியமுமாயிருக்கிறது". இது ஒரு சமயம், மோசேக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய ஐந்தாம் கற்பனையிலிருந்து எடுக்கப்பட்டதாயிருக்கக் கூடும் (யாத்திராகமம் 20:12; மற்றும் எபேசியர் 6:2-3). "பிரியமுமாயிருக்கிறது" என்றால் மிகவும் கவர்ச்சிகரமாகவும், சன்மார்க்க நிலை அளவில் உயர்ந்ததுமாயிருக்கிறது என்று பொருள்படும். இது தேவனுடைய விருப்பத்திற்கு ஒத்ததாக இருக்கிறது என்றும் பொருள்படும்.

ஊ. வசனம் 5-6. "உத்தம விதவையாயிருந்து தனிமையாயிருக்கிறவள்...சுகபோகமாய் வாழுகிறவள்...."

உள்ளூர்சபையினால் ஆதரிக்கப்படவேண்டியவளுக்கும் அவ்வாறு செய்ய அவசியமில்லாதவளுக்கும் இங்கு வேறுபடுத்திக் காட்டப்பட்டுள்ளது.

1. ஆதரிக்கப்படவேண்டிய விதவை இவ்வாறு விவரிக்கப்படுகிறாள்:

(அ) பொருளாதார உதவி உண்மையிலேயே தேவைப்படும் நிலையில் இருக்கிறாள் (வசனம் 3).

(ஆ) யாரும் இன்றி தனிமையில் விடப்பட்டவள் - அவளுடைய கணவனுடைய மரணத்திற்குப் பின், அவளை ஆதரிக்கக் குடும்ப அங்கத்தினர் ஒருவரும் இல்லாமல் விடப்பட்டவள்.

(இ) அவளுடைய நம்பிக்கையை தேவன் மீது வைத்தவள் - அவள் தனக்கு தேவன் உதவிசெய்வார் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறாள். அவர் செய்வார் என்று திடநம்பிக்கையுடன் இருக்கிறாள்.

(ஈ) அவளுடைய நிர்ப்பந்தமான நிலையில் தேவன் உதவுமாறு இடைவிடாமல் (இரவும் பகலும்) ஜெபம் செய்கிறாள் (லூக்கா 2:36-38).

2. ஆதரவு கொடுக்க அவசியமில்லாதவள் கீழ்க்கண்டவாறு விவரிக்கப்படுகிறாள்:

(அ) பூலோக இன்பத்திற்காக வாழுகிறவள் - சுகபோகத்தில் ஜீவிக்கிறாள், சுய இச்சைக்காக வாழுகிறவள் மற்றும் வீணாக செலவு செய்பவள்.

(ஆ) உயிரோடே செத்தவள் - அவள் சரீரத்தில் உயிரோடு வாழ்ந்தாலும் ஆவியில் மரித்தவளாக இருக்கிறாள்.

**விதவைகளும்
உள்ளூர் சபையும்
(1 தீமோத்தேயு 5:3-16)**

ஏ. வசனம் 7. "அவர்கள் குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி இவைகளைக் கட்டளையிடு". "இவைகளைக் கட்டளையிடு" என்றால் இந்த அறிவுரைகளைக் கொடு என்று பொருள்படும். "குற்றஞ்சாட்டப்படாதவர்களாயிருக்கும்படி" என்றால் தவறு செய்து குறைகூற ஏதுவானவர்களாகாதபடிக்கு என்று பொருள்படும். இது அவர்களுடைய நடத்தை மற்றவர்கள் (விசேஷமாக புறம்பே இருப்பவர்களாலும் அவிசுவாசிகளாலும்) விவாதித்துப் பேசவும், சந்தேகப்படுவதற்கும் இடமளிக்கும் என்றும் பொருள்படும்.

ஏ. வசனம் 8. "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும் அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்". இது ஒரே வீட்டில் வாழும் (அதே குடும்பத்தைச் சேர்ந்த) குடும்ப அங்கத்தினர்களைக் குறிக்கும். தேவையிலிருக்கும் தாய் அல்லது பாட்டியை தாங்களே கவனிக்கும் நிலையிலிருக்கும் போது, அதை அசட்டை செய்து அல்லது பராமரிக்கும் பொறுப்பை உள்ளூர் சபை மீது வைத்திருக்கும் நபர்கள் இருந்திருக்கக் கூடும் என்று நாம் ஊகிக்கலாம்! இது விசுவாசத்தை மறுதலிப்பதற்கு சமம் (மிகவும் கீழ்த்தரமான நடத்தை, ஒரு அவிசுவாசியைவிட மோசமான பொறுப்பற்ற தன்மையைக் காட்டுகிறது) என்று அறிவிக்கப்படுகிறது.

2. வாழ்க்கையில் உண்மையாயிருக்கும் விதவைகளை உள்ளூர்சபை ஆதரிக்க வேண்டும் (5:9-10)

அ. வசனம் 9. "அறுபது வயதுக்குக் குறையாதவளும்.. விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும்". 9-10 வசனங்களில், உள்ளூர் சபையினால் ஆதரிக்கப்படவேண்டிய விதவைகளின் தகுதிகளின் அட்டவணையில் மேலும் கூடுதலான குறிப்புகளைச் சேர்த்துக் கூறுகிறார். "விதவைகளின் கூட்டம்" என்றால் ஜாபிதாவில் சேர்க்கக் கூடிய அல்லது அட்டவணைக்குட்படுத்த வேண்டிய சபையின் அலுவலக ஏட்டில் பதிவு செய்யும் ஒருவிதமான முறை என்று பொருள்படும். எல்லாவற்றிற்கு மேல் முதலாவது அந்த விதவை அறுபது வயதிற்குக் குறையாமல் இருக்க வேண்டும். ஒருவர் அறுபது வயதை அடையும்போது, அவர்கள் கிழப்பருவம் வந்துவிட்டதாகக் குறிக்கப்படும். கலாச்சார வழக்கத்தை இது வெளிப்படுத்துகிறது. இது மறுமணம் செய்வதைப் பற்றி சிந்திப்பதற்கு அப்பாற்பட்ட வயது என்பதையும் ஒருசமயம் வெளிப்படுத்துவது சாத்தியமாகும்.

ஆ. வசனம் 9. "...ஒரே புருஷனுக்கு மனைவியாயிருந்தவளுமாகி...." அவளை விதவையாக விட்டு மரித்துப்போன கணவனை மட்டும் ஒருமுறை திருமணம் செய்தவளாக இருந்தாள் என்று இது பொருள்பட அநேகமாக சாத்தியமாகும். எப்படியிருப்பினும், அவர்கள் திருமணமாகி வாழ்ந்த காலங்களில் அவள் அவனுக்கு உண்மையாயிருந்தாள் (கிறிஸ்தவர்களாக மாறின பின்பாவது) என்பதும் இத்துடன் சேர்க்கப்படும்.

இ. வசனம் 10. "....நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாய்..." உள்ளூர் சபையிலிருந்து ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்குரிய அட்டவணையில் சேர்க்கப்படுவதற்கு விதவைகளுக்குரிய மூன்றாவது தகுதியில், அநேகப் பிரிவுகள் இருக்கின்றன. "நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவள்" (நல்லபெயரை வாங்கியவள், நேரில் கண்டவர்களால், சாட்சியுடைவள்) என்பதில் கீழ்க்கண்டவைகள் சேர்க்கப்படும்.

விதவைகளும்
உள்ளூர் சபையும்
(1 தீமோத்தேயு 5:3-16)

1. பிள்ளைகளை வளர்த்தல் - இது வேதாகம அடிப்படையில் பெண்மையின் உயர்ந்த லட்சியத்தை வெளிப்படுத்துகிறது (2:15). இதில் அனாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதும் சேர்க்கப்படும்.

2. விருந்தோம்பல் - விருந்தினர்களை உபசரிப்பதில் பேர்பெற்றவளாக இருக்க வேண்டும். (அந்நியர்களை உபசரணையோடு வரவேற்றல் - 3:2; ரோமர் 12:13).

3. பரிசுத்தவான்களின் பாதங்களைக் கழுவுதல் - தூசுநிறைந்த சாலைகள் மற்றும் பாதரட்சை அணியும் பழக்கம் காரணமாக இது அவசியமானதாகிறது. (யோவான் 13:14; மற்றும் 1சாமுவேல் 25:41) விருந்தினர் வீட்டிற்குள் வரும்போது இது மரியாதையை வெளிப்படுத்த செய்யும் ஒரு வழக்கம். இது தாழ்மை மற்றும் ஆர்வத்துடன் வேலை செய்யும் ஊழியக்காரி என்பதை நிரூபிக்கும்.

4. தொல்லையில் இருப்பவர்களுக்கு உதவிசெய்தல் - இக்காரியமும், அவளுடைய பரந்த மனப்பான்மையையும், மற்றவர்கள் மீது அவளுக்கு இருக்கும் கரிசனையையும் காட்டுகிறது.

5. சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பிக்கிறாள் - "ஜாக்கிரதையாய்" என்றால் அர்ப்பணிப்புடன், கருத்துடன் என்று பொருள்படும். அநேகமாக செய்யக்கூடிய ஒவ்வொரு நற்கிரியையும் ஆவலுடன் செய்வாள் என்று யாவராலும் அறியப்பட்டிருந்தாள் என்று பொருள்படும்!

ஈ. ஆகவே (1) தன்னந்தனியாக விடப்பட்டு, பொருளாதார தேவையில் உள்ள, (2) அவர்களுடைய நம்பிக்கையை தேவனிடத்தில் வைத்து, இடைவிடாமல் ஜெபிப்பவர்கள், (3) அறுபது வயதுக்குக் குறையாமல், அவர்களுடைய கணவனிடம் உண்மையாயிருந்தவர்கள், (4) அவர்களுடைய நற்கிரியைகளின் நிமித்தம் யாவராலும் அறியப்பட்டவர்கள் ஆகிய இத்தகுதியையுடையவர்கள் பொருளாதார வகையில் ஆதரிக்கப்பட, உள்ளூர் சபை அட்டவணையில் எழுதப்படலாம்! இவர்கள் வீணலுவற்காரிகளாகவும், அலப்புகிறவர்களாகவும், சுய இன்பத்தில் மூழ்குகிறவர்களாகவும், வீணாக விரயம் செய்கிறவர்களாகவும் இராமல், உதவி செய்கிறவர்கள் மற்றும் ஆர்வமுள்ள ஊழியக்காரிகள் என்று யாவராலும் நன்றாக அறியப்பட்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

3. உள்ளூர் சபை இளவயதுள்ள விதவைகளை ஆதரிக்கக் கூடாது (5:11-15)

அ. வசனம் 11. "இளவயதுள்ள விதவைகளை அதிலே சேர்த்துக் கொள்ளாதே. ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவுக்கு விரோதமாய்க் காமவிகாரங்கொள்ளும்போது, விவாகம் பண்ண மனதாகி, முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே...." இளவயதுள்ள விதவைகளின் காமவிகாரம் அவர்கள் மறுமணம் புரிய, விருப்பத்தை உண்டாக்கிவிடும் என்று இது பொருள்படும். இக்காரணத்தினால், விதவைகளின் பட்டியலில், பொருளாதார உதவி பெற்றுக் கொள்ளும்படியாக இவர்களை வைக்கக் கூடாது. (அவர்களுக்கு மறுத்துவிடு, தள்ளிவிடு). அவர்கள் விதவைகளாகவே நிலைத்திருந்தால், அவர்களுடைய எல்லா நேரத்தையும், கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும் அர்ப்பணிக்க முடியும். ஆகவே அவர்கள் அநேகமாக முன்பிருந்ததைவிட சந்தோஷமாக இருக்க முடியும் (1கொரிந்தியர் 7:8-9; 39-40).

விதவைகளும் உள்ளூர் சபையும் (1 தீமோத்தேயு 5:3-16)

ஆ. வசனம் 12. "முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே, ஆக்கினைக்குட்படுவார்கள்". "ஆக்கினை" என்றால் தேவன் இந்தக் காரியத்தைக் கவனமாக விசாரித்து, குற்றம் செய்யப்பட்டதைக் கண்டறிந்ததினால், அவரால் நியாயந்தீர்க்கப்பட்டு, தண்டிக்கப்பட தீர்மானம் எடுக்கப்படுகிறதென்று, இது பொருள்படும். "முதலில் கொண்டிருந்த விசுவாசத்தை விடுவதினாலே" என்றால் இரட்சிப்புக்காகக் கிறிஸ்துவைச் சார்ந்து இருந்ததை அவர்கள் முறித்துப் போடுகிறார்கள் (புறம்பே தள்ளி விட்டனர், மீறுகிறார்கள்). ஒரு இளம் விதவை கிறிஸ்துவின் மீதுள்ள தன் விசுவாசத்தைப் புறம்பே தள்ளிவிட்டு, விசுவாசத்தில் இராத ஒருவரைத் திருமணம் செய்யும்போது இது நடைபெறுகிறது. அவள் கிறிஸ்துவை சார்ந்து, அவரில் நம்பிக்கை வைத்திருந்ததை புறம்பே தள்ளிவிட்டு, அவளுடைய பாலின இச்சைகள் மேற்கொள்ள தன்னை மேற்கொள்ள அனுமதிக்கிறாள்.

இ. வசனம் 13. "அதுவுமல்லாமல், அவர்கள் சோம்பலுள்ளவர்களாய் வீடு வீடாய்த் திரியப் பழகுவார்கள். சோம்பலுள்ளவர்களாய் மாத்திரமல்ல, அலப்புகிறவர்களாயும் வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்". சபையினால் ஆதரிக்கப்பட வேண்டியவர்களின் அட்டவணையில் சேர்க்கக் கூடாமல் இருக்க வேறுபல காரணங்களும் இருக்கின்றன. இந்த இளம் விதவைகள் சோம்பேறிகளாய் இருக்கப் பழகி, வீடு வீடாகச் சென்று (விசுவாசிகளின்) அவர்களுடைய சொந்த நேரத்தையும் அவ்வாறாகவே விசுவாசிகளின் நேரத்தையும் வீணாக்குவார்கள்.

ஈ. அவர்கள், "அலப்புகிறவர்களாயும், வீணலுவற்காரிகளாயும் தகாத காரியங்களைப் பேசுகிறவர்களாயுமிருப்பார்கள்". அவர்கள் வீடு வீடாய் செல்லும் போது, அவர்கள் மதியற்றதும், முட்டாள்தனமான கவிசேஷ சத்தியங்களுக்கும், வேத வசனங்களுக்கும் நேர்மாறானவைகளையும் பேசுவார்கள். இவர்கள் கள்ளப்போதகர்களைப்போல மதியற்ற, அர்த்தமற்ற வார்த்தைகளைப் பேசி, சபையில் அபிப்பிராய பேதங்களையும், வேற்றுமைகளையும் சண்டைகளையும் உண்டாக்குவார்கள் மற்றும் சிலர் விசுவாசத்தை புறக்கணிப்பதற்கும் காரணமாயிருப்பார்கள் *(1:6-7; 4:7; 6:3-4, 20-21)*.

உ. வசனம் 14. "ஆகையால் இளவயதுள்ள விதவைகள் விவாகம் பண்ணவும், பிள்ளைகளைப் பெறவும், வீட்டை நடத்தவும், விரோதியானவன் நிந்திக்கிறதற்கு இடமுண்டாக்காமலிருக்கவும் வேண்டுமென்றிருக்கிறேன்". வயதுசென்ற விதவைகள் அவர்கள் வாழ்நாள் முழுவதும் செய்த காரியத்தை, இளம் விதவைகள் செய்வதற்கு ஊக்கப்படுத்த வேண்டும். முன்பு கூறப்பட்டவைகளிலிருந்து, மற்றொரு விசுவாசியை திருமணம் செய்து கொள்ள வேண்டுமென்பதும் இதில் அடங்கும். இதை அவர்கள் செய்தார்களேயானால், விரோதியானவன் (சாத்தான் மற்றும் அவனுடைய பிசாசுகள்) சமுதாயத்திலுள்ள மற்றவர்கள் மூலமாக விதவைகளையும் சபையையும் நிந்தித்துப் பேச முடியாது. "நிந்திப்பது" என்றால் தூஷிப்பது, தவறு செய்ததற்காக அவமதித்துப் பேசுவது என்று பொருள்படும்.

ஊ. வசனம் 15. "ஏனெனில் இதற்கு முன்னே சிலர் சாத்தானைப் பின்பற்றி விலகிப் போனார்கள்". ஏற்கனவே சில இளம் விதவைகள் அவர்களுடைய பாலின இச்சையின் காரணமாக, அவிசுவாசிகளை விவாகம்பண்ணி, விசுவாசத்தை விட்டு விலகிப் போனார்கள். இது ஏற்கனவே வெளியேயுள்ள சமுதாயம் சபையை (மற்றும் தவறின பெண்களையும்) நிந்திக்க இடமுண்டாக்கியது.

**விதவைகளும்
உள்ளூர் சபையும்
(1 தீமோத்தேயு 5:3-16)**

எ. ஆகவே சபையினால் ஆதரிக்கப்பட வேண்டியவர்களின் ஜாபிதாவில் இளம் விதவைகளை சேர்க்கக் கூடாது என்பதற்கு அநேகக் காரணங்கள் இருக்கின்றன.

1. அவர்களுடைய காம விகாரம், கிறிஸ்துவுக்கு அவர்கள் அர்ப்பணித்த விசுவாசத்தை மேற்கொள்ளச் செய்கிறது.

2. அவர்கள் சோம்பலுள்ளவர்களாகி வீடு வீடாகச் சென்று சுவிசேஷத்திற்கும், வேதவசனங்களுக்கும் எதிரான மதிகெட்ட அர்த்தமற்ற வார்த்தைகளைப் பேசப் பழகுவார்கள். இக்காரணங்களினால், சபையிலுள்ள, ஆதரிக்கப்படவேண்டியவர்களின் அட்டவணையில் இவர்களை வைக்கக் கூடாது. அவர்கள் மற்றொரு விசுவாசியை மணந்துகொண்டு, பிள்ளைகளைப் பெற்று, அவர்களுடைய சொந்த குடும்பத்தை நிர்வாகம் செய்யக் கற்றுக் கொள்ள வேண்டும்.

4. விசுவாசிகளான விசுவாசிகள், அவர்கள் குடும்பங்களில், கிழப்பருவம் அடைந்த விதவைகளைப் பராமரிக்க வேண்டும் (5:16)

அ. "விசுவாசியாகிய.....ஒருத்தியிடத்தில் விதவைகளிருந்தால் அவர்கள் இவர்களுக்கு உதவி செய்யக் கடவர்கள்". பவுல் இப்பொழுது சபையிலுள்ள உத்தம விதவைகளின் பராமரிப்பைக் குறித்து, அவருடைய அறிவுரைகளுக்குத் திரும்புகிறார். *(5:3-10)*. சபையிலுள்ள சில பெண்கள், சபையைச் சார்ந்திராமல் தாமாகவே, அவர்களுடைய விதவையான தாய்மார்கள் மற்றும் பாட்டிகளைக் கவனித்துக் கொள்ளக் கூடியவர்களாயிருந்தார்கள் என்று இது அநேகமாகப் பொருள்படும் *(அப்போஸ்தலர் 16:14-15,40; மற்றும் 17:4,12)*.

ஆ. அவர்கள் இதைச் செய்ய உற்சாகப்படுத்தப்படுகிறார்கள் அல்லது ஏற்கனவே செய்து கொண்டிருந்தால் தொடர்ந்து செய்யக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஏனெனில் இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

1. அவர்களால் உள்ளூர் சபை பாரம்படாமல் இருக்கும்.

2. எனவே உண்மையில் தேவையில் இருப்பவர்களுக்கும், அவர்களுக்கு உதவி செய்ய ஒருவருமே இல்லாமல் இருப்பவர்களுக்கும் சபை உதவி செய்யக் கூடியதாக இருக்கும்!

முடிவுரை

அ. உள்ளூர் சபை மற்றும் விதவைகள் தொடர்பான பவுலுடைய அறிவுரைகள், அநேக கலாச்சாரங்களுள்ள சமுதாயம் மற்றும் தேசங்களுக்கும் ஆதி சபையின் காலங்களில், அவைகள் இருந்தது போலவே, இன்றும் அர்த்தமுள்ளதாக இருக்கிறது. ஆகிலும் தொழில்மயமான மற்றும் நவீனகால சமுதாயங்களில், முற்றிலும் தனியாகவும், தேவையிலும் இருக்கும் விதவைகள் தற்சமயம் பராமரிக்கப்படுகிறார்கள். இது அநேக சமயங்களில் உறவினர்களையும், உள்ளூர் சபையையும் இந்த பாரத்திலிருந்து விடுவிக்கிறது.

ஆ. இருந்தபோதிலும், இந்த கொள்கைகள் இன்னமும் செயல் முறைப்படுத்தப்படுகிறது. உள்ளூர் சபை, அறுபது வயதிற்கு மேலான கிழப்பருவமடைந்து கீழ்க்கண்ட தகுதிகளையுடைய விதவைகளை அட்டவணைப்படுத்தி ஆதரிக்க வேண்டும்:

1. உண்மையில் வேறு ஒருவரும் இல்லாமல் தேவையிலிருப்பவர்கள்.

**விதவைகளும்
உள்ளூர் சபையும்
(1 தீமோத்தேயு 5:3-16)**

2. அவர்களுடைய கணவன்மார்களுக்கு உண்மையாயிருந்தவர்கள் மற்றும் எல்லாவிதமான நற்கிரியைகளுக்கும் அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

3. இளம் வயதுள்ள விதவைகள் இந்த அட்டவணையில் சேர்க்கப்படக்கூடாது. உள்ளூர் சபையினால் ஆதரிக்கப்படவும் கூடாது.

4. தாங்களாகவே சுதந்திரமாகச் செய்யக் கூடிய விசுவாசிகளான பெண்கள், வேறு ஒருவரும், கவனிப்பதற்கு இல்லாமல், தேவையிலிருக்கும் அவர்களுடைய விதவையான தாய்மார்கள் மற்றும் பாட்டிகளைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

போதகர்கள்
(1தீமோத்தேயு 5:17-25)

முன்னுரை

அ. இந்தக் குறிப்புவரை, கீழ்க்கண்ட குறிப்புகள் சம்பந்தமான அறிவுரைகளைப் பவுல் அவருடைய நிருபத்தில் கொடுக்கிறார்.

1. ஜெபத்தின் முக்கியத்துவம் (2:1-8)

2. பெண்களுக்குரிய தகுதியான நடத்தைப் பண்புகள் (2:9-15)

3. போதகர்கள், உதவிக்காரர்கள் மற்றும் உதவிக்காரிகளுக்கான தகுதிகள்.

4. எபேசுவில் அவருடைய சொந்த வாழ்க்கையும், ஊழியமும் (4:1-5:2).

5. விதவைகளைப் பற்றிய ஆலோசனை (5:3-16).

ஆ. இப்பொழுது அவர், விசுவாசிகளின் உள்ளூர் சபை போதகர்கள் பக்கமாக அவருடைய கவனத்தைத் திருப்புகிறார். அவர் போதகர்களைக் குறித்துக் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

1. அவர்கள் கனத்திற்குப் பாத்திரமானவர்கள்.

2. இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இல்லாமல் அவர்கள் பாவம் செய்தவர்களென்று குற்றஞ்சாட்டப்படக்கூடாது.

3. அவசரமாக அவர்கள் நியமிக்கப்படக்கூடாது.

1. போதகர்கள் கனத்திற்குப் பாத்திரமானவர்கள் (5:17-18)

அ. வசனம் 17. "நன்றாய் விசாரணை செய்கிற மூப்பர்களை......இரட்டிப்பான கனத்திற்குப் பாத்திரராக எண்ணவேண்டும்". "மூப்பர்கள்" என்பவர்கள் போதகர்கள். ஆதி சபையில், சபைகளை நிறுவின சுவிசேஷ ஊழியர்களால் இவர்கள் நியமிக்கப்பட்டார்கள் (அப்போஸ்தலர் 14:23). "நன்றாய் விசாரணை செய்கிற" என்றால், தலைமை தாங்கி நடத்துகிற, நன்றாய் ஆளுகை செய்கிற என்று பொருள்படும். உள்ளூர் சபையின் நடவடிக்கைகளை மேற்பார்வையிடுவது (நிர்வகிப்பது) (1தீமோத்தேயு 3:5 வசனங்கள்) ஆதிசபையிலிருந்த போதகர்களின் கடமையாக இருந்தது.

ஆ. இப்படிப்பட்ட நபர்கள் "இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரர்". உள்ளூர் சபையின் விசுவாசிகளுக்கு இந்தப் போதகர்கள் மிகுந்த விலைமதிப்புக்குரியவர்களாக இருக்கிறார்கள். ஆகவே சபை அவர்களைக் கீழ்க்கண்டவாறு செய்து கனப்படுத்த வேண்டும்.

1. அவர்களுடைய பொருளாதார மற்றும் சரீர தேவைகளைப் போதுமானதாகவும், சரியானபடியும் கொடுக்க வேண்டும் (1கொரிந்தியர் 9:7-14).

2. அவர்களைக் கனப்படுத்தி, உயர்ந்த மதிப்பிற்குரியவர்களாக வைத்து, அவர்களுடன் சமாதானத்துடன் வாழ்ந்து, அவர்களுடைய அறிவுரைகளை ஏற்றுக் கொண்டு, அவர்களுடைய சன்மார்க்க நடத்தை மற்றும் வாழ்க்கை நடையைப் பின்பற்ற வேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:12-13; எபிரெயர் 13:7; 1பேதுரு 5:5).

இ. அவருடைய விவாதத்திற்கு ஆதாரமாக, பழைய ஏற்பாட்டு வேத வசனத்தையும், கர்த்தராகிய இயேசுவின் மேற்கோள்களிலிருந்து ஒன்றையும் பவுல் பயன்படுத்துகிறார்:

போதகர்கள்
(1தீமோத்தேயு 5:17-25)

1. "போரடிக்கிற மாட்டை வாய்க் கட்டாயாக" (உபாகமம் 25:4).

2. "வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனாயிருக்கிறான்" (லூக்கா 10:7).

ஈ. வசனம் 17. "...விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப்படுகிறவர்களை..." உள்ளூர் சபையின் நடவடிக்கைகளை நிர்வாகம் செய்வதே (ஆளுகை செய்வது) ஆதிசபையிலிருந்த சில போதகர்களின் முதன்மையான கடமையாயிருந்தது. அதே நேரத்தில் மற்றவர்கள் முதலாவது பிரசங்கிப்பவர்களாகவும் போதிப்பவர்களாகவும் ஊழியம் செய்தார்கள். இது பெரிய சபைகளில் நிச்சயமாகப் பொருத்தமாக இருந்தது. ஆனால் சுவிசேஷ ஊழியர்களின் சபை அல்லது சிறிய சபைகளில் அதிக சாத்தியமானதாகக் காணப்படவில்லை.

உ. "பிரசங்கிப்பது" என்றால் புத்திசொல்லுவது, கேட்டுக்கொள்வது, வேதவசனங்களுக்குக் கீழ்ப்படியும்படி வற்புறுத்திச் சொல்வது, விசுவாசிகளின் அன்றாட வாழ்க்கையில் வேத வசனங்களைச் செயல்முறைப்படுத்த உதவுவது என்று பொருள்படும். "போதிப்பது" என்றால் வேதவசனங்களின் மொத்தக் கருத்தையும் அதன் பொருளையும் அதன் நோக்கத்தையும் போதிப்பது என்று பொருள்படும் (1தீமோத்தேயு 3:2; 4:13)

ஊ. ஆதிச்சபையில் இருந்த போதகர்கள், உள்ளூர் சபையின் காரியங்களை நிர்வாகம் செய்வது போதிப்பது, பிரசங்கிப்பது ஆகியவற்றை செய்வது தவிர கீழ்க்கண்டவற்றையும் செய்தார்கள்.

1. உள்ளூர் சபை அங்கத்தினர்களுக்கு மேய்ப்பர்களாக ஊழியம் செய்தார்கள் (பாதுகாத்தனர், பயிற்றுவித்தனர், திருத்தினார்கள், நீதியில் கண்டித்தார்கள்) (அப்போஸ்தலர் 20:28; 1பேதுரு 5:2).

2. கொள்கைகள் சம்பந்தமாக தவறு செய்வதிலிருந்து விசுவாசிகளின் கூட்டத்தைப் பாதுகாத்தார்கள் (அப்போஸ்தலர் 20:28-31; 1தீமோத்தேயு 4:1-2,6).

3. கிறிஸ்துவுடன் அவர்களுடைய வாழ்க்கை நடத்துவதில் வளர்ந்து முதிர்ச்சியடைகிறார்கள் என்பதைக் கவனிப்பது மற்றும் ஊழியத்தின் வேலையில் உள்ளூர் சபையை ஆயத்தம் செய்தார்கள் (எபேசியர் 4:11-15). இக்காரணங்களினால் போதகர்களுக்கு அவர்களுடைய தேவைகள் போதுமான அளவிற்கு தகுதியானபடி சந்திக்கப்பட வேண்டும் மற்றும் உள்ளூர் சபை விசுவாசிகளால் உயர்வாக மதிக்கப்பட வேண்டும்.

2. போதகர்களுக்கு எதிரான குற்றச்சாட்டை இரண்டு அல்லது மூன்று சாட்சிகள் இருந்தாலொழிய ஏற்றுக் கொள்ளப்படக் கூடாது (5:19-21)

அ. வசனம் 19. "மூப்பனானவனுக்கு விரோதமாக ஒருவன் செய்யும் பிராதை இரண்டு, மூன்று சாட்சிகள் இல்லாமல், நீ ஏற்றுக் கொள்ளக் கூடாது". "மூப்பனானவனுக்கு" போதகராக(கள்) ஒரு ஆவிக்குரிய தலைவராக இருக்கலாம். "ஒருவன் செய்யும் பிராதை" என்றால் ஒரு குற்றச்சாட்டை மதசம்பந்தமான நியாய சபைக்கு முன் கொண்டுவருவது; துன்மார்க்கம், உண்மைக்குப் புறம்பான செய்கைகள், பேராசை அல்லது மேலான அதிகாரிபோல் நடந்து கொள்வது போன்ற குற்றச்சாட்டுகளைக் கூறுதல். ஒரு போதகருக்கு விரோதமான குற்றச்சாட்டை இரண்டு அல்லது மூன்று சாட்சிகளால் உறுதியாக்கப்பட்டாலன்றி கொண்டு வரக்கூடாது (உபாகமம் 19:15; உபாகமம் 17:6).

போதகர்கள்

(1தீமோத்தேயு 5:17-25)

ஆ. வசனம் 20. "பாவம் செய்தவர்களை எல்லாருக்கும் முன்பாகக் கடிந்துகொள்". "பாவம்" என்றால் சன்மார்க்கக் குறியீட்டை தவறிவிடுவது மற்றும் நித்திய ஜீவனாகிய ஈவை சுதந்தரிப்பதிலிருந்து தள்ளப்படுவது, தேவனுடைய சன்மார்க்க கற்பனைகளுக்கு எதிராகப் பாவம் செய்வது, சன்மார்க்க விஷயங்களில் தவறுவது என்று பொருள்படும். "எல்லாருக்கும் முன்பாகக் கடிந்து கொள்" என்றால் சன்மார்க்க சத்தியங்களில் தவறிழைத்ததில் சம்பந்தப்பட்ட போதகர்கள், மற்ற எல்லா போதகர்கள் முன்பாகவும் கடிந்து கொள்ளப்படவேண்டும். (கண்டனம் செய்யப்படவேண்டும், குற்றத்தைச் சுட்டிக்காட்ட வேண்டும், எச்சரிக்கப்படவேண்டும், ஒழுங்குக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்படவேண்டும்). அந்த நபர் எல்லா விசுவாசிகளுக்கும் முன்பாகவும் கடிந்து கொள்ளப்பட வேண்டுமென்று சிலர் நினைக்கிறார்கள்.

இ. வசனம் 20. "மற்றவர்களுக்குப் பயமுண்டாக்கும்படி..." "மற்றவர்களை" என்றால் அநேகமாக அந்த சபையிலுள்ள அல்லது சுற்று வட்டாரத்திலுள்ள சபைகளிலுள்ள மற்ற போதகர்களைக் குறிப்பிடக் கூடும். இவ்வாறு எல்லாருக்கும் முன்பாகக் கடிந்து கொள்வது, சன்மார்க்க நடத்தையில் தவறுவதில் இணங்கிக் கொடுக்கும் தன்மையையுடைய ஆவிக்குரிய தலைவர்களுக்கு, நிச்சயமாக எச்சரிக்கையாக இருந்து அவர்கள் தவறுவதிலிருந்து தடுக்க ஏதுவாக இருக்கும்! சன்மார்க்க தவறுகளில் மிகச்சிறிய அளவில் ஈடுபாடுடையவர்கள் மற்றும் அதைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருப்பவர்கள், அவர்களுடைய கர்த்தரிடத்தில் விரைவாகத் திரும்பி வந்து சரிசெய்ய அது நிச்சயமாகக் காரணமாயிருக்கும்.

ஈ. வசனம் 21. "நீ பட்சபாதத்தோடே ஒன்றும் செய்யாமலும், விசாரிக்கும் முன் நிர்ணயம் பண்ணாமலும்....". ஒரு போதகருக்கு விரோதமான குற்றச்சாட்டு சம்பந்தமாக அவனுடைய சொந்த தப்பான அபிப்பிராயங்களையோ அல்லது உணர்வுகளையோ, தீமோத்தேயு அனுமதிக்கக் கூடாது. நீதியின் அளவுகோல்கள் ஒருபக்கமாகவோ அடுத்த புறமாகவோ சாய்வதற்கு, அவன் காரணமாயிருக்கக்கூடாது. ஒரு போதகரை யாவருக்கும் முன்பாகக் கடிந்து கொள்ள வேண்டும் என்ற தீர்மானம் இரண்டு மூன்று சாட்சிகளின் அறிக்கையின் அடிப்படையின் மீது மட்டும் இருக்கவேண்டும்.

உ. வசனம் 21. "தேவனுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும், தெரிந்து கொள்ளப்பட்ட தூதருக்கும் முன்பாக உறுதியாய்க் கட்டளையிடுகிறேன்". ஒரு போதகர் சன்மார்க்கத்தில் தவறின காரிய சம்பந்தமாக தீமோத்தேயு ஒரு நியாயாதிபதியாக நிற்க வேண்டியதாயிருக்கிறது. ஆகிலும், அவன் ஒருநாள், பிதாவாகிய தேவன், இயேசு கிறிஸ்து மற்றும் தெரிந்து கொள்ளப்பட்ட தூதர்களுக்கு முன்பாக நின்று, அவனைக் குறித்து கணக்குக் கொடுக்க வேண்டுமென்று, பவுல் அவனை எச்சரிக்கிறார். (2கொரிந்தியர் 5:10; ரோமர் 14:10-12). ஆகவே அவன் ஒருவருக்கும் தனிச் சலுகை காட்டாமலும் பட்சபாதம் இல்லாமலும் நியாயம் தீர்ப்பது அவனுக்குநன்மையாக இருக்கும்.

3. போதகர்கள் அவசரமாக நியமிக்கப்படக்கூடாது (5:22-25)

அ. வசனம் 22. "ஒருவன் மேலும் சீக்கிரமாய்க் கைகளை வையாதே". இது போதகர்களுடைய அபிஷேகத்தைக் குறிப்பிடுகிறது.

போதகர்கள்
(1தீமோத்தேயு 5:17-25)

புறஜாதிகள், மற்றும் சுவிசேஷ ஊழியர்கள் சபைகளின் போதகர்கள் மற்றும் சபை அலுவலக ஊழியர்கள், தூர இடங்களுக்கு அனுப்பப்படும் சுவிசேஷ ஊழியர்கள் மற்றும் போதகர்கள் ஆகிய இவைகளை அங்கீகரிப்பதைக் காட்டுவதற்காக அவர்களுடைய கரங்களை அவர்கள் மீது வைப்பார்கள் (1தீமோத்தேயு 4:14;1தீமோத்தேயு 1:6)

ஆ. "ஒருவன் மேலும் சீக்கிரமாய் கைகளை வைக்காதே", என்று பவுல் கூறும்போது, கீழ்க்கண்ட காரியங்களைக் கவனியாமல் ஒரு போதகரை நியமிக்கக் கூடாது என்று பொருள்படக் கூறுகிறார்:

1. வழிகாட்டும் வேதவசனங்களைப் பின்பற்ற வேண்டும் (இக்காரியத்தில் அவருடைய அறிவுரைகள்).

2. அந்த நபருடைய சன்மார்க்க நடத்தை, ஆவியில் முதிர்ச்சியடைந்த கால அளவு மற்றும் தனிப்பட்ட முறையில் சோதித்து ஆராய்ந்து அறிதல்.

இ. வசனம் 22. "மற்றவர்கள் செய்யும் பாவத்துக்கு உடன்படாதே. உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்". சபை அலுவலக அதிகாரிகள், சுவிசேஷ ஊழியர்கள், மற்ற போதகர்கள் ஆகிய இவர்கள் வேத வசனத்திலுள்ள வழிகாட்டும் குறிப்புகள் மற்றும் ஒரு நபரின் ஆவிக்குரிய முதிர்ச்சி ஆகியவைகளைக் கருதாமல் ஒரு போதகரை ஒரு சபையின் ஆவிக்குரிய தலைவராக நியமிக்கும்போது, அந்த நபர் செய்யும் எந்த பாவத்திலும் அவர்கள் பங்கு கொள்ளுகிறார்கள் (1தீமோத்தேயு 3:6).

ஈ. "உன்னைச் சுத்தவானாகக் காத்துக் கொள்" என்றால் தகுதியற்றவர்களாகவும், ஒரு போதகராக இருப்பதற்குரிய போக்கிய தாம்சம் பெற்றிராதவருமாகிய ஒருவரைத் தேர்ந்தெடுப்பதிலும் அபிஷேகம் செய்வதிலும் பங்கெடுப்பதற்கு மறுத்துவிட வேண்டுமென்று இது பொருள்படும்.

உ. வசனம் 24. "சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து நியாயத்தீர்ப்புக்கு முந்திக் கொள்ளும். சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின் தொடரும்". இது கீழ்க்கண்டவாறு பொருள்படும்:

1. பாவங்களும், ஆவிக்குரிய முதிர்ச்சியும் பெறாமல் போதகர்களாக விரும்பும் சிலரின் பாவங்களும், முதிர்ச்சிபெறாத நிலையும், கேள்விக்கு இடமில்லாமல், அபிஷேகம் செய்யப்படுவதற்கும், போதகர் பதவியில் இருக்கும் நபர்களாக இல்லாதபடி புறக்கணிக்கப்படுவதற்கு ஏதுவாக அந்த அளவிற்கு வெளிப்படையாக இருக்கிறது.

2. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய நபர்களுக்குக் கொடுக்க வேண்டிய காத்திருக்கும் காலத்தை வலியுறுத்துவீர்களானால், போதகர்களாக விரும்பும் மற்றவர்களுடைய பாவங்களும், ஆவிக்குரிய முதிர்ச்சி பெறாத நிலையும் வெளிப்படுத்தப்படும் (மத்தேயு 7:20).

ஊ. வசனம் 25. "அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும். அப்படியிராதவைகளும் மறைந்திருக்கமாட்டாது". மறுபக்கம் பார்ப்பீர்களானால், போதகர்களாகத் தகுதி பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் நற்கிரியைகளும், ஆவிக்குரிய முதிர்ச்சியும் எல்லோரும் காணத்தக்கதாக வெளிப்படையாக இருக்கும். அது மறைந்து இருப்பதுக் கூடாத காரியம். இவர்களே போதகர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அபிஷேகம் செய்யப்படப்போகிறவர்கள்.

போதகர்கள்

(1தீமோத்தேயு 5:17-25)

ஊ. வசனம் 23. "நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல்....கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள்". "திராட்சரசம்" என்று இங்கு பயன்படுத்தப்பட்ட கிரேக்கச் சொல் அநேக நேரங்களில் புளிக்க வைக்காத திராட்ச ரசத்திற்கு பயன்படுகிறது. இயேசுவின் காலத்தின் திராட்சரசத்திற்கு இது உண்மையாயிருக்கிறது என்று பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. தீமோத்தேயுவுக்குப் பவுல் இதைக் குறித்து சொல்லுகிறார். ஏனெனில் தீமோத்தேயுவுக்கு வயிற்றில் பிரச்சனை இருந்ததாக தெரிகிறது. அநேகமாக இது அசுத்தமான குடிநீரினால் நேரிட்டிருக்கலாம். காரியம் எப்படியிருப்பினும் புளித்த குடிபானங்களை பயன்படுத்துவது சுவிசேஷ ஊழியன் மற்றும் சபையின் ஆவிக்குரிய தலைவனுடைய பண்பிற்கு அப்பாற்பட்டது.

முடிவுரை

அ. அபிஷேகம் செய்யப்பட்டு சபையில் போதகர் பதவியில் வைக்கப்பட்டவர்களைப் பற்றிய அநேகக் காரியங்களைப் பவுல் நமக்குக் கூறியிருக்கிறார்:

1. அவர்கள் விசுவாசிகளின் ஐக்கியத்தில் உள்ளவர்களால் உயர்வாக மதிக்கப்படவேண்டும். மற்றும் அவர்களுடைய பொருளாதார மற்றும் சரீர தேவைகள் போதுமான அளவு சந்திக்கப்படவேண்டும்.

2. இரண்டு, மூன்று சாட்சிகள் இல்லாமல் ஒரு போதகருக்கு விரோதமான சன்மார்க்க சம்பந்தமான குற்றச்சாட்டை ஏற்றுக் கொள்ளக் கூடாது. அது உண்மை என்று நிரூபிக்கப்பட்டால், அந்த போதகர் அவருடைய எல்லா சக ஊழியர்களுக்கும் முன்பாகவும், அவர் கண்டிக்கப்படவேண்டும்.

3. ஒரு போதகருக்குரிய தகுதிகளைப் பெற்று, அதிக காலமாக நிரூபிக்கப்பட்டு, ஆவியில் முதிர்ச்சியடைந்த நபர்கள் மட்டும் போதகர் பதவிக்கு தகுதியானவர்களாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

பண ஆசை
(1 தீமோத்தேயு 6:6-10)

முன்னுரை

அ. இந்த நிருபத்தில் அவனுடைய ஊழியத்தை குறித்து, தீமோத்தேயுவுக்குப் பவுல் அறிவுரைகள் கொடுக்கிறார். விதவைகள், மூப்பர்கள் மற்றும் அடிமைகள் சம்பந்தப்பட்ட அறிவுரைகளையும் அவர் கொடுக்கிறார். அதன்பின், கள்ளப் போதகர்கள் பக்கமாக அவருடைய கவனத்தைத் திருப்புகிறார். அநேகர், தேவ பக்தி பொருளாதார லாபத்திற்கு ஒரு வழியாக இருப்பதாக நினைக்கின்றனர் என்று கூறுகிறார். அடுத்து தேவ பக்திக்கும், பண ஆசைக்கும் இடையே ஒரு சம்பந்தமுமில்லை என்று தொடர்ந்து விவரிக்கிறார்.

ஆ. இந்த உலகத்திலுள்ள மனிதர்கள், பணத்தையும், பணத்தினால் வாங்கும் பொருட்களையும் நேசிக்கின்றனர்: வெளிநாட்டு உணவு, களியாட்டுகள், பிரயாணம், அழகிய கற்பனையில் எழுந்த வீடுகள், மற்றும் வீட்டு சாமான்கள், விலையேறப்பட்ட நகைகள் மற்றும் ஆடைகள், புகழ், மற்றும் செல்வாக்கு முதலியன. ஆகிலும் அநேகர் இந்த பண ஆசை அவர்களுடைய திருமணங்களையும், குடும்பங்களையும், சிநேகிதர்கள், வியாபாரத்தில் அவர்கள் சக ஊழியர்கள் ஆகியவர்களுடன் உள்ள தொடர்புகளையும், அவர்களுடைய உடல் நலத்தையும் அழித்து விடுகிறதென்பதைக் கண்டுள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக, இது கிறிஸ்துவில் ஒரு விசுவாசிக்கு இருக்கும் விசுவாசத்தையும் அழித்து விடுகிறது!

1. தேவபக்தி மற்றும் மன நிறைவு ஆகியவைகளுடன் பண ஆசைக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை (6:6-8)

முன்னுரை

அ. பவுல் இந்த நிருபத்தை எழுதின போது, தீமோத்தேயு, எபேசுவில் இருந்தான். அங்கிருந்த பொய்ப் போதகர்கள், பொருளாதார லாபத்தை நோக்கமாகக் கொண்டு, "தேவ பக்தியின் வேஷத்தை" செயல்முறைப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய திட்டம் பேராசையாயிருக்கிறது. அவர்களுடைய செல்வம் அவர்களுடைய போதனையை தேவன் அங்கீகரித்துள்ளார் என்பதற்கு அடையாளம் என்று போதிக்கிறார்கள்.

ஆ. இந்த கடைசி நாட்களில், பணத்தை நேசிப்பவர்கள் அநேகர் இருப்பார்களென்றும், பொருளாதார ஆதாயத்திற்காகப் போதிப்பார்கள் என்றும், தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் பவுல் நமக்குக் கூறுகிறார் (2தீமோத்தேயு 3:2,5). அவர்கள் "தேவ பக்தியின் வேஷத்தை" உடையவர்களாயிருப்பார்கள். ஆனால் பாவத்திலிருந்தும் துன்மார்க்கத்திலிருந்தும் இரட்சிக்கும், தேவனுடைய வல்லமையை மறுதலிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் அவர்களுடைய சபைகளிலும், அவர்களைப் பின்பற்றுகிறவர்கள் மத்தியிலும் துன்மார்க்கத்திற்கு இடங்கொடுப்பார்கள். ஒரு கிறிஸ்தவன் பாவத்தை நடப்பித்தாலும், இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ளுவான் என்று அவர்கள் போதிப்பார்கள். தேவபயம் பற்றி அவர்களுக்குக் கவலை இல்லை.

இ. இயேசு அவருடைய போதனைகளில் செல்வம், ஒரு மனிதனுடைய வாழ்க்கை மற்றும் போதனைகளை தேவன் அங்கீகரிக்கிறார் என்பதற்கு அடையாளமாக இருக்கிறது என்ற எண்ணத்தைத் திட்டவட்டமாக புறக்கணிக்கிறார். உண்மையில், அதற்கு நேர்மாறாக அவர் உபதேசித்தார்.

1. லூக்கா 6:20 "தரித்திரராகிய நீங்கள் (பணம், ஆஸ்தி) பாக்கியவான்கள்.

**பண ஆசை
(1 தீமோத்தேயு 6:6-10)**

2. லூக்கா 16:13 "தேவனுக்கும் உலகப் பொருட்களுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது".

3. லூக்கா 18:24-25 "ஐசுவரியமுள்ளவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பது .... அரிதாயிருக்கிறது".

ஈ. தேவபக்தியும், போதுமென்ற மனதுமே கிறிஸ்தவர்கள் நேசிக்கவேண்டிய இரண்டு காரியங்கள். தேவபக்தி என்றால் பரிசுத்தம், பாவம் மற்றும் கலகம் செய்யும் உலகத்திலிருந்து பிரித்தெடுக்கப்படுவது, தேவனுக்கென்று தனியாகப் பிரித்தெடுக்கப்பட்டவர்களாயிருப்பது, தேவனுக்குக் கனத்தையும் பக்தி அன்பையும் கொடுப்பது. போதுமென்ற மனது என்றால் திருப்தியாக இருப்பது. கிறிஸ்தவர்கள் தேவபக்தியை நாடி, உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றில் அதாவது அவர்களுடைய அடிப்படை தேவைகள் சந்திக்கப்படுவதில் திருப்தியாக இருக்க வேண்டும்!

உ. வசனம் 7. "உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டு போவதுமில்லை" பவுல் இவ்வாறு கூறுகிறார்: வாழ்க்கை குறுகியது, வாழ்நாட்கால பிரயாணம் குறைந்த அளவுள்ளது பணமும், பொருளாதார உடைமைகளும், நாம் நுழையும்போது அல்லது இந்த வாழ்க்கையிலிருந்து வெளியேறும்போது முக்கியமானதல்ல. ஆகவே, உங்களுடைய குறுகிய வாழ்நாள் காலத்தில் அவைகளுக்கு முதன்மையான முக்கியத்துவத்தைக் கொடுக்க வேண்டாம்.

பணமும், பொருளாதார உடைமைகளும் உங்களுடைய நித்திய ஜீவனை தீர்மானிக்காது. ஆனால் தேவபக்தி நிச்சயமாகத் தீர்மானிக்கிறது.

ஊ. உலகத்திலிருந்த மிகுந்த ஐசுவரியவான்கள் அநேகருடைய வாழ்க்கை அழிக்கப்பட்டதை நாம் யாவரும் கண்டிருக்கிறோம். அவ்வாறாகவே அவர்களுடைய பிள்ளைகளின் முடிவையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆகவே தேவனுடைய இராஜ்ஜியத்தையும் அவருடைய நீதியையும் முதலாவதாகத் தேட, நம்முடைய இருதயங்களில் நாம் தீர்மானிப்போமாக. அவ்வாறு நாம் செய்யும்போது, தேவன் நமக்குத் தருவதாக வாக்களித்த உணவு, உடை, உறைவிடம் ஆகியவற்றில் திருப்தியாக இருக்க வேண்டும் (மத்தேயு 6:33). தேவ பக்தி மற்றும் போதுமென்ற மனது ஆகியவற்றிற்கும் பண ஆசைக்கும் இடையே எந்தவித இசைவும் இல்லை. ஆகவே நாம் இவ்வாறு கூறமுடியும். "பண ஆசைக்கும், ஒரு கிறிஸ்தவனாக இருப்பதற்கும் எந்தவிதமான இசைவும் இல்லை".

2. பணஆசை, சோதனையும் கண்ணியுமாய் இருக்கிறது (6:9)

அ. "பண ஆசை" என்றால் பணத்தை இச்சிப்பது; பணத்தின் மீது அன்பு வைப்பது, பணத்திற்கு பேராசைப்படுவது என்று பொருள்படும். ஒரு விக்கிரகத்தைப் போல பணம் வணங்கப்படும் ஒரு பொருளாகிறது. உண்மையில் வேதம் இவ்வாறு கூறுகிறது: "பண ஆசையாகிய விக்கிரக ஆராதனை" (கொலோசெயர் 3:5; எபேசியர் 5:5) செல்வத்தை திரட்டுவது தானே அதன் முடிவாகிறது.

ஆ. "சோதனையும் கண்ணியுமாக" என்றால் பணஆசை, பிசாசின் சோதனையாக இருக்கிறது. இது கிறிஸ்தவர்களைக் கவர்ந்து இழுத்து விழச் செய்ய முயற்சிக்கும் வலையும் கண்ணியுமாக இருக்கிறது என்று பொருள்படும்.

பண ஆசை
(1 தீமோத்தேயு 6:6-10)

நாம் விழிப்புடன் இருக்க வேண்டும் ஏனெனில் சோதனை விரைவில் இச்சையாக மாறிவிடும். இது இவ்வாறு இருக்குமானால், கிறிஸ்தவன் சன்மார்க்க விஷயத்தில் அழிந்து போக ஏதுவுண்டு. அவன் உலக ஆதாயத்தைத் தேடித்திரியும் மிருகம் போல் மாறிவிடுவான். அவன் மறறவர்களைக் குறித்தும் அவனுடைய கிரியைகளின் விளைவைக் குறித்தும் ஒரு சிந்தனையும் இல்லாமல் கொல்லவும், அழிக்கவும் செய்ய முற்படுவான்.

இ. இடமாறிச் செல்லும் மிருகக் கூட்டங்களை விரட்டிச் செல்லும் ஓநாய்கள் மற்றும் காட்டு நாய்களின் கூட்டங்களைப் பற்றிய குறிப்புகள் ஏடுகளில் எழுதிவைக்கப்பட்டவைகளை; நாம் யாவரும் பார்த்திருக்கிறோம். மிருகக் கூட்டங்களில் ஒன்று களைப்படைவது, நொண்டியாகிவிடுவது அல்லது வியாதிப்படுவது ஆகிய இவற்றில் ஒன்று ஏற்படும் வரை அவைகள் அந்த மந்தையை பின் தொடரும். அதன் பின் அந்த மிருகத்தைத் தனிப்படுத்தி, கீழே விழும்படியாகச் செய்து, கொன்று அதைச் சாப்பிட்டு விடும். சாத்தான் எவ்வாறு விசுவாசிகளைத் தனிப்படுத்தி பண ஆசையினால் அவர்களைச் சோதிக்கிறான் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. அவர்கள் ஆவியில் பலவீனமடையும் வரை அவர்களை விரட்டுகிறான். அவர்கள் இந்த உலக இன்பங்கள் மறுக்கப்படுவதினால், சோர்வடைந்திருக்கும்போது, அவர்களுக்கு அவை கிடைக்கக்கூடியதாக இருக்கும்படி செய்கிறான். அப்பொழுது சாத்தான் அவர்களைக் கொன்று தின்று விடுகிறான்.

ஈ. ஒரு விவசாயி, போதகர் வீட்டிற்கு என்னை பார்க்கும்படி வந்த நேரத்தை நான் நினைவு கூறுகிறேன். அவனுடைய ஆடுகளுக்கு, காட்டு நாய்கள் செய்த காரியத்தை நான் பார்க்க அவன் விரும்பினான். அவைகள் ஆடுகளின் பட்டியலுக்குள் நுழைந்துவிட்டது. ஒரு ஆடு பயந்து மந்தையிலிருந்து ஓடும். நாய்கள் அதைத் தாக்கிக் கொன்றுவிடும். ஒவ்வொரு ஆட்டையும் கொன்று அல்லது சாகத்தக்கதாக காயப்படுத்தும் வரை, அவைகள் தொடர்ந்து இம்மாதிரியாகச் செய்யும். விசுவாசிகள் மத்தியிலும் பிசாசானவன், சிறிது மாறாமல் இவ்வண்ணமாகவே, அவர்கள் பண ஆசையிலும் இந்த உலகம் அவர்களுக்குத் தரும் பொருட்கள் மற்றும் சிற்றின்பங்களிலும் விழும்படியான முயற்சியில் ஈடுபடுகிறான்.

உ. ஐசுவரியவானான வாலிபனாகிய தலைவன் ஒருவன், அவனுடைய பண ஆசையினால், வலையில் சிக்கிக் கொண்டான் (லூக்கா 18:18-25). அவன் நித்திய ஜீவனை வாஞ்சித்தான். அவனுடைய வாழ்க்கை முழுவதிலும் தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்தான்! ஆனால் கீழ்க்கண்டவாறு அவனுக்குக் கூறப்பட்ட போது (1) எல்லாவற்றையும் விற்று தரித்திரருக்குக் கொடு (2) அதன்பின் கிறிஸ்துவைப் பின்பற்று, அவன் போய் விட்டான். அவன் செல்வந்தனாயிருந்தான். ஐசுவரியம், அது அவனுக்குக் கொடுக்கும் யாவற்றையும் மற்றும் செல்வாக்கு அது அவனுக்குக் கொண்டுவரும் புகழ் ஆகிய இவைகளில் அவன் வைத்த ஆசை, அவனைக் கண்ணியில் சிக்க வைத்தது!

3. பண ஆசை, எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது (6:10)

அ. ''ஒரு வேர்'' என்பது ஆரம்பம் மற்றும் மூலதார காரணம் எனப்படும். "எல்லாத் தீமைக்கும்'' என்றால் ஒன்றுக்கும் உதவாத தீங்கிழைக்கும் நடத்தை, காயத்தை உண்டாக்கும்

பண ஆசை
(1 தீமோத்தேயு 6:6-10)

நடத்தை, துன்மார்க்கமான, பொல்லாத, கெட்ட நடத்தை என்று பொருள்படும். மிகவும் மோசமான துன்மார்க்க பொல்லாத நடத்தைக்கு பண ஆசையே ஆரம்பமும், மூலாதாரக் காரணமுமாயிருக்கிறது.

ஆ. சில விசுவாசிகளை விசுவாசத்திலிருந்து அலைந்து திரியும் படியாகவும் இது செய்கிறது, வழிவிலகிச் செல்லும்படியாக அவர்கள் வழியைத் தவறவிடும்படியாகவும் செய்கிறது. அவர்கள் சாத்தானுடைய வலிய வஞ்சனையின் பிடியில், உதவியற்ற உயிர்பலி போலாகிறார்கள். இப்பொழுது அவர்கள் பணத்திற்காக மதிபற்றவர்கள்போல் செயல்படுகிறார்கள்.

இ. “அநேக வேதனைகளாலே, தங்களை உருவக் குத்திக் கொண்டிருக்கிறார்கள்”. இது மறைக்கப்பட்ட குழியின் மீது தொங்கும் கண்ணியை நோக்கி தாவிச் செல்லும் ஒரு மிருகத்தின் சித்திரம் போல் இருக்கிறது. அது அந்தக் குழிக்குள் விழுந்து அங்கு நாட்டப்பட்ட கூர்முனைக் கழுமரத்தால் உருவக்குத்தப்படுகிறது. பணத்தை இச்சித்து, அதற்காகப் பேராசைப்படுகிறவர்களுக்கு இவ்வாறு சம்பவிக்கிறது.

ஈ. லோத்தின் மனைவி இவ்வுலகத்தின் காரியங்களை நேசித்தாள் (ஆதியாகமம் 19:16,26). தேவனுடன் இருக்க இனி ஒருபோதும் விரும்பாத அளவிற்கு இந்த உலகத்திற்குத் தன்னை முற்றிலும் ஒப்புக் கொடுத்தவளாக இருந்தாள். சோதோம் பட்டணத்தை அவள் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தபோது அவள் உப்புத் தூணாக மாறினாள்.

ஒரு கிறிஸ்தவனுக்கு பண ஆசை என்ன செய்யக் கூடும் என்பதற்கு இது ஒரு உதாரணம். தேவனிடமிருந்து முற்றிலும் நாம் பிரிக்கப்படுவதற்குரிய வித்தை இது (பண ஆசை) தனக்குள் வைத்திருக்கிறது.

உ. அமெரிக்காவிலுள்ள பலவிதமான துன்மார்க்கத்திற்குப் பண ஆசையே வேராயிருக்கிறது. இது அநேகர் பொய்யர்களாகவும், வஞ்சிக்கிறவர்களாகவும், ஏமாற்றுகிறவர்களாகவும் மாறக் காரணமாயிருக்கிறது. இக்காரணத்தினால், வேலையாட்களின் அநேக நாட்களின் கூலியை, அநேக தொழிற்சாலை அதிபர்களும், வியாபாரத் தலைவர்களும் கொடுக்காமல் பிடித்து வைத்திருக்கின்றனர்! இந்தப் பாவம் அமெரிக்காவை மேற்கொண்டிருக்கிறது. இது சீனாவிலும், பழைய ரஷ்ய சாம்ராஜ்ஜியத்திலும் கூட தீவிரமாயிருக்கிறது. இது நம்முடைய மீதமான சந்ததிகளிடமும் கடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

முடிவுரை

அ. தேவ பக்தி மற்றும் போதுமென்ற மனதுடனே கிறிஸ்தவனாயிருப்பதற்கும், பண ஆசைக்கும் எந்த விதமான சம்பந்தமுமில்லை. இது சோதனை மற்றும் சாத்தானுடைய கண்ணியுமாயிருக்கிறது. அத்துடன் எல்லாவித துன்மார்க்கத்திற்கும் விசுவாசத்திலிருந்து விழுந்து போவதற்குக் கூட இது வேராயிருக்கிறது!

ஆ. பண ஆசையின் சோதனைக்குத் தங்களை ஒப்புக் கொடுத்தவர்கள்; சாத்தானால் வசீகரிக்கப்பட்டு அவனுடைய வலையில் விழுந்து இந்தப் பாவத்தைச் செய்தவர்கள் மனஸ்தாபப்பட்டு முற்றிலும் மனந்திரும்ப வேண்டும். பணம் வைத்திருப்பது குறித்து எல்லாம் சரிதான்.

பண ஆசை
(1 தீமோத்தேயு 6:6-10)

ஆனால் பணத்தை இச்சிப்பதும், ஒரு விக்கிரகத்தை வணங்குவது போல் பணத்தை வணங்குவதும் எல்லாம் சரியாக இருக்க மாட்டாது. கிறிஸ்துவுக்கும் அவருடைய வார்த்தை மற்றும் சுவிசேஷம் ஆகியவற்றிற்கு முன்னதாக வைப்பதும், கிறிஸ்து அவருடைய வார்த்தை மற்றும் நீதி ஆகியவைகளைத் தேடிச் செல்வதற்கு பதிலாக அதைத் (பணத்தை) தேடிச் செல்வதும் எல்லாம் சரியாக இருக்க முடியாது.

செல்வந்தரான விசுவாசிகள்

(1 தீமோத்தேயு 6:17-19)

முன்னுரை

அ. இந்த மூன்று வசனங்களும் நம்முடைய மத்தியிலிருக்கும் செல்வந்தர்களுக்காக சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. மற்ற விசுவாசிகளுக்கு மேலாகத் தாங்களே தாங்களை உயர்த்தவும், பெருமை மற்றும் கர்வம் உள்ளவர்களாகவும் மாறும் தன்மை அவர்களுக்கு உண்டு. ஆகவே, அவர்களுடைய ஐசுவரியம் நிலையற்றது என்று பவுல் அவர்களை எச்சரிக்கிறார். கர்த்தர் தாமே நிச்சயமாக இருக்கக் கூடிய ஒருவர் என்பதையும் அவர் அவர்களுக்கு ஞாபகப்படுத்துகிறார். ஆகவே, அவர்களுடைய செல்வத்தில் நம்பிக்கை வைப்பதற்குப் பதிலாக தேவன்பேரில் நம்பிக்கை வைப்பது அவர்களுக்கு மேலானதாக இருக்கும்.

ஆ. தேவன் அவர்களுக்குக் கொடுத்த மிகுந்த செல்வத்தைக் கொண்டு மற்ற விசுவாசிகளுக்கு நற்கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று செல்வந்தர்களைப் பவுல் உற்சாகப்படுத்துகிறார். இவ்வாறு செய்யும் போது அவர்கள் பரலோகத்தில் பொக்கிஷங்களை அவர்களுக்காகச் சேர்த்து வைக்கின்றனர். இது அவர்கள் நிற்பதற்கு உறுதியான அஸ்திபாரத்தைத் தருவதோடு நித்திய ஜீவனாகிய பலனை அவர்கள் பெற்றுக் கொள்ளவும் உதவி செய்யும்.

1. செல்வந்தரான விசுவாசிகள் அவர்களுடைய நம்பிக்கையை தேவனில் வைக்க வேண்டும் (6:17)

அ. "இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள்.. கட்டளையிடு". இன்று உலகத்திலுள்ள அநேக பட்டணங்களில் இருப்பது போலவே, செல்வம் நிறைந்த பட்டணமாகிய எபேசுவில் பணம் மிகுந்த சில கிறிஸ்தவர்கள் இருந்தனர். "கட்டளையிடு" என்றால் செய்தியை அனுப்ப, பின்பற்ற வேண்டிய சில விதிகளை வெளியிடு என்று பொருள்படும். இந்த உலகத்தில் பணம் பெருத்தவர்களுக்கு எந்த ஒருவரிடமிருந்தும் கட்டளைகளை ஏற்றுக் கொள்வது கடினமானதொரு நேரமாக இருக்கிறது. சபையின் போதகர் மற்றும் அதிகாரிகள் அவர்கள் தங்கள் காரியங்களைப் பார்த்துக் கொண்டு தனித்து இருக்கட்டும் என்று நினைக்கின்றனர். இது ஒரு இளம் சுவிசேஷ ஊழியர் போதகருக்குக் கடினமான ஒரு வேலையாக இருக்கிறது.

ஆ. "இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள்" இவர்கள் மிகுதியான செல்வமுடையவர்கள், மிகுந்த ஐசுவரியத்தைப் பெற்றிருப்பவர்கள். சரியாகக் கூறுவோமானால், அவர்களுடைய பொருளாதாரம் மற்றும் சரீரத் தேவைகளைச் சந்திப்பதற்குத் தேவையானதிற்கும் அதிகமான செல்வத்தை அவர்கள் பெற்றிருந்தனர்.

இ. "இறுமாப்புள்ள சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கை வைக்காமலும்....". இவ்வுலகத்திலுள்ள கிறிஸ்து இல்லாத பெரும்பாலானவர்களைப் போல, தங்களைக் குறித்த உயர்வான எண்ணத்தோடும், பெருமையாகவும் கர்வத்தோடும் எபேசுவிலுள்ள செல்வந்தர்களான விசுவாசிகள் இருக்கக் கூடாது என்று தீமோத்தேயு கட்டளையிடவேண்டும். "அழிவுக்கு முன்னானது அகந்தை" என்பதையும், அவன் அவர்களுக்குச் சந்தேகமின்றி ஞாபகப்படுத்தவேண்டும் (நீதிமொழிகள் 16:18; 8:13; 11:2; 29:23; ஏசாயா 25:11).

செல்வந்தரான விசுவாசிகள்

(1 தீமோத்தேயு 6:17-19)

ஈ. "நிலையற்ற ஐசுவரியத்தின்மேல் அவர்கள் நம்பிக்கையை வைக்கக் கூடாது". செல்வத்தின் மீதும், அது அவர்களுக்குச் செய்யக் கூடியவைகளின் மீதும் சார்ந்திராமல் பாவத்திலிருந்தும் கிறிஸ்துவுக்கு வெளியே இருப்பவர்கள் மீது வரும் தேவ கோபாக்கினையிலிருந்தும் இரட்சிக்க வல்லவரில் மட்டும் நம்பிக்கை வைக்க வேண்டும் (எபேசியர் 2:8-9; ரோமர் 3:23-24).

உ. எல்லாவற்றிற்கும் மேலாக, ஐசுவரியம், நிலையற்றத் தன்மையோடு எப்போதும் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. ஒரு மனிதனுடைய செல்வம், சீக்கிரத்தில் செட்டைகளை எடுத்துக் கொண்டு பறந்து மறைந்துவிடுகிறது. இன்று நாம் வாழும் உலகத்தில் ஒரு இரவுக்குள் மிகுந்த செல்வம் தோன்றி மறைந்துவிடுகிறது! நீதிமொழிகளின் ஆசிரியர் இவ்வாறு கூறுகிறார்: "இல்லாமற்போகும் பொருள்மேல் உன் கண்களைப் பறக்கவிடுவானேன்? அது கழுகைப் போல, சிறகுகளைத் தனக்கு உண்டு பண்ணிக் கொண்டு, ஆகாய மார்க்கமாய்ப் பறந்து போம்" (நீதிமொழிகள் 23:5; மற்றும் மத்தேயு 6:19)

ஊ. "நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும், நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும்....". ஆனால் தேவன் குறித்து எந்தவிதமான நிலையற்ற தன்மையும் இல்லை. "அவரில் நம்பிக்கை வைப்பவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டு போவதில்லை" (ஏசாயா 28:16; மற்றும் யாக்கோபு 1:17).

எ. "சகலவித நன்மைகள்" என்றால் நமக்கு நன்மைதரும் எல்லா காரியங்கள் என்று பொருள்படும். நாம் அதனோடு சம்பந்தப்பட்ட காரிங்களின் செல்வாக்கினால் மகிழ்ந்து களிகூரத்தக்கதாக தேவன் நமக்கு எல்லா நல்ல காரியங்களையும் சம்பூரணமாய் தருகிறார். தேவன் சிருஷ்டித்தவைகள் எல்லாம் நல்லவைகளும், நம்முடைய மகிழ்ச்சிக்கும் நன்மைக்கும் ஏதுவாக இருக்கும் நோக்கத்துடனும் உண்டாக்கப்பட்டன (1தீமோத்தேயு 4:4; மற்றும் ஆதியாகமம் 1:1, 10, 12, 18, 21, 25, 31).

ஏ. பவுலுடைய நாட்களில் இருந்த மாய உலக ஞானிகள் மற்றும் கள்ளப்போதகர்களைப்போல, கீழ்படுத்த நம்மை நாமே அடித்துக் கொண்டும், நமக்கு வேண்டியவைகள் என்றும், நாம் மகிழ்ச்சியுடன் அனுபவிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தேவன் சிருஷ்டித்த வாழ்க்கையின் அவசியமானவைகளான இன்பங்களை நாமே தவிர்த்துக் கொண்டு நாம் ஜீவிக்கக் கூடாது (1தீமோத்தேயு 4:1-3).

2. செல்வந்தர்களான விசுவாசிகள், நற்கிரியைகளில் செல்வந்தர்களாக இருக்க வேண்டும் (6:18)

அ. "நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும்...கட்டளையிடு....". "கட்டளையிடு" என்றால் வசனம் 17 உள்ளது போல் பொருள்படும். ஒரு செய்தியைக் கடத்துவது, பின்பற்ற வேண்டிய விதிகளைக் கொடுப்பது.

ஆ. "நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும்" என்றால் வேலைசெய்ய வேண்டும், நற்கிரியைகளைச் செய்ய கஷ்டப்பட்டு உழைக்க வேண்டும். மற்றவர்களுக்கு விலைபெறப் பெற்றதாகவும், பயனுள்ளதும், அவர்களுடைய நன்மைக்கு ஏதுவானவைகளுமான (சன்மார்க்க மற்றும் ஆவிக்குரிய) கிரியைகளைச் செய்ய வேண்டும் என்று பொருள்படும்.

செல்வந்தரான விசுவாசிகள் (1 தீமோத்தேயு 6:17-19)

இ. "தாராளமாய்க் கொடுக்கிறவர்களும் உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும்" என்றால் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுப்பதில் நன்றாகச் செய்யவும், கொடுக்கும் போது தாராளமாக இருக்கவும் வேண்டும் என்று பொருள்படும்.

ஈ. ஆகவே கிறிஸ்தவ சமுதாயத்தில் செல்வந்தர்களாக இருப்பது என்பது மற்றவர்களுக்காக வேலை செய்ய வேண்டும் என்ற உத்திரவாதத்தையும் உடையதாக இருக்கிறது. அத்துடன் நம் மத்தியில் பணத்தில் குறையுள்ளவர்களுக்கும்,தேவையுள்ளவர்களுக்கும், தேவனுடைய ஆசீர்வாதத்தைதாராளமாகப் பகிர்ந்து கொடுக்கிறவர்களாகவும் இருக்க வேண்டும்.

உ. சபையின் ஆரம்ப காலத்திலிருந்து இதுவே முறையாக இருந்தது (அப்போஸ்தலர் 2:44-45; 4:32, 34-35; மற்றும் 2கொரிந்தியர் 8:1-15; 9:6-15). இன்று இக்காரியங்களைச் செய்கிறவர்களுக்கு செய்வது போலவே அக்காலத்தில் இருந்த செல்வந்தர்களுக்கும் இது மிகுந்த மகிழ்ச்சியைக் கொண்டு வந்திருக்கும் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன்!

3. செல்வந்தரான விசுவாசிகள் தங்களுக்காகப் பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும் (6:19)

அ. "தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும்....". "ஆதாரத்தை" என்றால் செல்வத்தில் மிகவும் குறைவாயுள்ளவர்களுக்கு, ஐசுவரியவான்கள் அவர்களுடைய ஆசீர்வாதங்களைத் தாராளமாகப் பகிர்ந்து கொடுத்து, அவர்களுக்கு உதவியாக வேலை செய்வதை இது குறிக்கும்.

ஆ. "தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும்". இது சந்தேகமின்றி, இயேசுவின் ஒரு போதனையைக் குறிக்கிறது. மலைப் பிரசங்கத்தில் இயேசு இவ்வாறு கூறினார்: "பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை. அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு 6:20-21).

இ. "வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தை......". செல்வந்தர்கள் மற்றவர்களுக்குத் தாராளமாகக் கொடுப்பதின் மூலமாக, நிலைத்து நிற்பதற்கு ஒரு திடமான அஸ்திபாரத்தை நிலை நாட்டுகிறார்கள். அவர்கள் அவர்களுடைய விசுவாசத்தில் உறுதியாக நிலைநாட்டப்பட்டு, மோட்ச லோகத்தில் பிதாவாகிய தேவன் மற்றும் கிறிஸ்துவுடன் நித்திய ஜீவனைப் பெற மரித்தோரிலிருந்து உயிர்ப்பிக்கப்படுவார்கள் என்ற அவர்களுடைய நம்பிக்கையில் அசைக்கப்படாதிருப்பார்கள்.

ஈ. "வருங்காலத்திற்காக" வருங்காலத்தில் என்ன எதிர்பார்க்கப்படுகிறது, என்ன நடக்கப்போகிறது, என்பதைக் குறிப்பிடுகிறது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையோடு தோன்றப் போகிற நாளிலிருந்து ஒரு கிறிஸ்தவனுக்கு இது ஆரம்பமாகும் (தீத்து 2:13).

உ. "நித்திய ஜீவனைப் பற்றிக் கொள்ளும்படி....". நம்முடைய தற்கால வாழ்க்கை விரைவில் கடந்து போகிறதும் தற்காலி கமானதுமாயிருக்கிறது. "நித்திய ஜீவன், இது ஒருபோதும் முடிவுபெறாத வாழ்க்கை, உண்மையான வாழ்க்கையைக் குறிக்கும்". நம் மத்தியிலுள்ள செல்வந்தர்கள் அவர்களுடைய ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்குத் தாராளமாகக் கொடுப்பதின் மூலமாக இந்த ஜீவனைப் பற்றிப் பிடித்துக் கொள்ளலாம் (கைப்பற்றிக் கொள்ளலாம், பிடித்துக் கொள்ளலாம்).

செல்வந்தரான விசுவாசிகள்

(1 தீமோத்தேயு 6:17-19)

அவர்கள் நம் எல்லோரையும் போல விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறார்கள். ஆகவே தாராளமாக மற்றவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கும் அவர்களுடைய வேலை உறுதியான அஸ்திபாரத்தின்மேல் அவர்களைக் காத்துக் கொள்ளும்.

முடிவுரை

அ. எபேசுவிலுள்ள சபை சம்பந்தமான காரியங்களுக்கு ஏற்ற பொருத்தமான கருத்துக்களடங்கிய போதனைகளைப் பவுல் தீமோத்தேயுவுக்கு இந்த நிருபத்தில் எழுதினார். ஆகிலும் பவுலுடைய அநேக அறிவுரைகள், ஒவ்வொரு தலைமுறையிலுள்ள ஒவ்வொரு சபைக்கும் பொருத்தமாக இருப்பதை நாம் காண்கிறோம்.

ஆ. எபேசு சபையில் அவர்கள் மத்தியில் இருந்ததுபோலவே, இன்றும் நம் மத்தியில் நம்மிடம் செல்வந்தர்கள் இருக்கிறார்கள். ஆகவே சுவிசேஷ போதகர்கள், கீழ்க்கண்டவற்றை தொடர்ந்து செல்வந்தர்களுக்குக் கட்டளையிட வேண்டும்.

1. அவர்களுடைய விசுவாசத்தை, ஐசுவரியத்தின் மீது அல்ல, தேவனில் வைக்க வேண்டும்.

2. மற்றவர்களுக்கு நற்கிரியைகளைச் செய்ய வேண்டும் மற்றும் நம்மில் பண வசதி குறைந்தவர்களுக்கு அவர்களுடைய செல்வத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

3. அவர்களுடைய பொக்கிஷத்தை பரலோகத்தில் சேர்த்து வைக்க வேண்டும். அங்கே பூச்சியும் துருவும் கெடுக்காது, திருடரும் கன்னமிட்டுத் திருட முடியாது.

இ. இந்த அறிவுரைகளை பின்பற்றுவதின் மூலமாக ஐசுவரியத்தோடு பெரும்பாலும் காணப்படும் பெருமை மற்றும் கர்வம் கொள்வதிலிருந்து தவிர்க்கப்படக் கூடும். அவர்கள் நிற்பதற்கு விசுவாசமாகிய அசைக்க முடியாத அஸ்திபாரத்தைப் போட்டு, உண்மையான வாழ்வாகிய நித்தியஜீவனையும் பற்றிப் பிடித்துக் கொள்ள முடியும்.